பக்கங்கள்-16 வைகாசி,24.2015 விலை-30.00




நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -122

## வித்தியாவின் சாவில் ஆசனமிட்டு அமர ஆசைப்படும் அரசியல்வாதிகள்

## மைத்திரியின் நல்லாட்சியும், த.தே.கூட்டமைப்பின் அணுகுமுறையும்

## சூடு பிடித்திருக்கும் தேர்தல் களம் - 2015





# மைத்திரியின் நல்லாட்சியும் த.தே.கூட்டமைப்பின் அணுகுமுறையும்



எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலைநோக்கி அனைத்துக் கட்சிகளும் தீவிரம் காட்டிவரும் நேரத்தில் த.தே.கூட்டமைப்பினுடைய அணுகுமுறைகள் என்பது இந்த அரசாங்கத்தின் நல்லாட்சியில் தங்கியிருப்பதாக பலரும் கருதுகிறார்கள். யுத்தத்தினால் சாதிக்கமுடியாத ஒருசிலவற்றை அரசியல் தந்திரோபாயத்தினால் மேற்கொள்ளும் நடவடிக்கையாகவே த.தே.கூட்டமைப்பு இதனைக்கையாள முற்படுகிறது. காலத்தின்தேவைகருதி மஹிந்த அல்லது மைத்திரி அரசிலும் அரசியல் காய்நகர்த்தல்களை தேசிய சர்வதேச ரீதியில் நகர்த்தவேண்டிய சூழ்நிலை இந்த த.தே.கூட்டமைப்பிற்கு ஏற்பட்டுள்ளது.

இன்று த.தே.கூட்டமைப்பல்லாத கட்சிகள், த.தே.கூட்டமைப்பிலிருக்கும் ஒருசிலர் த.தே.கூட்டமைப்பு அரசுடன் இணக்கப்பாட்டு அரசியலில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டுகின்றனர். குறிப்பாக த.தே.கூட்டமைப்பிலிருந்து பிரிந்துசென்ற அல்லது விலக்கப்பட்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி த.தே.கூட்டமைப்பையும், அதன் தலைமைத்துவத்தினையும் கடுமையாக விமர்ச்சித்துவருகின்றது. தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடுகளை விடுத்து ஒற்றையாட்சிக்குள் ஒருநிரந்தர தீர்வு என்று செயற்படுவதாகவும், அரசுடன் இணைந்து செயற்படுவதாகவும் ஊடகவியலாளர் மாநாடுகளிலும் இவர்களால் கூறப்பட்டது. சர்வதேச சட்ட விதிமுறைகளுக்கமைய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நகர்வுகளை செயற்படுத்தவேண்டிய தேவை தற்பொழுது ஏற்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் தன்னிச்சையான தீர்மானங்களை த.தே.கூட்டமைப்பு அல்லது தமிழரசுக்கட்சி மேற்கொள்ள இயலாத சூழ்நிலை காணப்பட்டது.

இன்று ஆயுதப்போராட்டத்தினை விடவும் அஹிம்சை வழியில் வந்தவர்களையே சர்வதேசம் விரும்பி ஏற்றுக்கொள்கின்றது. ஆயுத வழியாக வந்த கட்சிகளை சர்வதேசம் ஒரு எதிரியாக பார்க்கின்றது. முப்படைகளையும் கொண்டிருந்த விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கும் செயற்பாடுகளில் சர்வதேசம் தீவிரம் காட்டியமையின் காரணமும் அதுவேயாகும். சர்வதேச ரீதியில் ஒருநாடு பிராந்திய வல்லரசாக மாறிவிட்டால் அவர்களுக்கு சவாலாக அமைந்துவிடும்என்கின்றகாரணத்தினால் தம்மைவிட முப்படைகளிலும் அல்லது பொருளாதாரத்திலும் முன்னோக்கி வருபவர்களை ஒருபோதும் விடுவதில்லை.

இலங்கைப்பிரச்சினையை சர்வதேச நாடுகள் தலையிட்டு எப்போதோ முடித்திருக்கவேண்டும். காலம்நீடித்ததன் காரணம் இலங்கைத்தீவினுள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் சர்வதேச நாடுகளுக்கு சவாலாக அல்லது அச்சுறுத்தும் வகையில் படை நடவடிக்கைகள், இராணுவக் கட்டமைப்புக்கள், நீதி நிர்வாகங்கள் என்பன சீராக தொழிற்பட்டமையால் பெரும்நெருக்கடியினை சர்வதேசநாடுகள் சந்தித்தனர். கெரில்லாப்போர்முறையை தொடர்ந்தும் மேற்கொண்டிருந்தால் இன்றுவரையில் விடுதலைப்புலிகளின் தலைமைகள் இருக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆகவேதான் அஹிம்சைப்போராட்டத்தின் மூலமாக தமிழ்மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்கவேண்டிய நிலை த.தே.கூட்டமைப்பிற்கு உருவாகியுள்ளது. அஹிம்சைப்போராட்டத்தின் மறு வடிவம் ஆயுதப்போராட்டம் என்றும் ஆயுதப்போராட்டத்தின் மறுவடிவம் அஹிம்சைப்போராட்டம் என்றும் மாற்றம்பெறுகின்றது. குறிப்பாக சர்வதேச நாடொன்று விடுதலைப்புலிகளின் போராட்டத்திற்கு ஆரம்பத்தில் இருந்தே உதவி ஒத்தாசைகளை வழங்கியிருந்தது. அப்போது விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் முன்னேற்றம் பெறவில்லை. கிடப்பில் இருந்த தமிழரசுக்கட்சி விடுதலைப்புலிகளின் பேராதரவுடன் த.தே.கூட்டமைப்பு, ரெலோ, புளொட், தமிழர் விடுதலைக்கூட்டணி என்ற நான்கு கட்சிகளும் இணைந்து கூட்டமைப்பாக செயற்பட விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனால் கட்டளையிடப்பட்டது. அதன் காரணத்தினாலே இன்றுவரை தமிழ்மக்கள் ஆயுதக்கட்சிகள் என்று பாராது, தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட கட்சி என்பதாலும், எந்த அரசிற்கும் விலைபோகாத தலைவர் என்பதாலும், அவரது இலட்சியம் தனிநாடு என்று இறுதிவரை போர்க்களத்தில் நின்றமையாலும் மக்களால் இன்றும் போற்றப்படுகின்றார். அவர் வந்த வழியாக உருவாகிய தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக செயற்படுகின்றது.

இன்று ஆயுதப்போராட்டம் மாற்றம் பெற்றிருக்கின்றது. ஆனால் இலட்சியம் மாறவில்லை. 30வருடகால போராட்டம் தமிழ் இனத்திற்கு பெரும் இழப்பை ஏற்படுத்திக்கொடுத்தது என்று கூறினாலும், இன்று சர்வதேசம் தலைநிமிர்ந்துபார்க்குமளவிற்கு தமிழ் மக்களின் புகழ் உயர்த்தப்பட்டுள்ளது. போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர் தரப்பில் பாராளுமன்றில் குரல்கொடுப்பதற்கு பிரபாகரனால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு இருக்கின்றது.

100நாள் வேலைத்திட்டம் என்கின்ற கருப்பொருளில் ஜனாதிபதித்தேர்தலில் களமிறங்கிய மைத்திரிபால சிறிசேன அவர்கள், மஹிந்தவின் ஆட்சியைக்கவிழ்த்து அதில் வெற்றியும் பெற்றார். ஒருகட்டத்தில் மஹிந்த அல்லது மைத்திரியை ஆதரிப்பதா? என்கின்ற கேள்வி த.தே.கூட்டமைப்பு மற்றும் தமிழ் மக்கள் மத்தியில் இருந்தது. இதற்கு விடை காண த.தே.கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்தியாவை அணுகினார். 1987களிலிருந்து இன்றுவரையும் இந்தியாவை எதிர்த்து தமிழ்மக்கள் அரசியல் செய்ய இயலாத சூழ்நிலை உருவாகியுள்ளது. விடுதலைப்புலிகள் உட்பட நான்கு இயக்கங்களை உரமூட்டி வளர்த்த இந்தியாவே மீண்டும் இவ்வியக்கங்களை அழித்தொழிக்க துணிந்தது. இதன் காரணத்தினால் அந்த நாட்டின் அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தியையும் இழக்கநேரிட்டது. தற்போதைய காலகட்டத்தில் த.தே.கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தீவிரப்போக்கினை கடைப்பிடிக்கவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

மஹிந்தவின் அரசை உரிய முறையில் அணுகத்தவறிய தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, மைத்திரி அரசினை உரிய முறையில் அணுகிவருகிறோம் எனக்கூறுகின்றார்கள். இது எந்தவகையில் உண்மை என்பது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலுள்ள தமிழரசுக்கட்சியினருக்கே தெரியும். ஏனையவர்களுக்குத் தெரியாது. இவ்விடயம் தொடர்பாக த.தே.கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளிடம் வினவினால் சம்பந்தன் அல்லது மாவை சேனாதிராஜாவிடம் கேளுங்கள். இதனை எம்மிடம் கேட்காதீர்கள் என்கிறார்கள். இவ்வாறான நிலைமைகள் தோன்றுவதற்கு காரணங்களாக இந்த ஆயுதக்கட்சிகளே அமைகின்றன.



அஹிம்சைப்போராட்டத்தினால் எதனையும் சாதித்துவிடமுடியும் என்ற கோட்பாடுகளுடன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனது அணுகுமுறைகள் மைத்திரி அரசுடன் செல்கின்றதே தவிர, தமிழ் மக்களை விற்றுப்பிழைக்கும் தேவை அவருக்கு இல்லை. எனினும் அரசியலில் சாணக்கியம் பெற்றிருக்கும் அதே நேரம் மஹிந்தவினால் தமிழினத்திற்கு எதிராக யுத்தம் முன்னெடுக்கப்பட்டபோது முள்ளிவாய்க்காலில் பொதுமக்கள் இறந்துகொண்டிருந்தபோது அதனை தட்டிக்கேட்கவில்லை. இவ்வாறான பல குற்றச்சாட்டுக்கள் த.தே.கூட்டமைப்பின் மீது முன்வைக்கப்படுகின்றது. யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருக்கும்போது 22 பாராளுமன்ற ஆசனங்கள் என்னும்நிலை இருந்தபோதுங்கூட, முள்ளிவாய்க்காலில் கொல்லப்படுகின்ற பொதுமக்களுக்காக அடையாள உண்ணாவிரதம் கூட இவர்களால் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் தமிழகத்தில் கலைஞர் கருணாநிதியின் தலைமையில் தமிழ் இளைஞர்கள், உறவுகள் தமது ஆதரவினைத் தெரிவித்திருந்தனர். இந்தியாவிலுள்ளவர்களே அவ்வாறு தியாகங்களைச்செய்கின்றபோது இங்கு பாராளுமன்ற கதிரைகளை விடுத்து, ஏன் இவ்வாறான அணுகுமுறைகளை ஏற்படுத்தவில்லை என்பதும் மக்கள் மனதில் கேள்வியாகவே உள்ளது. இவர்கள் சரிவரச்செயற்பட்டிருந்தால் இத்தனை பொதுமக்களின் அழிவு நிறுத்தப்பட்டிருக்குமல்லவா?. அறவழி மற்றும் அஹிம்சை ரீதியிலான போராட்டங்களை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு முன்னெடுத்துவருகின்றது. ஆனால் இருக்கக்கூடிய ஆயுதக்கட்சிகளின் கருத்துக்களை தமிழரசுக்கட்சி செவிமடுத்தாலும் கூட அதனை செயற்படுத்துவதில்லை. அதனை தாமதப்படுத்துகின்றது. இதனால் இக்கட்சிகள் சலிப்படைந்து, மெல்லவும் விழுங்கவும் இயலாமல் இருக்கின்றனர் எனலாம்.

கட்சியில் உள்ள ஒருசிலர் உரத்துக்குரல்கொடுத்தாலும் அது துரோகி என்று ஒரேசொல்லில் எழுதப்படுகின்றது. மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளை மேற்கொள்ள காலங்கள் கிடைக்கவில்லை என தற்பொழுது த.தே.கூட்டமைப்பிலுள்ள சிரேஷ்ட தலைவர்கள் கூறிவருகின்றனர். ஆகவே மைத்திரியினது நல்லாட்சியில் தமிழ்மக்களது அரசியலை கொண்டுசெல்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் இதனை உரிய முறையில் பயன்படுத்தவேண்டும் எனவும் சம்பந்தன் கூறிவருகின்றார். இந்த புதிய அரசுடனான அணுகுமுறையை எவ்வாறு கையாளவேண்டும் என இந்தியா தெட்டத்தெளிவாக சம்பந்தன் அவர்களிடம் கூறியுள்ளது. கடந்த காலங்களிலும் இந்தியாவினது நயவஞ்சக பேச்சுக்களை நம்பி ஏமாற்றமடைந்தாலும் கூட, அஹிம்சை போராட்டங்களுக்கு இந்தியா என்றும் உறுதுணையாக இருக்கும் என சம்பந்தன் அவர்கள் இன்னமும் நம்புகின்றார். தவறுகளை தொடர்ந்தும் சுட்டிக்காட்டிக்கொண்டுசெல்லாது ஒரு குடையின் கீழ் தமிழினம் இணைந்துசெயற்படவேண்டிய காலம் உருவாகியுள்ளது. இந்த அரசினது இராஜதந்திர நடவடிக்கைகள் எவ்வாறெல்லாம் செல்லப்போகின்றது என நடைபெறவிருக்கும் பாராளுமன்றத்தேர்தலின் பின்னர் தெரியவரும். அன்று த.தே.கூட்டமைப்பு வாய்திறந்து பேசமுடியாத நிலை ஏற்பட்டது. இன்று அவ்வாறில்லை. நல்லாட்சி நன்றாகவே இருக்கிறது என்று கூறும் த.தே.கூட்டமைப்பு இவர்களது ஆட்சியில் தவறுகளையும் சுட்டிக்காட்டத்தவறவில்லை. வடகிழக்கு மாகாணசபைகள் இரண்டும் அரசுடன் இணைந்து தமிழ்மக்களுக்கான அபிவிருத்தி முன்னேற்றங்களில் தீவிரம் காட்டி வருகின்றது. என்றுமில்லாதவாறு வடமாகாணசபையின் செயற்பாடுகள் நடைபெற்றுவருகின்றது. பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் எனக்கூறுகின்றபொழுது இதனை ஆட்சியில் அமரும் எந்தவொரு அரசும் தமிழ்மக்களுக்கு வழங்கப்போவதில்லை.

தமிழினத்தை அடிமையாக செயற்படுத்தும்திட்டங்களையேமுந்தைய அரசாங்கங்கள் செய்துவந்தது. ஆனால் மைத்திரியின் அரசு பிரச்சினைகளை சுமுகமாக கலந்துரையாடித்தீர்ப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தியுள்ளது. ஆகவேதான் நாம் ராஜதந்திர அணுகுமுறைகளை மேற்கொண்டுவருகின்றோம் என த.தே.கூட்டமைப்பு மார்தட்டிக் கூறுகின்றது. புலம்பெயர் சமூகத்தினரும் கூட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்றார்கள். ஒருசிலர் மாத்திரமே அதனை ஏற்கமுடியாது என விமர்சனங்களைக் கூறிவருகின்றார்கள். தமிழினத்தின் விடுதலைபற்றிய கருத்துக்களை காலத்தின் செயற்பாடுகள் கருதி அடக்கி செயற்படவேண்டிய நிலை தமக்கு உருவாகியிருப்பதாகவும் த.தே.கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர். ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ்மக்களுக்கான தீர்வினை பெற்றுத்தருவதற்கு இலங்கையரசு முன்வரவில்லை. யுத்தத்திலும், தமிழினத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கையிலும் தீவிரம் காட்டியதே தவிர, தமிழ் மக்களது நலனில் அக்கறை காட்டவில்லை. ஆனால் மைத்திரியின் அரசாங்கத்தில் தமிழ்மக்களின் விடுதலைக்கான சமிக்ஞைகள் ஓரளவு தென்பட்டுவருகின்றன.

08ஆம் பக்கம் பார்க்க...

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தமிழரசுக்கட்சியின் நற்பெயரை களங்கப்படுத்த அரசியற்கட்சிகள் முயற்சி

இலங்கையில் தமிழினப்படுகொலைகள் பல்வேறு வடிவங்களில் இடம்பெற்று முடிந்துவிட்ட நிலையில், மீண்டும் செம்மணியில் இடம்பெற்ற கிருசாந்தியின் படுகொலையின் பாணியில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கூட்டு வன்புணர்வுக்கொலை தற்பொழுது அரசியல்மயமாக்கப்பட்டுள்ளது. வெறுமனே ஆதாரபூர்வமற்ற செய்திகளை வெளியிடுவதன் ஊடாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்கும், தமிழரசுக்கட்சியின் நன்மதிப்பிற்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் வித்தியாவின் படுகொலையினை வைத்து அரசியற்கட்சிகள் செயற்படுகின்றன. குறிப்பாக ஐக்கிய தேசியக்கட்சி, ஈ.பி.டி.பி, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி போன்ற கட்சிகள் உன்னிப்பாக செயற்படுகின்றன. வெவ்வேறான கோணங்களில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை இணைவுபடுத்தி வெவ்வேறான செய்திகள் பிரசுரமாகின்றன.

இவ்வாறு செயற்படுகின்ற ஊடகங்கள் ஒரு விடயத்தினை புரிந்துகொள்ளவேண்டும். இது தமிழர்தாயக மண்ணில் இடம்பெற்ற ஒரு சம்பவம். தமிழரசுக்கட்சியின் ஒரு தூணாக விளங்கும் சட்டத்தரணி தமிழ்மாறனை நடைபெறவிருக்கும் பாராளுமன்றத்தேர்தலில் களமிறக்க த.தே.கூட்டமைப்பு முன்வந்துள்ள நிலையில், அவ்வாறு அவர் போட்டியிட்டால் அதில் வெற்றிபெற்றுவிடுவார் என்ற ஐயப்பாட்டின் காரணமாக இவரது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் இச்சம்பவம் மெருகூட்டப்பட்டிருக்கலாம். சட்டத்தரணி, வித்தியாவின் கொலையில் தொடர்புபட்டிருந்திருந்தால் நிச்சயமாக அவர் தண்டிக்கப்படவேண்டியவர்தான். ஒரு சட்டத்தரணியின் தொழிலைப்பற்றி பாமர மக்களுக்கும் நன்கு தெரியும். பொய்களை உண்மையாக்கி, உண்மைகளை பொய்யாக்குவது இவர்களது தொழில் தர்மம்.

இன்று வெலிக்கடை, போகம்பர, மஹர, பல்லேகல போன்ற சிறைச்சாலைகளில் பாலியல் வன்புணர்வுகள் செய்யப்பட்டு கொலைசெய்த குற்றவாளிகள் இன்னமும் அங்கு இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தண்டனை வழங்கப்பட்டும் மீள் விசாரணைக்காக சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றத்தில் வாதாடி வருகின்றார்கள். குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் விடுதலையாவதற்கு ஏதுவான நிலைகளும் இருக்கின்றன. இன்று வித்தியாவினது கொலையில் தொடர்புபடுபவர்களுக்கு உரிய முறையில் தீர்ப்பளிக்கவேண்டும். இங்கே இந்தியாவைப்போல பஞ்சாயத்துமல்ல.

இக்கொலைச்சம்பவத்தினை எதிர்த்து ஒன்றுதிரண்ட மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டும் சிலர் வன்முறைச் சம்பவங்களை மேற்கொண்டமையினால் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டும் இருக்கின்றனர். இதுதொடர்பாக யாழில் கைதுசெய்யப்பட்டிருக்கும் 129பேருக்கும் ஒரு சட்டத்தரணியின் உதவி தேவைப்படுகின்றது. இது ஒரு சமுதாயத்தில் ஏற்பட்ட பிரச்சினை. சட்டத்தரணி தமிழ்மாறன் தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர் என்ற வகையில் அவர் மீதான சேறுபூசல்களை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாது. காரணம் என்னவெனில் இதற்கு முன் ஏற்பட்ட பாலியல் வல்லுறவுக்குட்பட்ட கொலைகள் அனைத்தும் குழிதோண்டிப்புதைக்கப்பட்டவைகளாகவே இருக்கின்றன.

வித்தியாவின் படுகொலை போன்று இனப்படுகொலையை அரசியல்வாதிகள் கண்டுகொள்ளவில்லை. உண்மையில் இக்கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பில் DNA பரிசோதனையின் மூலம் தெரியவரும். ஆகவே இவர்களுக்கு இனி நீதிமன்றம் தான் தீர்ப்புக்களை வழங்கவேண்டும். இக்கொலையினை அரசியல்மயமாக்குவதும், த.தே.கூட்டமைப்பின் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்துவதும் சிறந்ததல்ல. அதற்காக தமிழ்மக்கள் அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பது சட்டத்திற்கு முரணான ஒன்று. இக்கொலையினைக்கொண்டு த.தே.கூட்டமைப்பை களங்கப்படுத்துவது ஒட்டுமொத்த தமிழினத்திற்கு அவமானமானதொரு செயல் எனலாம். இதனால் சிங்கள பேரினவாதம் மேலோங்கி தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ முடியாத சூழ்நிலை உருவாகும் என்பதில் மாற்றம் இல்லை.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

48



முன்னரங்கிலிருந்து புறப்படுகின்ற ஒரு ஒற்றையடிப்பாதை கட்டளைப் பணியகத்திலிருந்து 20மீ அருகாகப்போய் நெடுஞ்சாலையைச் சந்தித்தது. அது படையினர் தமது போக்குவரத்துக்கு என அமைத்த சிறு பாதை. அந்தப் பாதைவழியே ஒவ்வொரு அடியையும் அவதானமாக வைத்துக் கடந்தவர்கள், நெடுஞ்சாலையையும் தாண்டி அப்பாலிருந்த மரத்தொகுதியினுள் மறைந்தனர். அப்படியே நேராக நீண்ட தூரம் நடந்து போனவர்கள், படையினர் மண்கிண்டிமலைத் தளத்தைச் சுற்றி அமைத்திருந்த பழைய மண் அணையை அடைத்தனர். மண் அணையின் உட்புறமாக ஒரு வீதி போவது அந்த கும்மிருட்டிலும் தெளிவாகத் தெரிந்தது. மண் அணையின் உட்புறமாக வலது பக்கம் தூரத்துக்கப்பால் மின் விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. அது படையினரின் தளமா? மக்கள் குடியிருப்பா? காலையில் தான் பார்க்கமுடியும்.

கண்காணிப்பதற்குப் பொருத்தமான மரமொன்றைத் தேர்ந்தெடுத்தார்கள். எல்லோருமே மரங்களிலே ஏறிக்கொண்டனர். இவர்கள் தங்கியிருந்த மரங்கள், மண் அணையிலிருந்து படையினரின் முன்னரங்கைநோக்கிய திசையில் 100மீ இருந்தன. அவை உயரமான மரங்களாகையால் மண் அணைக்கு மறுபுறம் நீண்ட தொலைவை அவதானிக்கக் கூடியவாறு இருந்தது.

இரவில் மின் விளக்குகள் எரிந்த பகுதியில் பகலில் மக்களின் வீடுகள் தெரிந்தன. காலையிலே மக்கள் நடமாடத்தொடங்கினர். மக்களின் வீடுகளுக்குப் போவதற்கிடையில் ஒரு பாடசாலைக் கட்டடமிருந்தது. பாடசாலைக்குமிடையில் வீதியோரமாக ஒரு குளம் இருந்தது. சிறிலங்காவின பழைய வரைபடத்தின்படி காடாக இருந்த, தமிழர்களுக்குச் சொந்தமான அந்த நிலப்பகுதியிலே இப்போது சிங்களக் குடியிருப்புகள் முளைத்திருக்கின்றன. பழைய வரைபடத்தைப் பார்த்துவிட்டு வருபவர்களுக்குத் தலை சுற்றக்கூடியளவுக்கு அந்தச் சூழல் முற்றாக வேறு தோற்றத்தில் இருந்தது. புதிய குடியிருப்புகள், புதிய வீதிகள்.

உள்நுழைந்த மறுநாள் காலையில் ஐந்து படையினர் அந்த உட்புறப் பாதையில் தேடுதல் செய்தவாறே நகர்ந்து போய், பாடசாலை வளாகத்தினுள் மறைந்துவிட்டனர். பின்னர் மாலையில் தமது படைத்தளத்துக்குத் திரும்பினார்கள். மாணவர்கள் எவருமே வரவில்லை. இருண்டபின் ரங்காவையும், அருளப்பனையும் கூட்டிக்கொண்டு பாடசாலைக்கு கயல்விழி போனார். அடர்த்தியான மரங்களிடையே குடைந்து இடைவெளி எடுத்து, நிழல்விழக்கூடிய பகுதியிலே திறந்த காப்பகழி ஒன்று வெட்டப்பட்டிருந்தது. பாடசாலையின் பின்புறம்காடுஎன்பதால், அதற்குள்ளிருந்து அவதானிக்கின்றார்கள் போலும், கயல்விழியின் அணி திரும்பிவந்தது.

ஆனால் மறுநாள் அவர்களின் தேடுதல் முறை வேறு பாடாக இருந்தது. தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடும் படையினரின் தொகை, நகர்வுமுறை, தங்கிநிற்கும் இடம் என்பன நாளுக்கொருவிதமாக மாறிக்கொண்டிருந்தன. இலக்கைத் தீர்மானிப்பது எங்களுக்கு மிகவும் கடினமா்கவே இருந்தது. நாங்கள் உள்ளேபோன ஐந்தாம் நாள் படையினர் வெளியே போய் எங்களுடைய முன்னரங்க நிலைமீது தாக்குதல் நடத்திவிட்டுத் திரும்பி வந்தனர். தாக்குதலுக்குப் போய்த் திரும்பித் தமது முன்னரங்கநிலைகளுக்கு வந்த படையினரை ஊர்திகள் வந்து ஏற்றிக்கொண்டு போவதை உயர்ந்த மரமொன்றின் மீது ஏறிநின்று பார்த்துக்கொண்டிருந்தோம். எங்களுடைய பகுதியில் சண்டை நடந்ததை வானலையூடே கேட்டுக் கொண்டிருந்தோம். ஒன்றும் செய்யமுடியவில்லை. அதியுச்சநிலையில் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக நாமிருந்தோம்.

உள்ளே நாம் வந்து பத்து நாட்களாயிற்று உணவு இருப்பு முடியும் கட்டத்திலிருந்தது. படையினரின் தேடுதல் அணி ஒவ்வொருநாளும் ஒவ்வொருமுறையில் வருவதால், இலக்கும் குழம்பிக்கொண்டேயிருந்தது. அடித்தேயாகவேண்டும். வெளியே போய்விட்டு, மறுபடியும் உள்ளே வரமுடியுமா? என்பது கேள்விக்குரிய விடயம். நாம் கொண்டு வந்த தண்ணீர் முதலாம் நாளே முடிந்துவிட, அதன் பின் இரவுகளில் குளத்துக்குப் போய்த் தண்ணீர் எடுத்துவருவோம். உணவு முடிந்தாலுங்கூட, மேலதிகமாக ஒரு நாளைத் தண்ணீருடன் கழிக்கமுடியும். ஆனாலும் இன்றே அடிப்பது என்று முடிவெடுத்தோம்.

முதல் நாள் தேடுதல்செய்த படையினர் மண் அணையருகே தங்கிநின்றனர். ஆனால் அவர்கள் வந்த பாதை நெடுஞ்சாலையல்ல. சாலையிலிருந்து மண் அணைப்பக்கமாக வெட்டப்பட்டிருந்த ஒரு உட்பாதை எங்களுக்கு வலது புறமாக 100மீ தள்ளிச் சாலையில் ஏறுகின்றது. அவ்வழியாகவே வந்தனர். ஒன்பதுநாட்களாகத் தொடர்ந்து அவதானித்துக் கொண்டேயிருந்ததில் படையினர் பயன்படுத்துகின்ற பாதைகளையும், தங்குமிடங்களையும் நன்கு அறிந்திருந்தோம். எனவே இன்று பி.ப.2.00 மணியளவில் படையினர் தங்குமிடத்தைத் தாக்கிவிட்டு, வெளியேறுவதென முடிவெடுத்தோம். காட்டுக்குள் மறைந்திருந்து எல்லா ஆயத்தங்களையும் செய்துவிட்டு நகர்ந்தோம்.

பெரும்பாலும் இன்று அவர்கள் தங்குவதற்கு வாய்ப்பு அதிகமாயுள்ள குளத்தை நோக்கி, மண் அணைக்கு இப்புறமாகக் காப்புச் சூட்டுக்குரிய LMGயை பைந்தமிழ் நிலைப்படுத்தினார். கூடவே ஆஷாவும், தர்சிகாவும் நின்றனர். கயல்விழி தன்னோடு, ஈழமங்கை, பகலவ்ள், அருளப்பன் ஆகியோரைக் கூட்டிப்போனார். கயல்வழி புறப்படவும் மழை தூறத் தொடங்கியது. மண் அணைக்கு மேலே தான் எட்டிப்பார்த்துவிட்டு இறங்கும்போது அடியைத் தொடங்குமாறு பைந்தமிழிடம் சொல்லிவிட்டுப்போன கயல்விழி மண் அணைக்குமேலால்எட்டிப்பார்த்தார். படையினரைக் காணவில்லை. குளக்கரையில் ஒரு சவர்க்காரப் பெட்டி மட்டும் இருப்பது தெரிந்தது. மெதுவாக ஊர்ந்து, 'அடிக்க வேண்டாம்' என்று LMGக்குச் சைகை காட்டியவாறு இறங்கும்போது படையினரைக் கயல்விழி கண்டுவிட்டார். சாலை ஓரிடத்தில் வளைந்தவாறு போகின்றது. அந்த வளைவில் முன்பொருமுறை தங்கிநின்ற மரத்தின் கீழ் படையினர் இன்று நிற்கின்றனர். மழை தூறிக்கொண்டிருந்ததால், மண் அணைக்குமேலே தெரிந்த கயல்விழியின் தலையை குளத்துக்கு இடப்புறமுள்ள சாலைவளைவில் நின்ற படையினர் கவனிக்கவில்லை.

சறுக்கி இறங்கிய வேகத்திலேயே கயல்விழி LMGயை நகர்த்திப்போய்ப் படையினருக்குப் பக்கவாட்டாக, வளைவிலிருந்து 75மீ தொலைவில் நிலைப்படுத்திவிட்டு, படையினர் நின்ற மரத்துக்குப் பின்புறமான மண் அணைப் பகுதியில் ஏறினார். அவருடன் பகலவளும், அருளப்பனும், ஈழமங்கையும் ஏறினார்கள்.

இவர்கள் ஏறிப்பார்க்க, அப்போது தான் அவர்களின் தொலைத் தொடர்பாளர் Wireleess receiver இல் கதைத்துவிட்டு அதைக் கீழே வைத்துக்கொண்டிருந்தார். 40மி.மீ. எறிகணைகளை ஏவ, LMG முழங்க பின்புறமாகக் குண்டுகளை வீசியவாறே மண் அணையிலிருந்து குதித்து இறங்கிய கயல்வழி குழுவினர் சுட்டவாறு படையினரை நெருங்கியபோது, இருவர் காயத்துடன் விழுந்து கிடந்தனர். அவர்களை நெருங்கிச் சுட்டுவிட்டு, கயல்விழி Wireleess receiverயை எடுத்தார். படையினரின் சுடுகலன்கள் கூடாரத்தினுள்ளே கப்புகளில் கொழுவப்பட்டிருந்தன. பற்றைக்குள் மறைந்தபடி கிடந்த ஒரு படைவீரரையும் சுட்டபடியே சுடுகலன்களை எடுத்து, கூடாரத்துணியையும் கழற்றி மடித்து எடுத்துக்கொண்டனர்.


இப்போதும் தூறல் நிற்கவில்லை. குளத்தருகே படையினர் ஒருவர் இங்கே நடப்பவற்றைக் கண்ட திகைப்பில் நின்றார். சவர்க்காரப் பெட்டியின் உரிமையாளர் அவராகத்தான் இருக்கவேண்டும். அவரையும் சுட்டனர். இதற்கிடையில் மரத்தடியில் தாக்குதல் நடந்து கொண்டிருந்தபோது மக்கள் குடியிருப்பு பக்கத்திலிருந்து வீதி வழியே ஒரு டோசர் வந்துகொண்டிருந்தது. இங்கே நடந்தவற்றைக் கண்ட அதிர்ச்சியில் ஓட்டுநர் டோசரைக் குளத்தைநோக்கித் திருப்பியதில் அது குளத்துக்குள் இறங்கிச் சரிந்துபோய்நின்றது. அந்தப் பகுதி முற்றாக எமது கட்டுப்பாட்டிலே இருந்தது.

தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 306. | லெப்.சஞ்சிகா/ தேன்மொழியாள் | பஞ்சுலக்சுமி ராஜன் | யாழ்ப்பாணம் | 1997.10.07 | கரப்புக்குத்தி ஜெயசிக்குறுய் |
| 307. | லெப்.அஜித்தா | வனஜா சின்னத்தம்பி | யாழ்ப்பாணம் | 1997.10.07 | கரப்புக்குத்தி ஜெயசிக்குறுய் |
| 308. | கப்டன்.மீனா | காயத்திரி கிருஸ்ணமூர்த்தி | யாழ்ப்பாணம் | 1997.10.07 | கரப்புக்குத்தி ஜெயசிக்குறுய |
| 309. | 2ம்.லெப்.புதியவள்/வாசுகி | அன்னமேரி ஆனந்தன் | கண்டி | 1997.10.13 | பெரியமடு ஜெயசிக்குறுய் |
| 310. | கப்டன்.வாணி | உசாவதனி நாகலிங்கம் | யாழ்ப்பாணம் | 1997.10.13 | பெரியமடு ஜெயசிக்குறுய் |
| 311. | மேஜர்.காஞ்சனா | தேவரஞ்சினி கதிரவேலு | யாழ்ப்பாணம் | 1997.10.18 | கரிப்பட்டமுறிப்புஜெயசிக்குறுய் |

# வித்தியாவின் சாவில் ஆசனமிட்டு அமர ஆசைப்படும் அரசியல்வாதிகள்



மைத்திரியின் அரசாங்கத்தை நல்லாட்சி என்று கூறிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் ஒரு விடயத்தினை சிந்திக்கவேண்டும். குறிப்பாக வடகிழக்கினைப்பொறுத்தவரை நீதி, நிர்வாகம், எவ்வாறு நடைபெறுகின்றன என்பது தொடர்பில் கவனம் கொள்வது அவசியம். தமிழினத்தின் இளஞ்சமுதாயத்தினரை தீயவழியில் கொண்டுசெல்வதற்கு சிங்கள பேரின வாத அரசு பின்னின்று செயற்படுவதாக கருத்துக்கள் தெரிவிக்கப்படும் அதே நேரம், இதற்கு முன்னர் பாலியல் வன்முறைகளுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டவர்களுக்கு ஏன் இந்த அரசியல்வாதிகள் ஆர்ப்பாட்டங்கள் அல்லது அதற்கான தீர்வுகளை பெற்றுத்தர இயலாமல்போனமை தொடர்பில் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். குறிப்பாக வவுனியா, மன்னார், புதுக்குடியிருப்பு, விஸ்வமடு, மல்லாவி, பூநகரி, கிளிநொச்சி, கனகராயன்குளம், பருத்தித்துறை, நீர்வேலி போன்ற பல பகுதிகளில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்ட பெண்கள் தொடர்பில் தமிழ், சிங்கள அரசியல்வாதிகள் அக்கறை காட்டாது ஒரு பாராளுமன்றத் தேர்தலை நெருங்கிச்செல்லும் இக்காலத்தில் அனைத்து பாகங்களிலும் இருந்து தமது அனுதாபங்களைத் தெரிவிப்பதும், அப்பிரதேசங்களுக்குச்சென்று விசாரிப்பதிலும் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இவர்கள் குறிப்பாக வித்தியாவின் சாவில் ஆசனமிட்டு பயணம் செய்யும் அரசியல்வாதிகளாகவே சித்தரிக்கப்படுகின்றனர். இன்று மக்கள் புரட்சிபெருவாரியாகவெடித்திருக்கின்றது. அரசியல்வாதிகளாகிய நீங்கள் கைகளைக்கட்டி வேடிக்கைமாத்திரம் பார்த்துக்கொண்டிருப்பது உங்களது அரசியலுக்குச்சிறந்தது. ஏற்கனவே கொலைசெய்யப்பட்டவர்களுக்கு நிவாரணங்கள் பெற்றுக் கொடுத்துள்ளீர்களா? முள்ளிவாய்க்காலில் படுகொலைகள் இடம்பெற்றபோது குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்த நீங்கள் ஒருவர் கூட முன்வந்து மக்களுக்காக உண்ணாநோன்பிருக்கவில்லையே.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட அவ்வாறுசெயற்படவில்லை. ஆனால் இந்தியத் தமிழர்கள் எமக்காக உண்ணாநோன்பிருந்து தீக்குளித்த சம்பவங்களை அறிந்திருப்பீர்கள். இதற்கு முன்னர் இடம்பெற்ற படுகொலைகளை வன்மையாகக்கண்டித்து அதற்கான தண்டனைகளை பெற்றுக் கொடுத்திருந்தால் இன்று அப்பாவி மாணவியான வித்தியா கொலை செய்யப்பட்டிருக்கமாட்டார். சட்டம் ஒரு இருட்டறை. அந்த சட்டத்தினால் தப்ப இயலும் என்ற அந்த மன தைரியத்தோடு, அரசியல்வாதிகளின் செல்வாக்கினை பயன்படுத்தி தப்பித்துவிடலாம்என்று இந்த வெறியர்கள் 'செயற்பட்டிருக்கின்றார்கள். இன்று சட்டத்தை கையிலெடுக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். இதற்கு முன்னர் இடம்பெற்ற செம்மணி புதைகுழி தொடர்பான விபரங்களை உங்கள் பார்வைக்குத்தருகிறோம்.

இனப்படுகொலை தொடர்பான பேச்சுக்கள் மறுபடியும் முதன்மையிடத்துக்கு வருகின்றன.

வடக்கு மாகாண சபை கொண்டு வந்த தீர்மானமும், ஐ.நா நிலவரங்களும் அதனைக் கிளறிவிட்டிருக்கின்றது. போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நாவின் விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டிருக்கின்றது. இதனால் உண்மைகள் மறைக்கப்படுவதற்கும், பாதிக்கப்பட்டோருக்கான நீதி, நியாயங்கள் முற்றாக மறுக்கப்படுவதற்கும் வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும், ஊடகங்களும் பல்வேறு வடிவிலான ஆவணப்படுத்தல்களை இந்த விடயம் தொடர்பில் தயாரித்து வைத்திருக்கின்றன. ஆனால் அவை தமிழ் இன அழிப்பின் இறுதிக் கட்டத்தில் சேமிக்கப்பட்டவை. இந்த இன அழிப்புக்கு திரட்சித் தன்மைமிக்க ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி இருப்பதையும், பல்வேறு காலகட்டங்களிலும், பல வடிவங்களில் இன அழிப்பு அல்லது இன சிதைப்பு மேற்கொள்ளப்பட்டதென்பதையும்அந்தத் தரவுத்தேற்றங்கள் காணத் தவறியிருக்கின்றன.

ஓர் இன அழிப்பின் முதல் இலக்கு ஆண்கள் என்றால், அதன் இரண்டாம் இலக்கு பெண்கள் தான். ஆயிரம் ஆண்களைக் கொன்று வீசுவதால் எழும் அதிர்வைவிட, ஒரு பெண்ணை பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கிக் கிழித்துப்போடுதல் பேரதிர்வை ஏற்படுத்தும். இன அழிப்புக்குள்ளாக்கும் மக்களின் உளவியலை மோசமாக மிரட்சியடையச் செய்யும். கிருசாந்தி தொட்டு, இசைப்பிரியா வரை அதனை அவதானித்திருக்கிறோம். அனுபவித்திருக்கிறோம். அதில் முக்கிய இனவழிப்பு ஆவணமாக யாழ்ப்பாணம் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தியின் படுகொலையும், அதற்குப் பின்னரான செம்மணி புதைகுழியும் பதிவுசெய்யப்படல் வேண்டும். செம்மணி ஓர் இனத்தின் மீது நடத்தப்பட்ட கூட்டு இனப்படுகொலையின் அடையாளம். ஆனால் அது விரைவாகவே மறக்கப்பட்டாயிற்று.

இங்கு பிரயோகமாகும், தாமதிக்கப்படும் நீதி வழங்கலானது, அநீதிக்கு சமமானதாக மாறிவிடுகின்றது. தமிழர்கள் மனங்களிலிருந்து என்றும் அகலாத படுகொலை நினைவுகளுக்குள் செம்மணியும்உள்வாங்கப்படல்வேண்டும். 600க்கும் மேற்பட்ட தமிழ் உயிர்கள் புதைக்கப்பட்ட அந்தவெளி ஒரு படுகொலையில் காட்சிப் படிமமாக நிறுவப்பட்டால் அது தெற்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் வரும் சுற்றுலாவிகளுக்கு நம் இனத்துயர் செய்தியை அறிவிக்கும். இதில் இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிடவேண்டும். வெறுமனே இனப்படுகொலை நடக்கின்றது என்பதை ஒரு சம்பவக் குறிப்பாக மட்டும், ஒரு வரியில் குறிப்பிட்டுத் தீர்மானம் வெளியிடல் போதாமைகளைக் கொண்டதாகக் கணிக்கப்படும். இங்கு நடந்தது இனப்படுகொலைதான் என்பதை நிரூபிக்க ஆதாரபூர்வமாக, சம்பவக் கோர்வையாக அவற்றை தொகுத்து வெளியிடவேண்டும். உலகளவில் அநீதிக்குள்ளான இனங்கள் அதனையே செய்திருக்கின்றன. அவ்வாறு செய்தலே ஆரோக்கியமுள்ள அரசியல் பயணமாக அமையும். உள்ளே யாழ்ப்பாணம் வரவேற்கின்றது, இப்போது புதிய வடிவம் பெற்றுவிட்டது. ஒருவித அபிவிருத்தியின் மெருகூட்டலுடன் அனைவரையும் வரவேற்றுக்கொண்டிருக்கிறது. ஈழத் தமிழர் மறந்துபோன வரலாற்றுப் பக்கங்களில் முக்கிய இரு சம்பவங்களை இந்தமையம் வைத்திருக்கிறது. 1996ஆம் ஆண்டு செப்டெம்பரில் இந்த இடத்தில்தான் கிருசாந்தி தொலைக்கப்பட்டாள்.

2000ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட படையியல் நடவடிக்கை இந்த வளைவு வரை விரிந்திருந்தது. இந்த இரு சம்பவங்களும் தமிழர்களால் மறக்கப்பட முடியாதவைதான். ஆனால் மறதியின் அரசியல் அனைத்தையும் மூடச் செய்திருக்கின்றது. விரும்பியோ, விரும்பாமலோ மறந்துபோவதை விரும்புகின்றோம். அப்படியான காலத்தில்தான் கிருசாந்தியை மறதியின் அடுக்குகளிலிருந்து மீண்டும் கிளறியெடுக்க வேண்டியிருக்கின்றது. 1996ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 07ஆம் திகதி ஒரு விபத்து நடந்தது. சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் உயர்தரம் கற்றுக்கொண்டிருந்த மாணவியொருவரை இராணுவ வாகனம் மோதிக்கொன்றது. இராணுவத்துக்கு எதிராக மூச்சுக்கூட விடுவதற்கான சுதந்திரம் மறுக்கப்பட்டிருந்த அந்தக் காலத்தில் மாணவிகள் அமைதியாக சாவு வீட்டைக் கடைபிடித்தனர். வெள்ளைச் சீருடைகளுக்குதனியானமரியாதையுண்டு என்ற பொது மதிப்பீட்டின் அடிப்படையில் தனியாகவும், சேர்ந்தும், தம் லேடீஸ் சைக்கிள்களில் நாவற்குழியிருக்கும் அந்த செத்த வீட்டிற்கு சென்றுவந்தனர்.

அந்த நம்பிக்கையை கையில் பிடித்துக்கொண்டு தன் சைக்கிளில் இறுதிச் சடங்கிற்குப் போன கிருசாந்தி தனியே வீடு திரும்பிக்கொண்டிருந்தாள். வெட்டைக்காற்று பேயென அடித்துக்கொண்டிருந்தது. எப்போதாவது கடக்கும் வாகனங்கள் அவளைக் கடந்துபோய்க்கொண்டிருந்தன. சிலர் அவளை அவதானித்துமிருந்தனர். அவர்கள் அவதானித்தவேளையில் இராணுவத்தினர் அவளை "யாழ்ப்பாணம் வரவேற்கிறது" வளைவுக்கு அருகில் நிறுத்தி விசாரித்துக்கொண்டிருந்தனர். அதன் பின்னர் அவளுக்கு என்ன நடந்தது என்ற விடயம் ஆறு வாரங்கள் கழித்து வந்த பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் செய்தியாக வெளிவந்தது. செய்தி "அச்சமயம் அங்குள்ளகொட்டகை ஒன்றுக்குள் இருந்த கோப்ரல் ஒருவர் மாணவியை உள்ளே கொண்டுவருமாறு கட்டளையிட்டதை அடுத்து சோதனைக் கடமையில் ஈடுபட்டிருந்தபடையினர் மாணவியை உள்ளேகொண்டுசென்றனர். மகள் பாடசாலையிலிருந்து திரும்பாததால் தாயாரும், தம்பியாரும் அவளைத் தேடிப் புறப்பட்டனர்.

அவர்களும் அதே சோதனை முகாமை அடைந்தனர். அங்கு ஒரு மணித்தியாலம் வரை காத்திருந்தனர். அவர்களும் வீடு திரும்பாததையிட்டு அயலவர் ஒருவரும் அந்தச் சோதனை முகாமுக்கு தேடிச் சென்றார். ஏற்கனவே வீடுதிரும்பாதமூவர் குறித்துசம்பந்தப்பட்ட அயலவர் விசாரித்தபோது அவரும் உள்ளேகூட்டிச்செல்லப்பட்டார். அவர்கள் இராணுவத்தினரின் தங்கும் அறையின் பின்புறத்தில் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டநிலையில் வைக்கப்பட்டனர். மாணவி கிருசாந்தி வேறிடத்தில் வைக்கப்பட்டிருந்தாள். பின்னர்இரவு பத்து மணியளவில் கிருசாந்தி தவிர்ந்த மூவரும் கழுத்தில் கயிற்றால் நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் ஒரு குழியிலும், மற்றொருவர் இன்னொரு குழியிலுமாக புதைக்கப்பட்டனர். பின்னர் நள்ளிரவு 12 மணியளவில் மாணவி கிருசாந்தியை பதினொரு பேர் வன்புணர்வு செய்து கொலை செய்தனர்" (உதயன் 27.10.1996) 1996 ஆம் ஆண்டு கிருசாந்தியின் படுகொலை யாழ்ப்பாணத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இலங்கை நாடாளுமன்றத்திலும், சர்வதேச அரங்குகளிலும் முக்கிய பேசுபொருளாக இந்தவிடயம் எடுத்துக் கொள்ளப்பட்டது. தம்மீது விழுந்த குற்றச்சாட்டை போக்குவதற்கு உடனடி விசாரணையை இராணுவத்தரப்பு ஆரம்பித்திருந்தது. அதன் விளைவாக ஏழு இராணுவத்தினரும், இரண்டு பொலிசாரும் கைதுசெய்யப்பட்டனர். அவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் அளித்த வாக்குமூலம் கீழே பதிவிடப்படுகின்றது. வாக்குமூலம் 1996 ஆம் ஆண்டு அரியாலை பகுதியில் அமைந்திருந்த இராணுவ முகாமில் சிவில் நிர்வாகப் பகுதியில் கட்டளை அதிகாரியான கப்டன் லலித் ஹோவுக்கு கீழ் பணிபுரிந்தேன். அரியாலை பகுதியில் வீடுகளில் உள்ளவர்களின் விபரங்கள் மற்றும் அந்தப் பகுதியில் உள்ள இளைஞர்களின் விபரங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்யும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்தப்பணியை மேற்கொண்டிருந்த சமயம் புலனாய்வுப் பிரிவு வேலையும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. புலனாய்வுப் பிரிவு வேலைகளுக்கு கப்டன் லலித், கப்டன் ஸ்ரீ ஜெயவர்தன ஆகியோர் உட்பட சில வீரர்கள் இந்தப் பிரிவில் இருந்தனர். அவர்களின் கீழ் நான் செயற்பட்டேன். இந்தச் சந்தர்ப்பத்தில் அரியாலைப் பகுதியில் சுற்றிவளைப்பு ஒன்றை இராணுவத்தினர் நடத்தினர். அந்தப் பகுதியில் உள்ள வீடுகளில் இருந்த சகலரையும் வெளியே அழைத்து வந்து நெடுங்குளம் எனும் இடத்தில் ஒன்றுசேர்த்து விசாரித்தோம். அந்த சந்தர்ப்பத்தில் இங்கு மேஜர் வீரக்கொடி, மேஜர் குணசேகர ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

அவர்கள் முகமூடி அணிந்த இருவரை அழைத்து வந்து அங்கு நின்ற பொதுமக்கள் முன்நிறுத்தினர். அந்த இரு முகமூடி நபர்களும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனத் தெரிவித்து ஐம்பது பேரை அடையாளம் காட்டினார்கள். அங்கு ஐம்பது பேரும் வீடியோ படம் எடுக்கப்பட்டதுடன் எம்மிடமிருந்த பெயர் பட்டியலுடன் அவர்களின் பெயர் விபரங்கள் ஒப்பிட்டும் பார்க்கப்பட்டன. பின்னர் அவர்களின் வீட்டு முகவரிகள் பெறப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். விடுதலைப் புலிச் சந்தேக நபர்களைக் கண்டுபிடிக்க அந்த முகவரியின் படி முயற்சிகள் எடுக்கப்பட்டன. அரியாலைப் பகுதியில் மக்கள் எவ்வாறு கைதுசெய்யப்பட்டார்கள்? எவ்வாறு கொல்லப்பட்டார்கள்? எங்கு புதைக்கப்பட்டார்கள்? என்ற விபரங்களை என்னால் நிச்சயமாகக் கூற முடியும். அரியாலைப் பகுதியில் முதலில் கைதானவர்கள் தபால்கட்டுச் சந்தியில் 7 ஆவது காலாட் படையணிப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கப்டன் ஸ்ரீ ஜெயவர்தனா தலைமையில் இயங்கிய "சி" பிரிவிலும், அரியாலையில் உள்ள கட்டடத்திலும் பலர் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தனர்.

மற்றொரு தடுப்பு முகாம் தபால்கட்டை சந்தியில் இருந்து செல்லும் பாதையில் பாடசாலைக்கு அருகில் உள்ள விடுதலைப்புலிகள் அமைத்த முன்னைய அலுவலகத்தில் இயங்கியது. கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றும் செல்வரத்தினம் என்பவரைக் கைது செய்து "சி" பிரிவு முகாமில் தடுத்து வைத்திருந்தனர். அவரைக் கப்டன் லலித், கப்டன் ஸ்ரீ ஜெயவர்தன, லெப்டினன்ட், துடுகல்ல ஆகிய மூவரும் சேர்ந்து கைதுசெய்தனர். அவரை விடுவிக்குமாறு அவரது மனைவி, பிள்ளைகள், என்னிடம் கேட்டனர். தொடரும்...

சுழியோடி

# நிறைவேற்றதிகார ஆட்சிமுறையும், அதன் சாதக பாதக தன்மைகளும்

**கடந்தவாரத்தொடர்ச்சி...**

பிரேரணையில் அரைவாசிபேர் மாத்திரம் கையொப்பமிட்டு இருந்தால் குறித்த பிரேரணையை விசாரணைக்காக எடுப்பதா? இல்லையா? என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் சபாநாயகருக்கே உண்டு. இத்தகைய பிரேரணை சபாநாயகருக்கு கிடைக்கப்பெற்றதும் அவர் அது தொடர்பாக ஜனாதிபதிக்கும், எதிர்கட்சி தலைவருக்கும், சட்டமா அதிபருக்கும், பிரதம நிதியரசருக்கும் எழுத்து மூலமாக அறிவிக்கவேண்டும். சபாநாயகர் குற்றப் பிரேரணையை ஏற்றுக் கொண்டால் அது பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு விவாதத்திற்கு உட்படுத்தப்படும். விவாதத்தின் பின் பிரேரணை 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு நிறைவேற்றப்பட்டால் சட்ட ரீதியான பரீசிலணைக்காக உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்படும். உயர் நீதிமன்றத்தில் குற்றப் பிரேரணைக்கு உட்படுத்தப்படும் போது ஜனாதிபதி நேரடியாகவோ அல்லது தமது சட்ட வழக்கறிஞர் மூலமாகவோ தமது கருத்துக்களை தெரிவிக்கலாம். குற்றம் நிருபிக்கப்பட்டு இருந்தால் அது தொடர்பான அறிக்கையை உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

குற்ற பிரேரணை பாராளுமன்றில் மீண்டும் விவாதிக்கப்பட்டு 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டால் ஜனாதிபதியின் பதவி வெற்றிடமாகும். இலங்கையில் 1990, 1991ம் ஆண்டுகளில் ஜனாதிபதி பிரேமதாஸ அவர்களுக்கு எதிராக இத்தகைய குற்றப்பிரேரணை ஒன்று கொண்டுவர முயற்சிக்கப்பட்டாலும் அது கைக்கூடவில்லை. பதவி வரிதான பின் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் நடைமுறைகள் (40(1) ஆம் உப பிரிவு) பதவியில் இருக்கின்ற ஜனாதிபதி பதவி காலத்தின் போது இறந்தால் அவ்விடத்துக்கு உடனடியாக பிரதமர் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார். பிரதமரின் வெற்றிடத்துக்கு அமைச்சரவையில் எவரேனும் ஒருவர் நியமிக்கப்படுவார். பிரதமர் இல்லாதவிடத்து சபாநாயகரும், அவரும் இல்லாத போது பிரதம நீதியரசர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார்.

இவ்வாறு ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டாலும் அத் தெரிவானது ஒரு மாத காலப்பகுதிக்கே ஏற்புடையது. ஒரு மாதக் காலப்பகுதியினுள் பாராளுமன்றம் கூடி பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இருந்து ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்யவேண்டும். இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர் வெற்றிடமான ஜனாதிபதியின் பதவிக்காலம் முடியும் வரை ஜனாதிபதியாக பதவி வகிப்பார். ஜனாதிபதியின் பதவி வெற்றிடமாகும் போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தால் புதிய பாராளுமன்றம் கூடி ஒரு மாதத்திற்குள் ஜனாதிபதியாக ஒருவரை தெரிவு செய்ய வேண்டும்.

1993 ஆம் ஆண்டு மே 01 ஆம் திகதி ஜனாதிபதியாக இருந்த பிரேமதாஸாவின் பதவி வெற்றிடமானதும் அவ்விடத்துக்கு பிரதமராக இருந்த D.P.விஜயதுங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். பாராளுமன்றம் கூடி அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்ய முனைந்த போது பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஏகமானதாக D.P.விஜயதுங்க தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருக்க வேண்டுமென முடிவு செய்தமையால் பிரேமதாஸவின் பதவி காலம் முடியும் காலமான 1994 ஆம் ஆண்டுவரை பதவியில் இருந்து 1994 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடாமலே அரசியலில் இருந்து ஓய்வுப் பெற்றார்.

**ஜனாதிபதித்துவ ஆட்சிமுறையின் நன்மைகள்**

ஜனாதிபதி மக்களால் நேரடியாக தெரிவாவதால் சட்ட துறையின் கெடுபிடிகளுக்கு அப்பாற்பட்டு தன்னிச்சையாக செயற்பட முடியும். நிர்வாகம் நிலையானதாகவும், பலமானதாகவும் அமையும். பல்லின கலாசார தன்மைகொண்ட இலங்கையில் சிறுபான்மையினரின் நலனைப் பேணலாம். ஜனாதிபதியின் தெரிவில் முழு நாடும் தொடர்புபடுவதனால் அவர் தேசிய சின்னமாக கருதப்படுவார். இலங்கையில் நடைபெறும் தேர்தல்களில் ஜனாதிபதி தேர்தல் அதிக ஜனநாயகத்தன்மை மிக்கது. நாட்டுக்கு தேவையான அவசர தீர்மானம் எடுத்தலும் அவற்றினை, நடைமுறைப்படுத்தலும்.

**ஜனாதிபதித்துவ ஆட்சிமுறையின் குறை பாடுகள்**

ஜனாதிபதி தேர்தலில் கடைப்பிடிக்கப்படும் சில இறுக்கமான நடைமுறைகள் சாதாரண மக்களின் அரசியல் சுதந்திரத்தை பாதிக்கிறது. ஜனாதிபதி தேர்தலின் போது செலுத்தப்படும் கட்டணம் அதிகம். கட்சி ரீதியாக போட்டியிட்டால் – 50,000. சுயேட்சை ரீதியாக போட்டியிட்டால் – 75,000. ஜனாதிபதி தேர்தலை விளங்கிக் கொள்வது கடினம். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட அரசியல் கட்சியின் தலைவராக அல்லது பாராளுமன்ற உறுப்பினராக அல்லது ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்க வேண்டும் என்ற நியதி சாதாரண மக்களை தேர்தலில் போட்டியிடுவதை தடுப்பதாக அமைகின்றது. அரசியலமைப்பின் 35ம் சரத்து ஜனாதிபதியை சட்டத்துக்கு அப்பாற்பட்டவராக நோக்குவதால் அவர் அதிகார துஷ்பிரயோகம் செய்தாலும் கேள்வி கேட்க முடியாது. ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யும் வழிமுறை மிகவும் நீண்டது.

இவர் நிர்வாக விடயத்தில் அதிக அதிகாரம் கொண்டிருப்பதால் அதிகார துஷ்பிரயோக நடவடிக்கைகளுக்கு வாய்ப்பாக அமைகின்றது. ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள பாராளுமன்றத்தை கூட்டுதல், கலைத்தல், ஒத்தி வைத்தல் போன்ற சட்டதுறை தொடர்பான அதிகாரங்கள் பாராளுமன்றத்தின் இறைமையை பாதிப்பதாக அமைகின்றது. பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட ஒரு விடயத்தினை தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதி மக்கள் தீர்ப்புக்கு விட்டு சட்டமாக்கி கொள்ளும் ஜனாதிபதியின் அதிகாரம் பாராளுமன்ற இறைமையை பாதிக்கிறது. அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றும் போது அமைச்சரவை பதவி விலகுகின்ற போதும் ஜனாதிபதி பதவியில் இருப்பது ஜனநாயகத்துக்கு முரணானது. ஜனாதிபதியானவர் நீதித்துறையில் தனக்குரிய அதிகாரத்தை பயன்படுத்தி தான் விரும்பியோருக்கு பொது மன்னிப்பு வழங்கலாம்.

ஜனாதிபதியானவர் தமது நிர்வாக அதிகாரத்தை பயன்படுத்தி வேண்டிய பொழுது வேண்டிய அமைச்சரவையை தனக்கு கீழ் வைத்திருக்கவும், வேண்டிய அமைச்சரை பதவி விலக்கவும் அதிகாரம் உடையவர். மக்களின் நம்பிக்கையினைப் பெற்று நன்கு பரீட்சயத்துக்கு உள்ளாகி இருப்பினும் அவரை மூன்றாவது முறையும் தெரிவு செய்ய முடியாது. (இந்நிலை 18 ஆம் சீர்த்திருத்தத்தினால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.)

1978 ஆம் ஆண்டு ஜனாதிபதித்துவ ஆட்சி தொடர்பான வாத பிரதிவாதங்கள். 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் அதிகப்படியான ஆசனங்களை கைபற்றிய ஐக்கிய தேசியக் கட்சியினரால் வரையப்பட்டு நடைமுறைக்கு வந்த இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பின் பிரதான அம்சங்களுள் ஒன்றாக நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதித்துவ ஆட்சி முறை காணப்படுகின்றது. ஐக்கிய தேசிய கட்சியினரால் ஏற்படுத்தப்பட்ட இந் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதித்துவ ஆட்சி முறைக்கு சார்பாகவும், எதிராகவும் பல வாத பிரதிவாதங்கள் இன்றுவரையும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதித்துவ ஆட்சி முறைக்கு ஆதரவாக பெருவாரியான கருத்துக்கள் ஐக்கிய தேசிய கட்சியினராலே முன்வைக்கப்பட்டு வருகின்றது. 1966 ஆம் ஆண்டில் விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தில் உரையாற்றிய J.R.ஜெயவர்தன அவர்கள் "எமது நிர்வாகமானது சட்டத்துறையின் ஆதரவில் தங்யுள்ளதால் சட்டத்துறைக்கும், நிர்வாகத் துறைக்கும் இடையிலான தொடர்பு நெருக்கமானதாக காணப்படுகின்றது. இத்தன்மையானது நிர்வாகத்துறைக்கு உகந்ததல்ல. இது பிரித்தானிய பாராளுமன்ற ஜனநாயக மாதிரியை ஒத்தது.

உலகில் பெரும்பாலான நாடுகளில் நிர்வாகத் துறையானது சட்டதுறையின் கெடுபிடிகளுக்கு அப்பாட்டுழக்களால் நேரடியாக தெரிவாகிறது. இங்கு நிர்வாக துறை சட்டத்துறையின் தயவில் தங்கியிருக்க வேண்டியதில்லை. தன்னிச்சையாக சுதந்திரமாக செயற்படும் வாய்ப்பு காணப்படுகின்றது. இவ்வாய்ப்பை பயன்படுத்தி இந்நாடுகள் வளர்ச்சி பாதையில் செல்கின்றன. எடுத்துக் காட்டாக ஐக்கிய அமெரிக்காவின் நிர்வாகத்துறை மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படுகின்றது. பிரான்ஸிய அரசியலமைப்பானது பிரித்தானிய, அமெரிக்க அரசியலமைப்பிலிருந்து வேறுபட்டு காணப்படினும் சட்டத்துறையின் கெடுபிடிகளுக்கு அப்பாற்பட்டு தன்னிச்ஸையாக செயற்படும் ஒரு துறையாகவே நிர்வாகத்துறை காணப்படுகின்றது. இதனால் அந்நாடுகள் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றன.

நிர்வாக துறையானது சட்ட துறையை சாராது மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படுவதனால் நிர்வாகத் துறையின் பதவி நிச்சயிக்கப்படுவதோடு, சட்டதுறையின் தூர நோக்கற்ற தன்மையிலிருந்து விடுபட்டு தன்னிச்சையாக செயற்படக்கூடிய வாய்ப்புண்டு. இத்தகைய நிர்வாக துறை அச்சமின்றி துரிதமாக செயற்படும் அதே வேளை ஒரு நாடு எதிர் நோக்கும் அரசியல், சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கு அத்தகைய நிர்வாகமே சிறப்பானது.

1975 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியின் வருடாந்த மகா நாட்டில் J.R.ஜெயவர்தன அவர்கள் உரையாற்றும் போது இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் அரசியல், சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வுக் காணக்கூடிய வகையில் ஆட்சி முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்ட வேண்டும். ஆட்சி முறையானது சட்டதுறையின் கெடுபிடிகளுக்கு அப்பாற்பட்டு செயற்படக்கூடிய நிறைவேற்று துறையை கொண்டதாக அமையப்பெறுதல் வேண்டும். எனவும் குறிப்பிட்டார். இதே கருத்து 1976 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியின் வருடாந்த மகா நாட்டிலும் கூறப்பட்டதோடு 1977ம் ஆண்டுக்கான தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சேர்த்து கொள்ளப்பட்டது.

1978 ஆம் ஆண்டு யாப்பு சீர்த்திருத்த மகா நாட்டில் J.R ஜெயவர்த்தன அவர்கள் உரையாற்றும் போது 1972 ஆம் ஆண்டின் ஜனாதிபதி பதவியானது எவ்வித முக்கியத்துவமும் அற்றது. காரணம் ஜனாதிபதிக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. ஜனாதிபதி என்ற சொல்லின் பொருள் தேசத்தின் தலைவன் என்பதாகும். அவ்விதமான தலைவன் மக்களால் தெரிவாக வேண்டும். ஆனால் 1972 ஆம் ஆண்டு யாப்பின் படி தேசத்தின் தலைவர் பிரதமரால் தெரிவாகிறார். அவ்விதம் தெரிவு செய்யப்படுபவர் பிரதமரின் தலைவராக தொழிற்பட முடியுமே தவிர உண்மையில் அவர் தேசத்தின் தலைவர் அல்ல. எனவே இத்தகைய ஜனாதிபதித்துவ ஆட்சி முறையை நீக்கி அதிகாரமிக்க ஜனாதிபதித்துவ ஆட்சி முறையை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

1978 இல் J.R.ஜெயவர்தன தேசிய அரசு பேரவையில் உரை நிகழ்த்திய போது இலங்கையில் நிலையானதும், பலமானதுமான நிர்வாகத்துறையை ஏற்படுத்த வேண்டியது அவசியம். எனவே புதிய அரசியலமைப்பில் தாபிக்கப்படும் நிர்வாகம் பலமானதாக இருக்க வேண்டும் இவ்விதமான நிர்வாகம், சட்டதுறை உறுப்பினர்களின் நலன்களுக்கு ஏற்ப தெரிவு செய்யப்படும் ஒரு நிர்வாகமாக இருக்கக்கூடாது. இந்த நிர்வாகம் 06 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படும் ஒரு துறையாக அமைதல் வேண்டும். இவ்விதம் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்துறையின் தலைவரே அமைச்சரவைக்கு தலைமை தாங்கவேண்டும்.

1972 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரால் வரைந்தளிக்கப்பட்ட அரசியல் அமைப்பில் தேசிய அரசு பேரவையானது சட்ட, நிர்வாக, நிதி அதிகாரத்தை தன்னகத்தே கொண்டது என்பதனை சுட்டிக்காட்டி யாப்பு சீர்த்திருத்த மகா நாட்டில் பங்கு பற்றாமல் இருந்ததோடு முதலாம் குடியரசு அரசியல் அமைப்பானது "வலுவேறாக்கற் கோட்பாட்டை குழிதோண்டி புதைத்து விட்டு அதன் சாமதியிலே கட்டப்பட்ட யாப்பு" என விமர்சித்தார். 1978 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஜனாதிபதித்துவ ஆட்சி முறையானது இலங்கையின் நிர்வாக விடயங்களை நிலையானதாகவும், பலமானதாகவும் மேற்கொள்ளக்கூடியதாக அமைவதை அறியமுடிகின்றது.

மேலும் அவசர தீர்மானங்களை எடுக்கவும், அவற்றை நடைமுறைப்படுத்தவும் சிறு ஜன குழுக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க கூடியதாகவும் அமைந்துள்ளது. தேசிய தலைவரான ஜனாதிபதி நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்படுவதால் தேசிய ஒருமைப்பாடு பேணிப் பாதுகாக்கப்படுவதாக கூறப்படுகின்றது. இக் கருத்துக்கள் ஜனாதிபதி ஆட்சிக்கு ஆதரவாக முன்வைக்கப்பட்டவைகளாகும். ஜனாதிபதித்துவ ஆட்சி முறைக்கு ஆதரவாக பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதனைப் போன்று அதற்கு எதிராகவும் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதனைப் போன்று முன்வைக்கப்பட்டும் வருகின்றன.

1978 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஜனாதிபதித்துவ ஆட்சி முறைக்கு எதிராக கருத்து வெளியிட்ட ஐக்கிய முன்னணியினர் (E.P) "1947 ஆம் ஆண்டு முதல் இது வரை காலமும் 30 ஆண்டுகள் மக்களின் வாழ்க்கையில் பரீட்சயமிக்கதும், பழக்கப்பட்டதுமான மந்திரி சபை ஆட்சியை நீக்கி விட்டு ஜனாதிபதித்துவ ஆட்சி முறையை ஏற்படுத்த முனைவது ஐக்கிய தேசிய கட்சியினர் தனி ஒரு நபரை அரசியலில் செல்வாக்கு மிக்கவராக மாற்றுவதற்கு மேற்கொள்ளும் முயற்சி என்றனர். மேலும் மந்திரியை ஆட்சி முறையின் குறைகளை சுட்டிகாட்டாது ஜனாதிபதித்துவ ஆட்சியை ஏற்படுத்துவது விந்தையானது என்றும் கூறினார். ஜனாதிபதித்துவ ஆட்சியானது சர்வதிகாரமிக்கது. காரணம் சட்ட, நிர்வாக, நீதி, பாதுகாப்பு ஆகிய நான்கு துறை அதிகாரங்களை கொண்டுள்ளதென அரசியல் விமர்சகர்களால் விமர்சிக்கப்படுகின்றது.

தொடரும்...

நெற்றிப்பொறியன்

# சூடு பிடித்திருக்கும் தேர்தல் களம் - 2015

இலங்கையில் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை நாடாளுமன்றத்துக்கான தேர்தல்கள் இடம்பெற்றமையும், அத்தேர்தல் ஒவ்வொன்றிலும் ஆட்சிமாற்றம் இடம்பெற்றிருந்தமையும் குறிப் பிடத்தக்கது. சுதந்திர இலங்கையில் ஐக்கியதேசியக்கட்சி ஆரம்பத்தில் ஆட்சிக்கு வந்தது. ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து விலகிய திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டார நாயக்க அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்னும் புதிய தொரு அரசியல் கட்சியை ஆரம்பித்துத்தேர்தல்களில் போட்டி யிட ஆரம்பித்த பின் இவ்விரு கட்சிகளுமே மாறி மாறி இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றின.

திரு.பண்டாரநாயக்ககொலையுண்ட பின் 1960இல் இடம்பெற்ற தேர்தலில் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. அவரின் இறப்பிற்குப் பிறகு அக்கட்சியின் தலைவியாக விளங்கிய திருமதி.ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்கள் பிரத மராகி உலகின் முதலாவது பெண் பிரதமர் என்னும் பெருமையையும் பெற்றுக்கொண்டார். இதன்பின் 1965இல் நடைபெற்ற தேர்தலின்போது ஐக்கியதேசியக்கட்சி திரு.டட்லி சேனாநாயக்க தலைமையில் ஆட்சியைக்கைப்பற்றி, அவர் பிரத மரானார். 1970இல் இடம்பெற்ற தேர்தலின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மீளவும் வெற்றிபெற்று லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (சோவியத்பிரிவு) என்பவற்றின் பங்கேற்புடன் ஐக்கிய முன்னணி அரசை அமைத்தது. இவ்வரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில், 1971இல் ஜே.வி.பி கிளர்ச்சி இடம்பெற்றமையும், 1972இல் புதிய அரசியல்நிர்ணயசபையின்மூலம் அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டு நாடு குடியரசு ஆக்கப்பட்டமையும், குடியரசில் தமிழர் மிக மோசமாகப் புறக்கணிக்கப்பட்டதனால் தமிழ்க் கட்சிகள் முன்னரைவிட அதிருப்தி அடைந்தமையும் தொடர்ந்து இவ்வாட்சிக்காலத்தில் தரப்படுத்தல் போன்ற கொடிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டமையும் தமிழ் இளையோரை என்றுமில்லாதவாறு எழுச்சிகொள்ளச் செய்தது. இக்கைங்கரியத்தில் இடது சாரிகளும்பங்கேற்றமைதமிழ்மக்களை ஒட்டுமொத்தமாக அவர்கள் கைவிட்டு இடதுசாரித்துவத்தை முழுமையா கச் காட்டிக்கொடுத்தமையைப் பிரதிபலித்தது.

இவ்வாறான அரசியல் நகர்வில் ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை ஆட்சிமாற்றம் உருவாவ தற்கான காரணிகள்



ஆய்வுக்குரியவையாகவுள்ளன. நாட் டின் பிரதான இரண்டு கட்சிகளும் தேசத்தின் சிறுபான்மையினங்களைத் தவிர்த்துக்கொண்டாலுங்கூட தாம் ஆட்சி அமைப்பதற்கு ஏதுவாகவுள்ள சிங்களமக்களின் அடிப்படைச்சீவனோ பாயத் தேவைகளைத் தம்மால் பூர்த்தி செய்யமுடியாது என ஆத்மார்த்தமான உள்ளீர்ப்பின்பாற்பட்டு உறுதிபட உணர்ந்தபோதுங்கூட தேர்தலில் வெற்றிபெறவேண்டுமென்ற ஒரே மன உந்துதலின்பாற்பட்டு ஆழ்மனம் தம்மால் முடியாது என எச்சரித்துக்கொண்டிருக்கும் வாக்குறுதிகளையுங்கூடத் தயங் காமல் அள்ளிவீசி ஆட்சியைப் பிடித்து விடுகின்றார்கள். இவ்வாறான ஒரு பின்னணியில் ஆட்சியைப் பிடிப்பவர்களால் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் மக்கள் தாம் ஏமாற்றப்பட்டுவிட்டதை உணர்ந்து அடுத்த தேர்தலில் மற்றைய கட்சியை ஆட்சியில் அமர்த்துகின்றார்கள். மற்றையகட்சியும்இதேசமநிலைப்பட்ட நிலையைக்கொண்டு வாக்குறுதிகளை அள்ளிவீசி அட்டகாசமாக ஆட்சிக்கு வருவதால் அக்கட்சியினராலும் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த முடியாத நிலையெழுவது இயல்பானதே.

அடிப்படையில் இலங்கை அரசியலின் பாற்பட்ட இப்பெரும் பலவீனமும் மக்களுக்கு நிரந்தர விமோசனத்துக்கான அரசியல் கண்ணோட்டம், தெரிவு என்பவை இல்லாமையும் தேர்தல் நேரத்தின்போது மட்டும் அரசியல் தொடர்பில் மிகக்குறைந்த வீச்சில் அலட்டிக்கொண்டு தம்மால் செய்யக்கூடிய புள்ளடியை மாற்றிஇடல் என்னும் புண்ணியத்தை மட்டும் தொடர்ந்து செய்துகொண்டு தாமா கவே தம்மை ஏமாளிகளாக்கி மிக வும் பரிதாபமான நிலைக்கு ஆளாகின்றார்கள். இவ்வாறான ஒரு பின்னணியாலேயே ஒவ்வொரு தேர்தலின்போதும் இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டுக்கொண்டு வந்தது.

முப்பது வருட யுத்தத்தின் காரணமாக இந்நிலையில் தளர்வு உருவான போதுங்கூட அடிப்படை முழுமையாக அற்றுப்போகவில்லை. இதனால்தான் மஹிந்தவைச் சிங்கள மக்கள் நிராகரித்து மைத்திரியிடம் ஆட்சியை ஒப்படைத்தார்கள். இவ்விடத்தில் வழமையாக இடம்பெறுவது போல் மஹிந்தவை ஏற்றுக்கொண்ட சிங்கள மக்கள் தான் அவரை நிராகரித்தும் உள்ளார்கள். இவ்விடயத்தில் தமி ழரினதும், இஸ்லாமியரினதும் வாக்குகள் மைத்திரிக்கு அதிகளவில் கிடைத்தபோதுங்கூட ஏற்றுக்கொண்ட சிங்கள மக்களின் நிராகரிப்பு என்னும் வழமையான பல்லவிக்கு மஹிந்தவும் தப்பிக்கொள்ளவில்லை. தற்போது ஏற்றுக்கொண்ட மக்களின் வெறுப்பு என்னும் அனுபல்லவிக்கு மைத்திரியும் ஆளாகியிருப்பதால் எதிர்வரும் 2015க்கான தேர்தலின் காரணமாக ஆட்சிமாற்றம்ஒன்றுஉருவாவதற்கான ஏதுநிலையுண்டென ஆய்வுசெய்வதில் அர்த்தமுண்டு.

2015க்கான தேர்தலின் பெறு பேறுகள் தொடர்பில் சமகால ஆய்வும் பிரதானமானது. அரசின் 100நாள் வேலைத்திட்டம் பிசுபிசுத்தமை. அரசுக்கு ஆதரவளித்துத் தேசிய நிறைவேற்றுச் சபையிலும் பங்கேற்ற ஜே.வி. பியினரின் அதிருப்தி. இந்த அதிருப்திகளோடு மஹிந்தவுக்கு வழமையாகவே ஆதரவளித்து அவரது அமைச்சரவையிலும் பங்கேற்ற இடதுசாரிகளின் தற்போதைய மஹிந்த ஆதரவு நிலைப்பாடு இணையும்போது வெளிக்கிளம்பும் உணர்வலைகள் என்பவை இவ்வாய்வின் போதும் மிக வும் வலுவானவையாகவுள்ளன.

அத்தோடு அரசாங்க ஊழியர்களின் இரு கட்டச் சம்பள உயர்வு தொடர்பிலும் மைத்திரியின் கபடம் அம்பலத்துக்கு வந்துள்ளது. முதற்கட்ட உயர்வில் ஒரு பகுதி மஹிந்தவின் காலத்திலேயே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனினும் இது இருட்டடிப்புச்செய்யப்பட்ட பின்னர் தான் வெளிச்சத்துக்கு வந்தது. இதனால் அடுத்த கட்டசம்பளஉயர்வு என்பது வெறும் பம்மாத்தே என்னும் பாமர உணர்வும் பரவும் வாய்ப்பும் எதிர் நோக்கப்பட்டுக்கொண்டேயிருக்கின் றது.

**வீரப்பதி விநோதன்**

---

**ஜோன் கெரியின் இலங்கைப் பயணமும், வெளிவராத உண்மைகளும்...**

**கடந்தவாரத்தொடர்ச்சி...**

இலட்சம் லட்சமாக மக்கள் கொல்லப்பட்டனர். சர்வாதிகளையும், கொடுங்கோலர்களையும் வளர்த்து ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கிற்று. இனிமேல் ஆசியாவில் தாம் கவனம் செலுத்த வேண்டும் என ஆசிய பசுபிக் கட்டளை என்ற கடற்படைப்பிரிவை ஆரம்பித்து ஆசியக் கடற்பிராந்தியத்தை இராணுவமயப்படுத்திற்று. வன்னிப் படு கொலைகளின் பின்னணியில் செயற்பட்டு தெற்காசியாவில் மனிதப்பலிகளை ஆரம்பித்து வைத்தது. உலகத்தில் குற்றச்செயல்கள் மிகக்குறைவாகக் நடைபெறும் நாடுகளில் ஒன்றான மாலை தீவில் இந்தியாவுடன் இணைந்து சதிப்புரட்சியை ஆரம்பித்து வைத்தது. இந்தியாவில் ஒரு புறத்தில் இந்து பாசிசத்தையும் மறு புறத்தில் இஸ்லாமியத் தீவிரவாதத்தையும் உருவாக்கத் துணை போயிற்று. இலங்கையில் அமெரிக்காவின் அனுசரணையுடன் கொலைகளுக்காக வளர்க்கப்பட்ட மகிந்த ராஜபக்சவை ஆட்சியிலிருந்து அகற்றிவிடு தனது பொம்மைகளை ஆட்சியிலமர்த்த ஜோன் கெரி நேரடியாகவே தலையிட்டார்.

சர்வாதிகாரி மகிந்த ஆட்சியிலிருந்து விலக மறுத்த போது கெரி தொலைபேசியில் மகிந்தவை மிரட்டினார் என்ற செய்திகள் வெளியா கின. உலகத்தின் தெற்காசிய மூலையின் கண்ணீர் போலக் காட்சி தரும் இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கு அமெரிக்காவின் ராஜாங்கச் செயலாளர் திடீர்ப் பயணம் செய்வது என்பது அமெரிக்க அரசின் நேரடித் தலையீட்டின் முன்னறிவிப்பாகும். அழிவிற்கான முன்னெச்சரிக்கையாகும். தெற்காசியாவில் தலையிடும் அமெரிக்காவின் திட்டத்திற்கு இலங்கையே தளமாகப் பயன்படுத்தப்படும்.

வியட்னாம் ஆக்கிரமிப்பு யுத்தக் குற்றவாளி ஜோன் கெரி பதக்கம் பெறுகிறார். வியட்னாம் யுத்தத்தின் போது தாய்லாந்து நாடு அமெரிக்காவின் பின் தளமாகச் செயற்பட்டது. அமெரிக்க இராணுவம் தாய்லாந்தின் கலாச்சாரத்தையே தலை கீழாகப் புரட்டிப்போட்டது. அமெரிக்க இராணுவம் தாய்லாந்தில் தங்கியிருந்த போது பெண்களைப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தியது. பின்னர் பாலுறவைத் தொழிலாக மாற்றியது. இன்றும் தாய்லாந்தின் பிரதான தேசிய வருவாய்களில் ஒன்றாக பாலியல் காணப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவம் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவது ஆதாரபூர்வமாக நிறுவப்பட்டது. உலகம் முழுவதும் அமெரிக்க அரசு நடத்தும் நரக வேட்டையை இலங்கையிலும் அதே வேகத்தில் ஆரம்பிக்கத் தலைப்படுகிறதா என்ற அச்சம் எழுந்துள்ளது. ஜோன் கெரி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இதன் பின்புலத்திலுள்ள ஆபத்தை ஆராய்வதைத் தவிர்த்து ஜோன் கெரியின் காலடியில் விழுந்து வணங்கத் தயாராகும் தமிழர்களுக்கு உலகில் போராடும் எந்த சமூகமும் ஆதரவு வழங்க முன்வராது.

ஜோன் கெரி சார்ந்த நாட்டின் ஆதரவுடன் நடைபெற்ற வன்னிப் படு கொலைகளின் போது கணவரை இழந்த இராணுவத்தின் மனைவியரை ஜோன் கெரி சந்தித்து ஆறுதல் கூறவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகின்றன. இதனை அறிந்த ஒபாமாவிற்கான தமிழர்கள் அமைப்பு என்ற ஏகாதிபத்திய ஒட்டுக்குழு தமிழர்களையும் சந்திக்குமாறு ஜோன் கெரிக்கு அழைப்பு விடுத்துள்ளது. ஜோன் கெரிக்கு போர் புதியதல்ல, வியட்னாமில் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் ஈடுபட்டதற்காக பதக்கம் பெற்றவர். 1971 ஆம் ஆண்டு வியட்னாமிய யுத்தத்திற்கு எதிராகச் செயற்பட்டதாகக் கூறும் ஜோன் கெரி, ஜோர்ஜ் புஷ் இற்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது தனது ஆக்கிரமிப்பு யுத்தத்தைப் பிரச்சார சாதன மாகப் பயன்படுத்தினார்.

**பலாலி இராணுவ முகாமில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகள்.**

அமரிக்க அரச விமானப்படையின் உத்தியோகபூர்வ இணையத்தில் வெளியாகியிருக்கும் வாசகங்களின் தமிழாக்கம்:- தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற மிருகத்தனமான பயங்கரவாத அமைப்பிற்கு எதிராக இலங்கை அரசாங்கம் போராடி வெற்றிபெற்றது. போரின் முடிவில் மில்லியன் கணக்கான கண்ணி வெடிகள் மோதல் நடைபெற்ற இடங்களில் விட்டுவைக்கப்பட்டிருந்தன. இலங்கையினதும், ‘சர்வதேச சமூகத்தினதும்’ போருக்குப் பின்னான பிர தான முயற்சிகளில் கண்ணிவெடிகளை அகற்றி அந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்களைக் குடி யேற்றுவதும் ஒன்றாகும்.”

இலங்கை அரச படைகளுடன் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வது நன்மை தருகிறது என்கிறார் இலங்கையில் தங்கியிருக்கும் அமரிக்க விமானப்படையைச் சேர்ந்த ஜோசுவா கென்னடி. இலங்கை அரசபடைகளுக்கு மருத்துவ தொழில் முறையைக் கற்பிப்பதற்காக தாம் அங்கு தங்கியிருப்பதாக அமரிக்க அரச படை யின் மற்றொரு கொமாண்டர் கூறுகி றார். யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்றவேண்டும் என்று மக்களும் உலகம்முழுவதும் ஜன நாயக முற்போக்கு சக்திகளும் போராடும் அதேவேளை யாழ்ப்பாணத்தில் அமரிக்க இராணுவத்தின் பிரசன்னத்தை நெருக்கமாக அவதானிக்கக்கூடியதாக உள்ளது என்று குறித்த சில பகுதிகளின் மக்கள் தெரிவிக்கிறார்கள்.

பசுபிக் ஏஞ்சல் என்ற அமரிக்க இராணுவத்தின் உதவிப் பிரிவைச் சேர்ந்த பொறியியலாளர்கள் இலங்கையில் தங்கியிருப்பதாக அமரிக்க அரச படைக ளின் பசுபிக் பிராந்திய இணையம் கூறுகிறது. கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகியவற்றைச் சேர்ந்த பொறியியலாளர்கள் அங்கு தங்கியிருப்பதாக கூறும் இணையம், பாடசாலைகளைப் புனரமைக்கும் பணி களிலும் கட்டுமானப் பணிகளிலும் ஈடுபட்டு குழந்தைகளுக்கு கல்வி பெற யாழ்ப்பாணத்தில் வசதி செய்கிறோம் என்கிறது அமரிக்க அரச படைகளின் இணையம்.

தொடரும்...

**மறவன்**

# தேர்தலில் ஆயுதக்கட்சிகள் தனித்து போட்டியிட்டால் அவர்களின் வெற்றி உறுதிசெய்யப்படும்

கடந்தவாரத்தொடர்ச்சி...

வடகிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த மக்கள் மத்தியில் மட்டுமன்றி முஸ்லிம்கள் இடத்திலும் பெரும் தாக்கத்தை இம்மொழிப்பிரச்சினையும், இனக்கலவர நிகழ்வுகளும் ஏற்படுத்தின. அதேவேளை வட இலங்கையில் வாழ்ந்த தலித் மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க தாக்கம் எதையும் செலுத்தவில்லை. காரணம் அவர்களது சொந்த கிராமங்களிலேயே அவர்கள் எதிர்கொண்டு வாழ்ந்த சாதி ஒடுக்குமுறைகள் வெளியுலக நாட்டம் குறித்து அவர்களை அக்கறை கொள்ளச்செய்யவில்லை. பாடசாலைகளுக்கு அனுமதி மறுப்பு, ஆலயங்களுக்குள் நுழைவு மறுப்பு, பொதுக்கிணறுகளில் தண்ணீர் அள்ளத்தடை, பஸ் வண்டிகளில் அமர்ந்து செல்லமுடியாது, பெண்கள் மேற்சட்டை அணியமுடியாது, பொது வீதிகளில் சுதந்திரமாக நடமாட முடியாது என்று எண்ணற்ற ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு வாழ்ந்தவர்கள் தலித்மக்கள்.

இவர்களுக்கு மொழிச்சட்டம் குறித்தோ, கொழும்பில் நடந்த இனக்கலவரம் குறித்தோ, அரசகரும மொழி ஆங்கிலமா, சிங்களமா என்பது பற்றி அக்கறை கொள்ள அவசியம் இருக்கவில்லை. தென்னிலங்கை இனக்கலவரங்களை இவர்கள் பார்த்தவிதம் “கொழும்பில வேளாம் ஆட்களுக்கு அடிக்கிறாங்களாம்” என்பதோடு முற்றுப்பெற்றது. எனவே யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தலித்மக்கள் இந்த தாயகக்கோட்பாட்டு சிந்தனைக்குள் உள்ளீர்க்கப்படுவதென்பது சற்று சிரமமான காரியமாகவே இருந்தது. 1965 களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் உருவாகிய சாதிய எதிர்ப்பு வெகுஜனப்போராட்டங்கள் ஒரு ஆயுத மோதலாகவே உக்கிரமடைந்தன. சங்கானை, மட்டுவில், நிச்சாமம், கன்பொல்லை என்று பல இடங்களில் போராட்டக்களங்கள் சூடுபிடித்தன.

தீண்டாமைக்கெதிராக ஆலயப்பிரவேச முயற்சிகளிலும், தேனீர்கடை பிரவேச முயற்சிகளிலும் சம உரிமைகோரி தலித்மக்கள் கலகங்களில் ஈடுபட்டனர். இப்போராட்டங்களின் பின்புலங்களில் இடதுசாரி அணிகள் இருந்த அதே வேளை தமிழ் மக்களின் ஒற்றுமையும் தாயகமும் வென்றெடுக்கப்பட வேண்டும் என்று குரல் எழுப்பிவந்த தமிழரசுக்கட்சியினரோ தலித் விரோத நிலைப்பாட்டினையே கொண்டிருந்தனர். ஆலய நுழைவுப்போராட்டங்களில் கைதான வெகுஜனப் போராளிகளுக்காக அப்புக்காத்துகள் நிறைந்த தமிழரசுக்கட்சியினர் யாரும் வாதாட முன்வராத நிலையில் சிங்கள இடதுசாரிகளின் வழக்கறிஞர்களே தாழ்த்தப்பட்ட மக்கள் போராளிகளின் நியாயங்களுக்காக வாதாட தென்னிலங்கையில் இருந்துயாழ்ப்பாணம் வந்தனர். தமிழரசுக்கட்சியினரின் ஆதிக்கசாதி சார்புநிலைப்பாடு அவர்களை போலியான தமிழ்த்தேசியவாதிகளாக அம்பலப்படுத்தியது. 1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி, தமிழ்காங்கிரஸ் போன்ற கட்சிகளின் பெருந்தலைவர்கள் அனைவரும் தோல்வியுறுவதற்கு மேற்படி சாதி எதிர்ப்புப்போராட்ட காலங்களில் அவர்கள் எடுத்த தலித் விரோத நிலைப்பாடே வழிவகுத்தது.

சுருங்கச்சொன்னால் வட இலங்கையில் இடம்பெற்ற இந்த சாதியெதிர்ப்பு போராட்டமானது செல்வநாயகம் போன்ற தலைவர்கள் கட்டியமைக்க நினைத்த தாயகக் கோட்பாடு என்பது போலியானது என்பதை நிரூபித்தது. இந்த நிலையில் 1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் கொண்டுவந்த கல்விதரப்படுத்தல் சட்டமானது இலங்கை அரசியலில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இச்சட்டம் அப்பட்டமாகவே தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என உணரப்பட்டபோது அது தமிழ் மக்கள் அனைவரையும் ஓரணிக்கு தள்ளியது. படித்த இளம் சமூகத்தினர் மத்தியில் எதிர்காலம் பற்றிய பெரும் கேள்விகளை உருவாக்கி உணர்வுகளை கிளறிவிட்டது. அதுவரை காலமும் இல்லாத அளவிற்கு இளைஞர்களும், மாணவர் சமூகத்தினரும் அரசியலில் அக்கறை கொள்ள வேண்டிய தேவையை அது உணர்த்தியது. குறிப்பாக யாழ்ப்பாணத்து இளைஞர்கள் அரசுக்கு எதிராக கிளர்ந்தெழ இச்சட்டம் வழிவகுத்தது.

இந்த சூழலை சரியாகப் பயன்படுத்திய தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரசுக்கட்சி போன்றவை தமது தாயகக்கோட்பாடு ஒன்றேஇதற்கெல்லாம் தீர்வு என்று இளைஞர்களை நோக்கி அரசியலில் வன்முறையை தூண்டிவிட ஆரம்பித்தனர். யாழ்ப்பாண சமூகத்தில் இருந்துவந்த சாதிப்போராட்ட கொந்தளிப்பு நிலைமைகளை மறைத்துவிடவும், அவற்றினை இரண்டாம் பட்சமாக்கவும் இந்த கல்விதரப்படுத்தல் சட்டம் வாய்ப்பளித்தது. ஆனபோதிலும் அரசாங்கம் மொழிவாரித்தரப்படுத்தலை அடுத்தாண்டிலேயே நீக்கி மாவட்ட ரீதியிலான ஒதுக்கீட்டுத்திட்டங்களை முன்மொழிந்தது. இதனால் கல்விவாய்ப்புக்கள் அதிகம் இருந்த யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, கம்பஹா போன்ற மாவட்ட மாணவர்களுக்கு இருந்துவந்த பல்கலைக்கழக வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டது. பின்தங்கிய மாவட்ட மாணவர்களுக்கு ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டன. இதன்படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்த பின்தங்கிய மாவட்டங்களான மட்டக்களப்பு, அம்பாறை திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி போன்ற பிரதேச மாணவர்கள் முதன்முறையாக பல்கலைக்கழகங்களில் நுழையும் வாய்ப்புகளைப் பெற்றனர்.

இந்த உண்மைகள் அனைத்தையும் மறைத்து யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்கம் எதிர்கொண்ட பாதிப்பு ஒன்றே அனைத்து தமிழர்களுக்குமான பாதிப்புமென பொய்யான பிரச்சாரங்களை தமிழ் தலைவர்கள் முன்னெடுத்தனர். 1970 ஆண்டு தமிழ் மாணவர் பேரவை, 1973 ஆம் ஆண்டு தமிழ் இளைஞர் பேரவை போன்றவை உருவாகுவதற்கு இந்த கல்விதரப்படுத்தல் சட்டம் பற்றிய பிரச்சினையே அடிகோலாயிற்று. 1970 ஆண்டு சோமவீர சந்திரசிறி என்னும் அமைச்சரின் காருக்கு சிவகுமாரன் எனும் இளைஞன் குண்டுவைத்ததில் இருந்து தாயகக்கோட்பாடு முதன்முறையாக வன்முறை நோக்கி காலடி எடுத்துவைத்த வரலாறு ஆரம்பித்தது. அதே வேளை 1972 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம் கொண்டுவந்த குடியரசு யாப்புக்கு எதிரான (alfred duraiappah) போராட்டங்களை தமிழரசுக்கட்சி வடகிழக்குப் பகுதிகளில் முன்னெடுத்தது. 1970 ஆண்டுத் தேர்தலில் தோல்வியுற்றிருந்த தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழரின் தாயகம் நோக்கிய போராட்டங்களை வென்றெடுப்பதற்காக தமிழர் கூட்டணி எனும் அமைப்பை இவ்வாண்டில் உருவாக்கினர். இவ்வமைப்பே பின்னர் தமிழர் விடுதலைக்கூட்டணியாக மாற்றம் பெற்றது.

1974 ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட தமிழாராட்சி மாநாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் போது 9 பொதுமக்கள் மின்சாரம் தாக்கி பலியானார்கள். இதற்கு சிங்கள பொலிசாரே காரணம் என குற்றம்சாட்டிய தமிழர் விடுதலைக்கூட்டணி வடகிழக்கு எங்கும் அரசாங்கத்திற்கு எதிரான பெரும் உணர்வலைகளை பரப்பிவிடுவதில் வெற்றிகண்டது. 1974 இல் பல குண்டுவெடிப்பு சம்பவங்களின் சூத்திரதாரியான சிவகுமாரன் பொலிசாரால் தேடப்பட்டு சுற்றிவளைக்கப்பட்ட போது நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்ட நிகழ்வு தாயக விடுதலைக்கான முதலாவது தற்கொலை என்று இன்றுவரை தமிழ்த்தேசியவாதிகள் சொல்லிவருகின்றார்கள். 1975 இல் யாழ்ப்பாண மேயராக இருந்த அல்பிரட் துரையப்பா பிரபாகரனால் சுட்டுக்கொல்லப்பட்ட நிகழ்வு, தாயக விடுதலைக்காக துரோகி பட்டம் சூட்டி பல்லாயிரம் பேரை பலியெடுக்கும் வரலாற்றை தொடங்கிவைத்தது.

தமிழ்த்தலைவர்கள் கட்டியமைத்து வந்த மரபுவழித்தாயகம் என்கின்ற கருத்தாக்கம் நோக்கி அதனை வென்றெடுப்பதற்காக நேரடியாகவே ஆயுத வன்முறை ஒன்றே சரியான வழியென்று தமிழர் விடுதலைக்கூட்டணி முதன்முறையாக அரசியல் தீர்மானங்களை நிறைவேற்றியது. 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானம் “வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுடாக வளவை நதியில் இருந்து சிலாபம் வரைக்கும் தெற்கு மேற்கு பகுதிகளிலும், நடுப்பக்கத்திலும் சிங்கள மக்களும், வடக்கு கிழக்கு வடமேற்கு பகுதிகளில் தமிழ் மக்களும் வாழ்ந்து இந்த நாட்டின் ஆளுகையை சிங்கள நாட்டினமும், தமிழ் நாட்டினமும் தமக்குள் பகிர்ந்து வந்துள்ளது” எனவும், “இத்தீவில் உள்ள தமிழ் ஈழ நாட்டினத்தின் நிலையான வாழ்வை பாதுகாப்பதற்கு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு சுதந்திர இறைமையுள்ள மதச்சார்பற்ற சோசலிச தமிழீழ அரசை மீள்வித்து புனரமைப்பு செய்வது தவிர்க்கமுடியாததாகி விட்டது” எனவும், “சுதந்திரத்திற்கான புனிதப்போரில் தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணிக்க முன்வருமாறும், இறைமையுள்ள சோசலிச தமிழீழ அரசு என்ற இலக்கை அடையும்வரை தயங்காது உழைக்குமாறும் தமிழ் தேசிய இனத்திற்கு பொதுவாகவும், தமிழ் இளைஞர்களுக்கு சிறப்பாகவும் இம்மாநாடு அறைகூவல் விடுக்கிறது” எனவும் தெரிவித்தது.

இம்மாநாட்டைத் தொடர்ந்து வடகிழக்கு பிரதேசங்களில் வன்முறையை நோக்கிய வழியொன்றே தமிழீழ மரபுவழித்தாயகத்தை வென்றெடுப்பதற்கான பாதையென பெரும்பாலான மக்கள் நம்பினர். இதுவரை காலமும் தாயகம் எனக்குறிப்பிடப்பட்டு வந்த கருத்தாக்கம் முதன்முறையாக தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லப்பட்டவர்களால் அரசியலில் தமிழீழம் என அடையாளப்படுத்தப் பட்டதோடு அதுவே தமிழ் மக்கள் அனைவருக்குமான விடுதலையை பெற்றுத்தரும் என முன்மொழியப்பட்டது. இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானம் ஏற்படுத்திய தாக்கம் ஒருபுறம் தமிழர் விடுதலைக் கூட்டணியை 1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் பெரும் வெற்றிவாகை சூடவும் மறுபுறம் வடகிழக்கு வாழ் இளைஞர்களை தாயக மீட்பு போரில் வன்முறை நோக்கி தள்ளிவிடவும் வழிகோலியது.

தமிழர் விடுதலைக்கூட்டணி உருவாக்கத்தின்போது இலங்கை வாழ் தமிழர்கள் எதிர்கொண்ட பிராஜாவுரிமை பிரச்சினை, குடியேற்ற பிரச்சினை, கல்விதரப்படுத்தல் பிரச்சினை, மொழிப்பிரச்சினை போன்ற அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டே தோட்டத்தொழிலாளர் காங்கிரசும் ஒன்றிணைந்திருந்தது. ஆனபோதிலும் இவையனைத்துக்குமான தீர்வு மரபுவழித்தாயகத்தின் விடுதலையூடாகவே பெற்றுக்கொள்ள முடியும் என வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது மலையக மக்களின் தலைவராக இருந்த தொண்டமான் இந்த தாயகக் கோரிக்கை என்பது வடகிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் எமது “மலையக மக்களுக்கு பொருத்தமற்ற முடிவு” என தெரிவித்து அதிலிருந்து வெளியேறினார். தேர்தல் வெற்றிகளை நோக்கி பிரச்சார அணிதிரட்டலுக்காக அவசர அவசரமாக செய்யப்பட்ட இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானமானது உண்மையிலேயே ஒரு தாயகக் கோட்பாட்டை வரையறுத்து அதற்கான வேலைத்திட்டங்களை ஒழுங்குசெய்து திட்டமிடப்பட்ட வகையில் நிறைவேற்றப்படவில்லை. கடந்தகாலத்தில் ஏற்பட்ட அரசியல் தோல்விகளை மேவி தமிழ் மக்களை ஓரணியில் திரட்டுவதற்கான பிரச்சார உத்தியாகவே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஏனெனில் ஒரு இனத்தின் தாயகக் கோட்பாடு வரையறுக்கப்படும்போது அந்த தமிழீழத்திற்கென ஒரு தேசிய சின்னத்தைக்கூட மக்கள் முன் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் முன் வைக்கவில்லை. 1982 ஆம் ஆண்டு உலகத்தமிழீழ மாநாடு என்றுசொல்லி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடாத்தப்பட்ட மாநாட்டில் தமிழீழக்கொடி என அடையாளப்படுத்தப்பட்டு ஏற்றப்பட்ட கொடி தமிழர் விடுதலைக் கூட்டணியினருடைய சூரியன் கொடியே யாகும். யாழ்ப்பாண தமிழாராட்சி மாநாட்டிலும் அந்த மாநாட்டின் நோக்கங்கள் பெறுமதிகள் அனைத்தையும் கேலிக்கூத்தாக்குவது போல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சூரியன் கொடியே அலங்கார வளைவுகள் எங்கும் பறக்கவிடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் எழுப்பப்பட்ட தமிழீழ விடுதலைக்காக முதல் தற்கொலைப் போராளியாக சிவகுமாரனுடைய உருவச்சிலையில் கூட சூரியன் கொடியே பொறிக்கப்பட்டிருந்தது. பின்னர் வந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் தமிழீழத்திற்கான தேசியக்கொடியாக புலிகள் தமது புலிச்சின்னத்தை எங்கும் வியாபிக்கச் செய்வதில் வெற்றிகண்டனர்.

காலத்திற்கு காலம் மாறிவந்த அல்லது மக்களிடம் செல்வாக்கு செலுத்திய அரசியல் கட்சிகளின், இயக்கங்களின் கொடிகளே தமிழீழ தாயகத்திற்கு அவ்வப்போது பொருத்தப்பட்டன என்பது நகைப்புக்குரியது. இதேபோன்று சிலாபத்தில் இருந்து வளவைகங்கை வரை என்று சுந்தரலிங்கம் சொன்ன வார்த்தைப்பிரயோகத்தைத் தாண்டி வேறெந்த தாயக எல்லைகள் குறித்த வரையறைகளையும் தமிழினத்தின் அறிஞர்குழாம் இணைந்தோ, ஆய்வுகளின் பின்னரோ முன்வைக்கவில்லை. நியூயோர்க் உலகத்தமிழீழ மாநாட்டில் முன்வைக்கப்பட்ட தமிழீழ எல்லை கிழக்குக் கரையோரமாக சென்று அம்பாந்தோட்டையில் முடிவுற்றிருந்தது. யாழ்ப்பாணத்தில் வைத்து சங்கிலியனின் வாள் என ஒன்றை தூக்கி காட்டி இந்த சங்கிலியன் ஆட்சியை மீட்போம், இந்த நல்லூரில் தமிழீழ பாராளுமன்றம் அமைப்போம் என்றும், கிழக்குமாகாணத்துக்கு வந்து திருமலையே தமிழீழத்தின் தலைநகரம் என்றும் முன்னுக்கு பின் முரணாக பொறுப்பற்ற முறையில் பேசி திரிந்தார் அமிர்தலிங்கம். மேற்படி தகவல்கள் இந்த தமிழீழம் என்பது அவரவரது அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு கற்பனைகளிலேயே சிக்கி சீரழியத் தொடங்கியிருந்தது என்பதையே எடுத்துக்காட்டுகின்றன.

மரபுவழித்தாயகத்துக்கான அவசியம் என்பது குறித்து எல்லா தமிழ் மக்களையும் ஓரணியில் திரட்டுவதில் தமிழ் தலைவர்கள் முன்வைத்த காரணங்களை விட 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா செய்த நடவடிக்கைகளே முக்கிய காரணமாகும். அவர் கொண்டுவந்த பயங்கரவாத தடைசட்டம், அவசரகால தடைசட்டம் போன்றவையும், வடகிழக்கில் களமிறக்கப்பட்ட சிங்கள இராணுவத்தினரின் கெடுபிடிகளுமே தமிழ் இளைஞர்களை மரபுவழிதாயகத்திற்கான போராட்டத்திற்குள் தள்ளிவிடுவதில் முக்கிய பங்கு வகித்தன. இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பிருந்தே தமிழர்களின் மரபுவழித்தாயகத்தை ஒட்டிய சிந்தனைகள் முளைவிடத் தொடங்கியிருந்தது.

சுழியோடி

தொடரும்...

# பிராந்தியச் செய்திகள்



வித்தியா படுகொலை - சௌக்கிய பராமரிப்பு பீட மாணவர்களும் மெழுகுவர்த்தி ஏற்றி பிரார்த்தனை

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையினை கண்டித்து கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு பீட மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தினை நடாத்தியதுடன் மெழுகுவர்த்தியேற்றி பிரார்த்தனையும் மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு அரசடியில் உள்ள சௌக்கிய பராமரிப்பு பீடத்துக்கு முன்பாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்குகொண்டனர்.



## இராணுவ ட்ரக் வண்டி மோதி இருவர் பலி



பொலன்னறுவை, ஜயன்திபுர பிரதேசத்தில் காருடன் இராணுவ ட்ரக் வண்டி மோதி விபத்துக்குள்ளாகியதில் காரில் பயணம் செய்த இருவர் பலியாகியுள்ளனர். உயிரிழந்த இருவரும் கணவன் மனைவி என தெரியவந்துள்ளது. எனினும் இவர்களின் இரு பிள்ளைகள் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர். இவ்விபத்திற்கு காரணமான இராணுவ ட்ரக் வண்டியின் சாரதியை பொலிசார் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலன்னறுவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொலன்னறுவை மட்டக்களப்பு பிர்தான வீதியில் மரதன்கடவல 62 கட்டைப்பகுதியில் காருடன் இராணுவ ட்ரக் வண்டி நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் காரில் பயணம் செய்த கணவன் மற்றும் மனைவி உயிரிழந்துள்ளனர். இச்சம்பவம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தில், அவர்களது 16 வயது மதிக்கதக்க மகன்கள் இருவரும் காயங்களுடன் உயிர்தப்பியுள்ளதாகவும் அவர்கள் தற்போது பொலன்னறுவை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு விபத்துக்குள்ளாகியவர்கள் பொலன்னறுவை ஜயன்திபுர பகுதியை சேர்ந்தவர்களாவர். விபத்திற்கு காரணமாக இருந்த இராணுவ ட்ரக் வண்டியின் சாரதியை காலை கைது செய்துள்ளதாகவும் பொலன்னறுவை பொலிஸார் தெரிவித்ததோடு மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ் தீவகத்தில் மீண்டும் அதிர்ச்சி - 20 வயதுப் பெண் மாயம்



நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையை சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான 20 வயது இளம்பெண்ணை காணவில்லையென ஊர்காவற்றுறை பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நிரோஜினி (20) என்பவரே காணாமல் போயுள்ளார். இவரது தாயார் இந்த முறைப்பாட்டை செய்துள்ளார். கடந்த 11ம் திகதி இவர் வீட்டிலிருந்து புறப்பட்டு சென்றுள்ளார். முல்லைத்தீவில் உள்ள தனது கணவரை பார்ப்பதற்காக செல்வதாக கூறி, இரண்டரை வயதான தனது குழந்தையை தாயாரிடம் ஒப்படைத்து விட்டு சென்றிருக்கிறார். ஆனால் அவர் முல்லைத்தீவிற்கும் வந்து சேரவில்லையென அவரது கணவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே தீவகத்தில் வித்தியா காணாமல் போய், பின்னர் சடலமாக மீட்கப்பட்ட கொந்தளிப்பு அடங்குவதற்கு முன்னர் மீண்டும் அந்த பகுதியில் இளம்பெண்ணொருவர் காணாமல் போனது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நெல்லியடியில் பேரூந்து நிலையம் திறந்துவைப்பு



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட நெல்லியடியில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின் நிதி அனுசரணையுடன் சென்ற ஆண்டு அடிக்கல்நாட்டப்பட்டு சுமார் 3.5மில்லியன் செலவில் அமைக்கப்பட்டுள்ள நெல்லியடி மத்திய பேரூந்து நிலையமானது 21-05-2015 வியாழன் மாலை 4:30 மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சர் உயர்திரு. சி.வி.விக்னேஸ்வரன் அவர்களும் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் அவர்களும் இணைந்து மக்கள் பாவனைக்காக திறந்துவைத்தனர்.

நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான திரு.வே.சிவயோகன், திரு.கேசவன் சயந்தன், திரு. பாலச்சந்திரன் கஜதீபன், திரு.சி.சுகிர்தன், திரு.இ.ஆனோல்ட், திரு.அயுப் அஸ்மின் ஆகியோரும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் திரு.எஸ்.சத்தியசீலன் அவர்களும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு.ஆர்.வரதீஸ்வரன் அவர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திரு.பொ.வியாகேசு அவர்கள் நிகழ்வை தலைமை தாங்கினார்.

### யாழ். நீதிமன்ற தாக்குதலை சட்டத்தரணிகள் சங்கம் கண்டிக்கிறது

**யாழ்ப்பாண நீதிமன்றத்தை தாக்கியவர்களை சட்டத்துக்கு முன் நிறுத்த வேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஜெப்ரி அழகரட்ணம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். இதற்கான நடவடிக்கைகளை சட்டமா அதிபரும் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளும் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார். நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையீடுகளை மேற்கொள்ளும் வகையிலேயே இந்த தாக்குதல் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.**

## தொடர்ந்தும் 5000 ஏக்கர் காணி படையினரிடம் - காத்திருக்கும் மக்கள்



இராணுவத்தினர் தொடர்ந்தும் 5000 ஏக்கர் காணிகளை வைத்திருப்பதாக இந்திய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. 1990ம் ஆண்டு முதல் இதுவரையில் இராணுவத்தினர் இவ்வாறு 5000ஏக்கர் காணிகளைவைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவற்றில் பெரும்பகுதியானவை உயர் பாதுகாப்பு வலயங்களாகும் என குறிப்பிடப்படுகிறது.

படையினர் எவ்வளவு காணிகளை வைத்திருக்கின்றார்கள் என்பது பற்றிய சரியான தகவல்கள் அதிகாரிகள் வெளியிட விரும்பவில்லை. காணிகளை வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் படைத்தரப்பினரை இந்த வாரத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியும், பிரதமரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவும் காணிகளை மீள ஒப்படைப்பதில் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

## டிப்பர் வாகனத்துடன் மோதி குதிரை பலி



நுவரெலியா நகர பகுதியில் வெளிநாட்டு உள்நாட்டு உல்லாச பயணிகளுக்கு மற்றும் வசந்த காலங்களில் பயன்படுத்தி வந்த குதிரை ஒன்று டிப்பர் ரக வாகனத்தில் மோதுண்டு உயிரிழந்துள்ளது. இவ்விபத்து வெள்ளிக்கிழமை காலை 5 மணியளவில் நுவரெலியா பதுளை பிரதான வீதியில் நுவரெலியா நகரப்பகுதியில் இவ்விபத்து நேர்ந்துள்ளது.

நானு ஓயாவிலிருந்து கண்டி நோக்கி சென்ற டிப்பர் ரக வாகனத்திலேயே இவ்வாறு மோதுண்டு உயிரிழந்துள்ளது. வாகனத்தின் வேகத்தை சாரதி கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவே திடீரென எதிரே வந்த குதிரையை இவ்வாறு மோதியுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவ்விபத்தின் போது வாகனத்திற்கும் சேதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மஸ்கெலிய வியாபாரிகளுக்கும் பொது மக்களுக்கும் முக்கிய வேண்டுகோள்

ஏமாற்றுகாரர்களிடமிருந்து மஸ்கெலிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எனக் கூறி கையடக்க தொலைபேசி மூலம் ஏனைய தொலைபேசி மூலம் பணம் அல்லது பொருட்கள் கேட்பதாக மஸ்கெலிய பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளது. ஆகையால் இதற்கு பிறகு தொலைபேசி மூலம் பணம் அல்லது பொருட்கள் கேட்டால் பொருட்களை கொடுக்க முன் கீழ் காணும் தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுகொள்கிறோம் என மஸ்கெலிய பொலிஸ் நிலைய பொறுப்பதிரி துண்டுபிரசுரங்கள் வழங்கியுள்ளார். தொலைபேசி இலக்கங்கள்: 071-8591126 அல்லது 052-2277222.

**செ.தி.பெருமாள்**
**(மஸ்கெலியா நிருபர்)**

### 903 வெளிநாட்டவர்கள் கடந்த வருடத்தில் கைது

இலங்கைக்கு சுற்றுலா வீசாவில் வந்து பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டவர்கள் 903 பேர் கடந்த வருடம் கைதுசெய்யப்பட்டனர். இந்த தகவலை பொதுமக்கள் ஒழுங்குத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க இதனை தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், சீனா, அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, எகிப்து, நோர்வே, நெதர்லாந்து, பிலிப்பைன்ஸ் மற்றும் சவூதி அரேபியாவை சேர்ந்தவர்களே கைதுசெய்யப்பட்டனர்.

**02ஆம் பக்கத் தொடர்ச்சி...**

அந்த காரணத்தினால் தான் மஹிந்த ராஜபக்ஷவினை விட மைத்திரியினது ஆட்சி சிறந்தது என்றும் அதனை செயற்படுத்துவதற்கு காலங்கள் தேவை எனவும் கூறிவருகின்றோம். எமது அரசியல் அணுகுமுறைகளை தவறாக எண்ணுபவர்கள் பிழையெனவும், சரியாக எண்ணுபவர்கள் சரியெனவும் விளங்கிக்கொள்கின்றார்கள். இன்றைய காலகட்டத்தில் அரசியல் நகர்வின்படி செல்லவேண்டிய தேவை எமக்கிருக்கிறது. அதன்படியே நாம் எமது அரசியல் காய்நகர்த்தல்களை மேற்கொள்கின்றோம்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் இடம்பெறும்பொழுது தற்போதைய அரசின் பலமும் பலவீனமும் தெரியவரும். இனவாதம் பேசுகின்ற சந்திரிக்கா, ரணில், மஹிந்த ராஜபக்ஷ இன்னும் பல அமைச்சர்கள் தமிழினம் என்னவானாலும் என்ன? என்ற ஒரு நிலைப்பாட்டிலேயே அவர்களது செயற்பாடுகள் அமைகின்றது. தமிழினத்தின் விடிவிற்காக போராடிய போராளிகளை நாம் மதித்துநடக்கவில்லை எனக்கூறுவது தவறு. போராட்ட காலத்தில் தமிழரசுக்கட்சியின் பங்களிப்பு எவ்வாறிருந்தது என்பது பற்றி அனைவருக்கும் நன்கு தெரியும்.

ஆகவே மைத்திரியின் அரசு அடுத்த கட்டமாக என்னசெய்யப்போகின்றது. இவர்கள் தமிழ் மக்களுக்கு என்ன சொல்லப்போகின்றார்கள். இவர்கள் சொல்வதை நாம் ஓரளவாவது செவிமடுத்து செயற்படுத்திவரும்பொழுது அடுத்து எமக்கிருக்கும் பாரிய தேவைகளை மைத்திரியின் அரசில் பெற்றுக்கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையுடனேயே த.தே.கூட்டமைப்பின் செயற்பாடுகளும் அமையப்பெற்றுள்ளது. ஆகவே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினை சின்னாபின்னமாக்குவதற்கு தமிழ் அரசியல்வாதிகள் துணைபோக வேண்டாம் என்பதையே நாம் வலியுறுத்திக்கூறுகின்றோம்.

போராட்டம் மாறலாம். இலட்சியம் மாறக்கூடாது என்ற பிரபாகரனின் கருத்து தமிழ்மக்களின் மத்தியில் தாரகமந்திரமாக பதிந்துள்ளது. ஒரு சிறந்த தலைவன் ஒருபோகும் அடிமையாக அல்லது விலைபோகமாட்டான் என்பதைப்போன்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு விலை போகாது. தமிழ்மக்களுடைய அபிலாசைகளை வென்றெடுத்து செயற்படும். மைத்திரியின் நல்லாட்சியில் எமது அணுகுமுறை சிறந்ததுபோன்று தெரியும். ஆனால் அனைத்து விடயங்களும் சிறிது சிறிதாக நடைமுறைப்படுத்துப் பட்டுக்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.




## ஷங்கரை நெருங்கிய லோரன்ஸ்



ராகவா லோரன்ஸ் இயக்கத்தில் சமீபத்தில் வெளிவந்த காஞ்சனா 2 தமிழ்நாடு முழுவதும் சக்கைப்போடு போட்டது. இந்நிலையில் கடந்த 2 வாரத்துக்கு முன்பு தெலுங்கு பதிப்பு வெளியாகி ஆந்திராவிலும் நல்ல வரவேற்பை பெற்றது. தெலுங்கு பதிப்பில் இந்த மூன்று வாரத்தில் கிட்டத்தட்ட ரூ. 17.6 கோடி வசூல் செய்துள்ளது.

எந்திரன், ஐ படத்திற்கு பிறகு தெலுங்கு மிகப்பெரிய வசூலை ஈட்டிய படம் என்றால் காஞ்சனா 2 தான் என்று அங்குள்ள விநியோகஸ்தர் நிசாம் தெரிவித்தார். ஏற்கனவே தமிழ்நாட்டில் எந்திரன் வசூலுக்கு ஈடாக காஞ்சனா 2 வசூல் செய்கிறது என்று குறிப்பிட்டு இருந்தோம். ஆக மொத்தத்தில் படத்தின் வசூலை வைத்து பார்க்கும் போது ஷங்கரை நெருங்கி விடுவார் போல ராகவா லோரன்ஸ்.

## பிரபுதேவாவை இயக்க போகும் விஜய்



தற்போது பொலிவூட் வட்டாரத்தில் சூப்பர் ஹிட் படங்களை கொடுத்து கலக்கி கொண்டிருப்பவர் நம்ம பிரபுதேவா.வெகு விரைவில் ஒரு முழுநீள ஹீரோவாக இவரை வைத்து ஒரு புதிய படத்தை இயக்க இருக்கிறார் இயக்குனர் விஜய். இப்படத்தை பிரபுதேவாவே தயாரிக்க போவதாக செய்திகள் அடிபடுகிறது.

மேலும் இப்படத்துக்கான முதல் கட்ட பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளதாக பொலிவூட் வட்டாரத்தில் சொல்லப்படுகிறது. ஏற்கனவே பிரியதர்ஷனிடம் உதவி இயக்குனராக பல ஹிந்தி படங்களில் பணிபுரிந்துள்ளார் இயக்குனர் விஜய்.


## சந்தோஷத்தில் மாஸ் படக்குழு




வெங்கட் பிரபு இயக்கத்தில் சூர்யா, நயன்தாரா, பிரேம்ஜி மற்றும் பலர் நடித்திருக்கும் படம் மாஸ். வித்தியாசமான கதையம்சத்துடன் உருவாகியுள்ள இப்படத்தின் பாடல்கள் அனைத்தும் வெளியாகி ரசிகர்களிடையே அமோக வரவேற்பை பெற்றிருக்கிறது. மே 29ம் திகதி படம் வெளியாகும் என எதிர்ப்பார்க்கப்பட்ட நிலையில், சமீபத்தில் படம் தணிக்கை குழுவினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது தணிக்கை குழுவினர் படத்திற்கு U சான்றிதழ் அளித்துள்ளனர். இதனால் படக்குழுவினர் சந்தோஷத்தில் உள்ளனர், மேலும் படத்தின் ரன்னிங் டைம் 142 நிமிடங்களாம்.

## நோர்வே விருது விழாவில் நடனமாடும் கலக்கல் நடனக்குழு




தமிழ் படங்களை சிறப்பிக்கும் நோர்வே தமிழ் திரைப்பட விழா தமிழர் விருது நிகழ்ச்சி சிறப்பாக சமீபத்தில் நடந்து முடிந்தது. இவ்விழாவில் தவிர்க்க முடியாத காரணத்தால் கலந்து கொள்ள முடியாத சில திரைப்பிரபலங்களுக்காக சென்னை வடபழனியில் உள்ள RKV ஸ்டுடியோவில் மீண்டும் இவ்விழா நடக்கவுள்ளது.

இதில் புகழ்பெற்ற நடனக்குழுவான ARTROBE கலந்து கொண்டு கலக்கவுள்ளது. இதில் Hip-Hop, Bollywood Contemporary, Salsa ஆகிய நடனங்கள் இடம்பெறவுள்ளது. சினி உலகம் ஊடக அனுசரணையில் நடக்கவிருக்கும் இவ்விழாவில் அனைவரும் கலந்து கொண்டு பல கலை நிகழ்ச்சிகளை பார்த்து மகிழலாம்.

## ஜிகர்தண்டா ஹிந்தி ரீமேக்கில் வெடித்த சண்டை



ஜிகர்தண்டா படம் தமிழக ரசிகர்களால் மிகவும் வரவேற்கப்பட்டு தற்போது பொலிவூட் செல்கின்றது. ஆனால், பிரச்சினையே இங்கு தான். இப்படத்தை இயக்குனர் கார்த்திக் சுப்புராஜிடம் அனுமதி வாங்காமல் தயாரிப்பு நிறுவனம் விற்று விட்டதாம். ஏனென்றால் படத்தின் சில காட்சிகளை கட் செய்தால் யு சான்றிதழ் கிடைக்கும் என படம் ரிலிஸின் போது தயாரிப்பாளர் கூற, கார்த்திக் சுப்புராஜ் மறுத்து விட்டாராம்.

இதனால், சில கோடிகள் அவருக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இதை மனதில் வைத்து கொண்டு தான் தன்னை கேட்காமல் படத்தை விற்று விட்டார்கள் என கார்த்திக் சுப்புராஜ் கூறி வருகின்றார்.

## தீவிரவாதிகளுக்கு பிடித்து போன விஸ்வரூபம்



கமல்ஹாசன் நடிப்பு, இயக்கத்தில் வெளிவந்த விஸ்வரூபம் மாபெரும் வெற்றி பெற்றது. இப்படம் வருவதற்குள் பல பிரச்சினைகளை சந்தித்து வந்தது நாம் அனைவரும் அறிந்ததே.சில அமைப்பினர் இந்த படத்தை ரிலிஸ் செய்யவே கூடாது என போர் கொடி பிடித்தனர்.

தற்போது ஒரு தீவிரவாத அமைப்பு இந்த படம் தங்கள் அமைப்பின் தலைவருக்கு மிகவும் பிடித்துள்ளது என கூறியுள்ளனர். ஏனெனில் படம் முடியும் போது தீவிரவாதிகள் அடுத்த Attack இந்தியா என்று தெரிவிப்பார்கள். நாங்கள் இந்தியா வருவதை கமல் உறுதி செய்துவிட்டார், அதனாலேயே இந்த படம் எங்களுக்கு பிடித்துள்ளது என தெரிவித்துள்ளனர்.

## புதிய இசையமைப்பாளர்களுக்கு கைகொடுக்கும் யுவன்



தமிழ் சினிமாவில் பிரபலமான இசையமைப்பாளராக திகழ்பவர் யுவன் ஷங்கர் ராஜா. தனது இசைபயணத்தில் 100 படங்களுக்கு மேல் இசையமைத்து விட்டார். இந்நிலையில் தற்போது ஒரு புது முயற்சி ஒன்றை மேற்கொள்ள போகிறாராம் யுவன். அதாவது புதிய இசைக் கலைஞர்களை தனது நிறுவனம் மூலம் அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் யுவன் 1 ரெக்கார்ட்ஸ் என்ற பெயரில் இசை நிறுவனம் ஒன்றையும் மற்றும் Youtube Channel ஒன்றையும் தொடங்கியுள்ளார்.

இதில் தனது தனித்திறமை அல்பங்களை மட்டுமில்லாமல் மற்ற சில இசைக்கலைஞர்களின் அல்பத்தையும் வெளியிட உள்ளாராம். இதன் மூலம் பல புதுமுக இசைக்கலைஞர்களை உருவாக்க போகிறாராம்.

## ஹொலிவூட்டிலும் கால் பதிக்கப்போகும் தனுஷ்



தனுஷ் தனது திறமையால் சிறிது காலங்களிலேயே புகழின் உச்சிக்கு சென்றவர். இவர் நடிப்பது மட்டுமில்லாது, பாடுவது, பாடல் எழுதுவது, தயாரிப்பது என பல வேலைகளை செய்து வருகிறார். கேன்ஸ் பட விழா சமீபத்தில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. அதில் ஏராளமான திரைப்பிரபலங்கள் கலந்து கொண்டனர். அந்த விழாவில் பேசிய பிரபல தயாரிப்பாளரான மார்ஜனே சத்ரபி, அவருடைய அடுத்த படத்தின் தகவலை வெளியிட்டிருந்தார்.

அப்போது அவர், Romain Puertolas's என்ற நாவலை தழுவி ஒரு புதிய படம் உருவாக இருக்கிறது. அதில் முக்கிய வேடமான Fakir கதாபாத்திரத்தில் நடிக்க தென்னிந்திய நடிகர் தனுஷிடம் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது என்று கூறியுள்ளார்.

## விஜய் சேதுபதிக்கு வில்லனான பார்த்திபன்



பார்த்திபன் தற்போது மீண்டும் பிஸி இயக்குனர் ஆகிவிட்டார், இருந்தாலும் மாஸ் படத்தில் ஒரு முக்கியமான கதாபாத்திரம் என்பதால் நடிக்க சம்மதித்துள்ளார். அதேபோல் தற்போது விஜய் சேதுபதி நடிக்கும் நானும் ரவுடி தான் படத்தில் வில்லனாக நடிக்கவுள்ளார்.

இவர் சம்மந்தப்பட்ட காட்சிகள் புதுச்சேரியில் எடுக்கப்பட்டுள்ளது. தனுஷ் தயாரிக்கும் இப்படத்தின் பர்ஸ்ட் லுக், டீசர் விரைவில் வெளிவரும் என கூறப்படுகின்றது.

## காதல்+காமத்தை கையில் எடுத்த ஜனநாதன்



தமிழ் சினிமாவிற்கு என்றும் புரட்சிகரமான கதைகள் கொண்ட படத்தை கொடுப்பவர் எஸ்.பி.ஜனநாதன். இவர் சமீபத்தில் தமிழகத்தின் முன்னணி வார இதழ் ஒன்றில் பேட்டியளித்துள்ளார். இதில் இவரிடம் தன் அடுத்த படத்தை பற்றி கேட்டுள்ளனர். இதற்கு இவர் 'அடுத்த படத்தை நிச்சயம் காதலை மையமாக வைத்துதான் எடுக்கபோகிறேன்.

காதலும் காமமும் வாழ்வில் எப்படி இருக்க வேண்டும் என்பதை அந்தபடம் பிரதிபலிக்கும். பெரியார், மார்க்ஸ் போன்ற பெரியவர்கள் படுக்கையறையில் இருந்துதான் தத்துவங்கள் பிறப்பதாக பதிவு செய்துள்ளார்கள். காதலும் காமத்தையும் வைத்து வித்தியாசமான பார்வையில் அந்த படம் இருக்கும்.' என கூறியுள்ளார்.

## சண்டைக்கோழியில் அக்ஷரா ஹாசன் நடிக்கிறாரா?



மணிரத்னத்தின் கடல் படம் மூலமாக தமிழ் சினிமாவிற்குள் அறிமுகமாகி இருந்தவர் அக்ஷரா ஹாசன். ஆனால் சில காரணங்களால் அந்த படத்தில் நடிக்க முடியவில்லை. எனவே ஷமிதாப் என்ற பொலிவூட் படத்தில் தன்னுடைய முதல் படத்தில் நடித்திருந்தார் அக்ஷரா.

தற்போது இவர் லிங்குசாமி இயக்க இருக்கும் சண்டைக்கோழி இரண்டாம் பாகத்தில் விஷாலுக்கு ஜோடியாக நடிக்க இருப்பதாக கூறுப்படுகிறது. இது பற்றி லிங்குசாமி கூறுகையில், சண்டைக்கோழி இரண்டாம் பாகத்தில் நாயகியாக நடிக்க அக்ஷராவிடம் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது என்று கூறியுள்ளார்.

## அஜித்துக்கு ஆதரவாக பவன் கல்யான் ரசிகர்கள்

தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகர் அஜித், இவரை போலவே ஆந்திராவில் மிகப்பெரிய ரசிகர்கள் வட்டம் உள்ளவர் பவன் கல்யாண்.இந்நிலையில் அஜித் நடித்த என்னை அறிந்தால் படம் இன்று தெலுங்கில் டப்பிங் செய்யப்பட்டு ரிலிஸாகவுள்ளது. இதை கொண்டாடும் விதத்தில் வழக்கம் போல் ரசிகர்கள் டுவிட்டரில் வுயப ஊசநயவந செய்து கலக்க ஆரம்பித்து விட்டனர்.

இது மட்டுமின்றி பவன் கல்யான் ரசிகர்கள் அஜித்திற்கு ஆதரவாக பேனர் வைத்து தங்கள் ஆதரவுகளை தெரிவித்து வருகின்றனர்.

# கவிதைப் பூங்கா

## புங்குடுதீவு மாணவி வித்தியாவுக்கு...

உன்
வேதனையில்
ஆழமாக சிந்தித்தது
மனம்!

இனியும்
பொறுக்க முடியாது என்று
முடிவெடுத்தது
நெஞ்சு!

விழிகளை
உடைத்துக்கொண்டு
சோகத்தோடு மட்டும்
அல்ல
பெரும்
கோபத்தோடும்
வெளியேறியது
கண்ணீர்!

துயரில்
இன்னும் கொஞ்சம் மெலிந்து
பரப்பளவு குறைந்தது
புங்குடுதீவு!

வானத்தில்
மேகங்களும் கூடிநின்று
செலுத்தியது கண்ணீர்
அஞ்சலி!

நீ
வளர்த்த இலட்சியப்பயிர்
பிடிங்கி எறியப்பட்டிருக்கிறது
புற்களைப்
போல!

உன்
பள்ளிப்பருவத்தின் மேல்
காமுகர்கள் சாத்தி
வைத்திருக்கிறார்கள் மலர்
வளையம்!

நீ
படித்த வகுப்பறையில்
காலியாய் இருக்கிறது
ஒரு நாற்காலி
அதை
திரும்பிப்பார்க்கிற
பொழுதெல்லாம்
மாணவருக்கு உன்னுடைய
ஞாபகங்கள்

முழுமை முடிந்திருக்கிறது
உன் வாழ்க்கை
ஓவியம்
முடிந்தாலும்
அழியப்போவதில்லை
உன் கண்ணீர்
காவியம்

பிள்ளை
வித்தியா!
எவருக்கும்
தெரியாது ஒரு ரகசியம்

உடலைவிட்டு
பிரிந்தபோது நெருப்பாகவே
பிரிந்தது உன் மூச்சு

அந்த நெருப்பு
சும்மாவிடாது
கொழுத்தவேண்டியவர்களை
கொழுத்தும்!

உயிரோவியன்

---

அழகியவளொன்று
கவியெழுதி என்னவளை
செந்தமிழுள் அடக்கினேன்
புழகியவளின்று
பாவியென கருதி என் மனதுள்
அமுல்படுத்தினேன்
வல்லினம் வலிக்குமென்று
மெல்லிடையாள் சிலிர்த்திட
செல்லினத்தில் சொல் தேடினேன்
எதுகை மோனையை
என் எழுத்தில் அவளால்
உறவாய் மாற்றினேன்
புதுமை காண தமிழை
இரவல் வாங்கி தவறா
என் கையெழுத்தாய் ஆக்கினேன்
அ∴றிணை போல் அவள் மீது
அன்பை காட்டினேன்
அவள் வினையறிந்ததும்
என் தவறினை சுட்டிக்காட்டினேன்
கள்ளியவள் என் காதலை
எள்ளி நகையாடியதால்
நள்ளிரவில் தனிமையாகினேன்

---

உந்தன்
செவ்வாயில் சிந்திய
புன்னகையில் தென்றலும்
கரைகிறது
எந்தன் விழிகளை
தாக்கிய மின்னலாய்
என் சிந்தையை
சிதைக்கிறது
மலரும்
புன்னகைக்கும் என்று
உன்னில் தான்
பார்க்கின்றேன்
மனதும்
உயிர் தெறிக்க
உன்னை எண்ணி
பார்க்கின்றேன்
பெண்ணே
நீயுமொரு புன்னகை
"பூ" தானே

---

என் வலியை
வரி வரியாக எழுதுகிறேன்
என் கிளியே
உன் விழிகள் அறிய எழுதுகிறேன்
என் கண்ணீர் அமுததாக
நான் கவியெழுதினால்
உன் கண்ணும்
என் கண்ணீரை குறை கூறும்
ஏதேனும் காரணம் சொல்லி
உன் விம்பம்
என் இமைகளில் நுழைந்து
இதய கதவுகளை தகர்க்கிறதென்றால்
சாத்தியமா என சந்தேகம் கூடும்
பொய் என சொல்லி
ஒன்று மட்டும் சொல்கிறேன்
நான் இறந்து கொண்டிருக்கிறேன்
உண்மையென நீ உணரும் போது
நான் மண்ணறையில்
உறங்கிக் கொண்டிருப்பேன்
உன் நினைவுகளோடு
நீ எனக்காக அழுதிடும் போது...

---

## சகோதரி வித்தியாவுக்கு சமர்ப்பணம்

பள்ளி செல்லும் பருவம்
பால் வடியும் உருவம்
வேறொன்றும் அறியா
வெள்ளைக் கமலத்தை
வேரோடு சிதைத்ததை
எண்ணி கலங்குகிறேன்

நமைப் பெற்றவள் ஒரு பெண்
நமை பேணிக் காப்பவள்
ஒரு பெண் நம்மோடு துணையாய்
கடைசி வரை வருபவள் ஒரு பெண்
என பேதம் தெரியாத ஈனப்பன்றிகள்
இச்சை பசி கொண்ட உனக்கும், பிணம்
தின்னும்
கழுகுக்கும், வித்தியாசம் ஒன்றுமில்லை..!!

மிருகத்தனமான செயல் என்று கூறி
மிருகங்களை அவமதிக்காதீர் !
அவை கற்பையோ, அழிப்பையோ அறியா!
அதிகபட்ச தண்டனையாய்
ஆண்மை அழிக்கப்பட வேண்டும்
இவர்களுக்கு!!
அதுவே, அடுத்த பெண்ணை
தொட்டிழுக்க நினைக்கும்
கயவனுக்கு கற்பிக்கும்...
கற்பென்பது அளிக்கத்தானே தவிர,
அழிப்பதற்கல்ல என்று...

பாஸ்கரன் கதீஷன்

---

உன் காதல் தொட்டு
உள்ளம் மலர்கிறது...
உன் நினைவு தொட்டு
என் இதயம் குளிர்கிறது...
உன் விழிகள் பட்டு
என் மனது அலைகிறது...


அன்பானவனே!
உன் மனதை பரிமாற
காதல் மனுவைக் கொடுத்தேன்
மனையில் தினந்தோறும்
உன் நினைவால் கரைந்தேன்
உன் அன்பு வினையா? வினாவா?
உன் விடைக்காக வரம் கேட்கிறேன்

---

என் இதழ்கள்
மௌன விரதம் இருக்க
என் விழிகள் மட்டுமே
பேசுகிறது
உன்னை நெருங்க
உன் விழிகள்
மொழியும் வரை
இந்த உலகம்
அழியும் வரை
நெருங்கிக் கொண்டேயிருப்பேன்
நீ என்னை விரும்பும் வரை...



# புனைகதைப் புயல்



ஊர்க்கோயிலின் பூசகரிடம் அண்ணனின் ஆத்மாசாந்தியடைய செய்யவேண்டிய கடமைகள் பற்றி கதைத்துவிட்டு போனை கட்செய்து திரும்பியவன் அதிர்ந்து போனான். அம்மா ரவிக்குமாரின் போட்டோவை கடையில் கலண்டர் மாட்டியிருந்த ஆணி யில் கொழுவியிருந்தார். அழகான டியூரோப்பிறேமில் ரவிக்குமார் சிரித்துக்கொண்டிருப்பதை பார்த் ததும் அவனுகே அழுகை தொண்டையை அடைத்தது. ஒருவாறு தன்னை சுதாகரித்துக்கொண்டு வீட்டில் நடப்பவற்றை அவதானித்தான். அம்மா கட்டளைகளை பிறப்பித்துக்கொண்டிருந்தாள்.

“தர்சா தட்டைக்கொண்டு போய் நிறைய பூ ஆஞ்சு வா”

கொள்வாள். இதன்போதெல்லாம் பார்ப்பவர்கள் மனம் வெதும்பும். காலப்போக்கில் மறுமணம் தொடர்பாக பலரும் நெருக்குதல் கொடுத்த போது கூட படத்தை வைத்தே அழுவாள். அதன்பின் ராம் பிள்ளையையும் அவளையும் பார்ப்பதாக கூறி படத்தட்டடியில் வைத்து அவளுக்கு நெற்றியில் குங்குமம் சூட்டிவிட்டபின்னர் அவ்வாறு செய்வதை குறைத்திருந்தாள். ஆனாலும் ராமும் அவளும் சேர்ந்து வாழும் சூழல் மறுக்கப்பட்டதால் , தனி மையிலேயே இருந்தாள். அப்பொழுதெல்லாம் இந்த படத்தை தன்னுடனேயே வைத்திருந்தாள். இடைக்கிடை ஏதாவது மன நெருடலான சம்பவங்கள் ஏற்பட்டால் அந்தப்படத்தை யாரும

செய்து வருவியளோ...?”

“என்ன நான்... செய்யாம... ஏன் இப்படிக்கேக்குறீங்க...”

“இல்லை... அது. எனக்கு ஒரு படம் கொப்பி கழுவி... லெமினேற்றிங் செய்து தரவேணும்.”

“அதுக்கென்ன சின்ன வேலை...”

“பிறகு ஆரட்டையும் குடுத்து விடுறயில்லை உடனையே எடுத்து வர வேணும்.”

“என்னிலை இன்னும் நம்பிக்கையில்லாம சொல்லுறீங்க நான் தமிழுக்கும் உங்களுக்குமாக தானிருக்கிறன்.”

தொடர் -90

கடித்தாள். அவளின் மன தில் நிரம்பியிருந்த ஆசைகள் வெளிப்பட்டன. ஆயினும் தன்னைக்கட்டுப்படுத்தி உணர் வுகள் வரம்பு மீறாது விலத்திக்கொண்டாள்.

“கடவுளே என்னை காப்பாத்து....”

என்று அவனும் அப்பாவியாக கூறினான். அன்று அவளிடம் வாங்கியவன் திருப்பி கொடுக்கவேயில்லை. அவள் கேட்டது போல கொப்பி செய்து லெமினேற்றிங் செய்து கொண்டு வந்து அவளுக்கு காட்டினான். பார்க்க கொடுக்கும் போது,

# முள்ளிடை முகிழ்த்த மலர்

## அன்னக்கிளி



“ஓமம்மா...”

என்று கூறி தாமதியாது தட்டுடன் நகர்ந்தாள். அண்ணனை படத்தில் பார்த்ததும்அவளுள்ஏற்பட்டதுயரம் ஓவென கத்திவெளிப்படுத்தப்படாத போதும் முகம் இருண்டு போயிருந்தது. அது அவளது நடையிலும் வெளிப்பட்டது.

கணவனின் படத்தை நீண்ட நாட்களின் பின்னர் பார்த்ததால் அவளுள் ஏற்பட்ட அளவற்ற துயரை தாங்க முடியாது அப்படியே முற்றத்திலிருந்த ஜாம் மரத்துடன் சாய்ந்திருந்தாள். இந்தப்படம் மட்டும்தான் வதனாவிடமிருந்தது. அவனைப்பிரிந்த காலம் முதல் இதைத்தான் வைத்துப் பார்த்துப்பார்த்து அழுவாள். தமிழ்பிறந்த போது கூட இதை எடுத்து வைத்து அழுவதும் பிள்ளையின்முன் பிடித்துக்காட்டி...

“இது தான் உங்கட பிள்ளை பாருங்க...”

என்று கூறுவதும்,

“இதுதான் செல்லத்தின்ரை அப்பா... பாருங்க அப்பாக்கு சிரிச்சுக்காட்டி விடுங்க...”

என்று கூறி மனம் நொந்து றியாமல் எடுத்து மார்போடு அணைத்து அழுவாள். இதனை ராம் அவதானித்திருந்தான். படம் அவளது கவலையை குறைக்கும்வடிகாலாகஇருந்ததால் அதனைத்தடுக்க முற்படவில்லை. அதேவேளைஇதனைத்தொடர்ந்து இப்படியே விடக்கூடாது என்ற நிலைப்பாட்டிலிருந்தான். முகா மிலிருந்து மீள்குடியேற்றத்தில் வந்த பின்னர் தான் அண்ணனின் இறுதி முடிவு பற்றிய சரியான தகவலைப்பெற்றான். அதன் பின்னர் எப்படியாவது அவளிடமிருந்து அந்தப்படத்தை வாங்கி விட வேண்டும் என்று பலமுறை முயற்சித்தான். கடை திறந்து வியாபாரத்தில் முன்னேற்றம்கண்டுகொண்டிருந்த போது தான் ஒருநாள் காணா மல் போனவர்கள் தொடர்பான பதிவுக்காகபடம்கேட்டிருந்தார்கள். அதற்கு கூட படம் கொடுத்து விடாத வதனா. ஒரு நாள் ராமி டம்...

“ இனி எப்ப சாமானெடுக்க வவுனியா போறீங்க...”

“நாளையிண்டைக்கு போக வேண்டி வரும்போல கிடக்கு...”

“எனக்கொரு வேலை

அவளுக்கு தன் மீது இன்னமும் சரியான நம்பிக்கையில்லை என்று கூறி கண்கலங்கினான். அவனது கண்ணில் நீர் வருவதை அவதானித்த வதனா,

“ஐயோ... என்ன நீங்க எனக்குத்தான்... நான் இப்ப என்னசொல்லீட்டன் எண்டு....”

அவனது கண்ணீரைத் துடைத்துவிட்டவள் முதன் முதலாக ஆரத்தழுவி முத்தமிட்டாள். நல்ல வேளையாக அன்று வீட்டில் அம்மா அப்பா இல்லாததால் அவர்களுக்கு தடையிருக்கவில்லை. மனம்விட்டு பேசினர். அப்போதுதன்னிடமிருந்த ஒரேயொரு படத்தைக்கொடுத்து,

“இதைத்தான் கொப்பி கழுவி... லெமினேற்றிங் செய்து தரவேணும்.”

“அண்ணாட படத்தை நான் செய்யாம...”

என்று கூறி வாங்கியவன்.

“இந்த படத்தை மட்டுமில்லை அவன் விட்டுட்டு போன எல்லாத்தையும் கவனமாய் பாதுகாப்பன்.”

என்று கூறி அவளது கையில் தட்டினான்.

“பக்குவமாய் வச்சிருக்கிறது மட்டும் தானோ...”

அவனைக் கிண்டல்செய்யும் வகை யில் கேட்டாள்.

“ஓ... வேறை....”

“அப்பசரி....”

என்று கிண்டல டித்து பின்பக்கத்தால் அவனைக்கட்டிப்பிடித்து காதோ ரம் முத்தமிட்டவள் இலேசாக

“இது என்னட்டை இருக்கட்டும் பாத்திட்டு டயறீக்கை வையுங்கோ நீங்க அண்ணான்ரை படத்தை பாத்து அழுகிறதை பாத்தனான். நானிருக்கேக்கை நீங்க அழக்கூடாது. உங்களட்டை இருந்தா பாத்து அழுவீங்க... அதால தான்...”

என்று இழுத்தான். படத்தை பார்த்தவள் தான் சொன்னது போலவே அவன் செய்திருப்பதைப் பார்த்ததும் மகிழ்வாக இருந்தது. அவன் கூறியது சரியாக பட்டது. அப்படியே வைத்து விட்டு,

“கவனமாய் வைச்சிருக்கவேணும் முதலாளி”

என்று கிண்டலடித்தாள். அன்றைக்கு பிறகு அதுபற்றி அவள் கேட்டதில்லை. நீண்டநாட்களின் பின்னர் இப்படிபார்த்ததும் அவளுக்கு ஏதோ அதிர்ச்சியாக இருந்தது. தலை சுற்றியது அத னால் அப்படியே உட்கார்ந்து விட்டாள். நடப்பது எதுவுமே புரியாத தமிழ் தாயின் மடியில் ஒட்டிக்கொண்டிருந்தாள். இடிந்து போய் இருந்த வதனாவை பார்த்த செல்லம்மா என்ன நினைத்தாளோ தெரியவில்லை அவளையும் அப்படியே இருக்கவிடவில்லை,

“பிள்ளை எழும்பு ஆகவேண்டியதை பாக்க வேணும்.....”

என்றுகையைபிடித்துஎழுப்பினாள். அவளுக்கு எதுவுமே புரியவில்லை அப்பாவியாக மாமியாரைப் பார்த்தாள். அவர் கூறிய விடயங்கள் அவளுக்கு புரியவேயில்லை.

அவள் வருவாள்...

# ஆன்மீக உலகம்

## சுவாமி விவேகானந்திரன் சிந்தனைகள்



கடவுளின் திருவுளத்தால் இந்துக்களாகிய நாம் இப்போது நெருக்கடியும் பொறுப்பும் மிக்க இடத்தில் வைக்கப்பட்டு இருக்கிறோம். ஆன்மிக உதவிக்காக வைக்கப்பட்டு இருக்கிறோம். ஆன்மீக உதவகிக்காக மேலை நாடுகள் நம்மை நாடி வந்து கொண்டிருக்கின்றன. மனித வாழ்வின் அடிப்படைப் பிரச்சினைகளில் உலக மக்களுக்கு ஒளி காட்டுகின்ற தார்மீகப் பொறுப்பு பாரதத் தாயின் பிள்ளைகளிடம் உள்ளது. அதற்குத் தகுதி படைத்தவர்களாகத் தங்களை ஆக்கிக் கொள்ள வேண்டிய கடமை அவர்களுக்கு உள்ளது.

நாம் ஒவ்வொன்றிலும் முக்கியம் மற்றும் முக்கியமற்ற பகுதிகளுக்கு இடையிலுள்ள வேறுபாட்டைத் தெரிந்து கொள்ள வேண்டும். முக்கியமானவை என்றும் இருப்பவை(வேதம்). முக்கியமற்றவை (ஸ்மிருதி)ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே பயன்படுபவை. அவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு நீக்கப்பட்டு, முக்கியமானவற்றால் நிரப்பப்படவில்லை என்றால், கட்டாயமாக அவை ஆபத்தானவையாகிவிடும்.

ரிஷித்துவம் என்பது ஒரு குறிப்பிட்ட யுகத்திற்கோ, காலத்திற்கோ, நெறிக்கோ, ஜாதிக்கோ, சொந்தமானதல்ல உண்மை உணரப்பட்ட வேண்டும் என்கிறார் வாத்ஸ்யாயனர். எனவே நீங்கள், நான் மற்றும் இங்குள்ள ஒவ்வொருவருமே ரிஷிகளாவதற்காக அழைக்கப்பட இருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நமக்கு நம்பிக்கை வேண்டும். நாம் அனைவரும் உலகத்தை அசைப்பவர்களாக மாறியாக வேண்டும், ஏனெனில் எல்லாம் நம்மிடமே உள்ளது.

ஆன்மீகம் என்பதை நாம் நேருக்கு நேராகக்கண்டாகவேண்டும், அனுபவிக்க வேண்டும், அதன் மூலம் அது பற்றிய நமது சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளவேண்டும். அதன்பின்னர் ரிஷித் துவமாகிய அந்தப்பேரொளியில் திளைக்கும்போது, நாம் ஒவ்வொருவரும் மகத்தானவர்களாக இருப்போம். அப்பொழுது நம் உதடுகளிலிருந்து வெளிவருகின்ற ஒவ்வொரு வார்த்தையும் இணையற்ற பாதுகாப்பை அள்ளி வழங்குவதாக இருக்கும். அப்பொழுது யாரையும் நிந்திக்க வேண்டிய அவசியமே இல்லாமல், யாரையும் திட்ட வேண்டிய தேவையே இல்லாமல், இந்த உலகத்தில் யாருடனும் சண்டையிடும் அவசியமும் இல்லாமல் நம் முன்னர் தீமைகள் தாமாகவே மறைந்து போகும். சொந்த முக்திக்காகவும், பிறரது முக்திக்காகவும் இங்குள்ள ஒவ்வொருவரும் அத்தகைய ரிஷித்துவத்தை அடைய கடவுள் நமக்கு உதவுவாராக.

காலம் செல்லச்செல்ல ஸ்மிருதிகளில் கூறப்பட்ட விதிகள் மறைந்து கொண்டே போகும். மகான்கள் வருவார்கள். அவர்கள் சமுதாயத்தை மாற்றி,இன்னும் நல்ல பாதைகளிலும் காலத்திற்குத் தேவையான கடமைகளிலும் வழிகளிலும் சமுதாயத்தைச் செலுத்துவார்கள். இத்தகைய நிலை இல்லையெனில் சமுதாயம் வாழ்வது என்பது முடியாமல் போய்விடும் . இவ்வாறு நம்முடைய வழியை இந்த இரண்டு ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

இதன் பொருள் என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கான போதிய பரந்த மனமும் அதேவேளையில் ஆழ்ந்த நம்பிக்கையும் இங்குள்ள ஒவ்வொருவரிடமும் இருக்கிறது என்று நான் நம்புகிறேன், எதையும் விலக்காமல் அனைத்தையும் ஏற்றுக்கொள்வது என்பதையே நான் குறிப்பிடுகிறேன்.

கொள்கைவெறியரின் தீவிரமும் லௌகீகரின் பரந்த நோக்கும் வேண்டுமென்று விரும்புகிறேன். கடல்போல் ஆழ்ந்து, எல்லையற்ற வானம் போல் விரிந்துள்ள இதயமே நமக்கு வேண்டும். உலகிலுள்ள வேறெந்த நாட்டினரைவிடவும் முற்போக்குடன் இருப்போம் அதே வேளையில் நாம் நமது பரம்பரைப் பண்பில் நம்பிக்கையுடனும் பற்றுடனும் மாறாமல் நிலைத்திருப்போம். எவ்வாறு இப்படி இருப்பது என்பது இந்துக்களுக்குத் தான் தெரியும்.

வேதங்கள் மனிதனின் இயல்பை அடிப்படையாகக் கொண்டது. மனிதனின் இயல்பை ஆதாரமாகக் கொண்டுள்ளதால் மனிதன் வாழும்வரை இந்த உண்மைகளும் மாறவே மாறாது. அவை எல்லா காலங்களுக்கும் உரியவை, எல்லா இடங்களுக்கும் பொதுவானவை, உலகம் தழுவியவை.

ஆனால் ஸ்மிருதிகள் பொதுவாக வட்டாரச் சூழ்நிலைகளையும், அங்கு நிலவுகின்ற பல்வேறான சூழ்நிலைகளின் காரணமாக எழுகின்ற கடமைகளைப் பற்றியுமே கூறுகின்றன. இவை கால ஓட்டத்தில் மாறுதல்களுக்கு உள்ளாகின்றன. ஆனால் ஏதோ ஒரு சிறிய சமுதாய வழக்கம் மாறுவதால் உங்கள் மதமே அழிந்துவிடப்போவதில்லை, அப்படி ஒரு போதும் நடக்காது. இதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். அந்தப் பழக்க வழக்கங்கள் ஏற்கனவே மாறிக் கொண்டிருப்பவை என்பதை மறக்காதீர்கள்.

மாட்டிறைச்சி தின்னாத பிராமணன், பிராமணனே அல்ல என்று கருதப்பட்ட காலம் ஒன்று முன்பு இதே இந்தியாவில் இருந்தது. சன்னியாசியோ அரசனோ அல்லது யாராவது மகானோ வீட்டுக்கு வந்தால் ஆடும் காளையும் கொல்லப்பட்ட விபரங்களையும், ஆனால் பயிர்த்தொழில் செய்யும் இனமாகிய நாம், மிகச்சிறந்த காளைகளைக் கொல்வது இறுதியில் நம் இனத்தின் அழிவிற்கே வழிவகுக்கும் என்பதைக் காலப்போக்கில் உணர்ந்து கொண்டதையும் நாம் வேதங்களில் படிக்கிறோம்.

எனவே பசு வதைக்கும் எதிராகக் குரல்கள் எழுந்தன. அந்த வழக்கம் நிறுத்தப்பட்டது.

கொடிய வழக்கங்கள் என்று இப்போது நாம் கருதுகின்ற பல பழக்கங்கள் முன்பு சமுதாயத்தில் நிலவியதையும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நாம் பார்க்க முடிகிறது. காலப்போக்கில் வேறு விதிகளை உருவாக்க நேர்ந்தது. இந்த விதிகளும் காலப்போக்கில் மறையும். உடனே புதிய விதிகள் தோன்றவும் செய்யும். எனவே வேதங்கள் எல்லா காலங்களிலும் ஒன்றே. அவை நிலையானவை ஸ்மிருதிகள் காலத்திற்குக் காலம் மாறுபவை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நமது சாஸ்திரங்கள் இரண்டு வகையான உண்மைகளைக் கூறுகின்றன. ஒன்று, மனிதனின் அழியாத இயல்பை அடிப்படையாகக் கொண்டது. இறைவன் ஆன்மா, இயற்கை - இவற்றுக்கிடையிலான மாறாத உறவைப்பற்றி ஆராய்கிறது. மற்றொன்று, வட்டாரச் சூழ்நிலைகள், காலச் சூழ்நிலைகள், குறிப்பிட்ட அந்தக் காலத்தின் சமுதாய அமைப்புகள் முதலியவற்றைப் பற்றியதாக உள்ளது. முதல்வகை உண்மைகள் பெரும்பாலும் நமது சாஸ்திரங்களான வேதங்களில் கூறப்பட்டுள்ளன.

## நபிகளின் பொன்மொழிகள்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: குர்ஆனை ஓதுகின்ற(நல்ல)வரின் நிலை யானது எலுமிச்சை போன்றதாகும். அதன் சுவையும் நன்று! வாசனையும் நன்று! (நல்லவராக இருந்து) குர்ஆன் ஓதாமல் இருப்பவர், பேரீச்சம் பழத்தைப்போன்றவராவார். அதன் சுவை நன்று அதற்கு வாசனை கிடையாது. தீயவனாகவும் இருந்து கொண்டுகுர்ஆனை ஓதி வருகின்றவனின் நிலை துளசிச் செடியின் நிலையை ஒத்து இருக்கின்றது. அதன்வாசனை நன்று, சுவையோ கசப்பு! தீமையும் செய்து கொண்டு குர்ஆனையும் ஓதாமல் இருப்பவனின்நிலை குமட்டிக்காயின் நிலையை ஒத்திருக்கின்றது. அதன் சுவையும் கசப்பு, அதற்கு வாசனையும் கிடையாது. அறிவிப்பவர்: அபூ மூஸா அஷ்அரீ (ரலி) நூல்: புகாரி 5020

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்கள் வளைந்த எலும்பு போன்றவர்கள். அதனை நிமிர்த்த முயன்றால் அதனை உடைத்து விடுவாய். அந்த வளைவு இருக்கும் நிலையிலேயே அவளை விட்டு விட்டால் அவளிடம் இன்பம் பெறுவாய் என்று நபிகள் நாயகம் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூ/ஹுரைரா (ரலி) நூல்: புகாரி 3331, 5184, 5186

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:தன் அன்பளிப்பைத்திரும்பப் பெறுபவன் வாந்தியெடுத்த பிறகு, அதை மீண்டும் தின்கின்ற நாயைப்போன்றவன் ஆவான். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி) நூல் : புகாரி (2589)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உங்களில் ஒருவரது வாசலில் ஆறு ஒன்று (ஓடிக் கொண்டு) இருக்கிறது. அதில் அவர் தினமும் ஐந்து தடவை குளிக்கின்றார் அவரது மேனியிலுள்ள அழுக்குகளில் எதுவும் எஞ்சியிருக்குமா? எனக் கூறுங்கள்' என்று நபித்தோழர்களிடம் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். 'அவரது அழுக்குகளில் சிறிதளவும் எஞ்சியிராது' என நபித்தோழர்கள் கூறினர். 'இது ஐவேளைத் தொழுகைகளின் உவமையாகும். இதன் மூலம் அல்லாஹ் (சிற-ிய) பாவங்களை அகற்றுகிறான்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூ/ஹுரைரா (ரலி) நூல்கள்: புகாரீ 528, முஸ்லிம் 1071

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "கஞ்சனுக்கும் தர்மம் செய்பவனுக்கும் உதாரணமாவது, மார்பிலிருந்து கழுத்து வரை இரும்பாலான அங்கிகள் அணிந்த இரு மனிதர்களைப் போன்றதாகும். தர்மம் செய்பவர் தர்மம் செய்யும் போதெல்லாம் அவருடைய அங்கி விரிந்து விரல்களை மறைத்துக் கால்களை மூடி, தரையில் இழுபடும் அளவுக்கு விரிவடையும். கஞ்சன் செலவு செய்யக் கூடாது என்று எண்ணும் போதெல்லாம் அவ்வங்கியின் ஒவ்வொரு வளையமும் அதற்குரிய இடத்தை நெருக்கும் அவன் அதை விரிக்க முயன்றாலும் அது விரியாது" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அ/ஹுரைரா (ரலி), நூல்: புகாரி 1443, 1444, 5797

## உன்னதப்பாட்டு

தோட்டங்களுக்கு நீரூற்றும் ஜீவ தண்ணீரின் துரவும் லீபனோனிலிருந்து ஓடிவரும் வாய்க்கால்களும் உண்டாயிருக்கிறது.

வாடையே எழும்பு! தென்றலே வா! கந்தப்பிசின்கள் வடிய என் தோட்டத்தில் வீசு! என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக!

என் சகோதரியே! என் மணவாளியே! நான் என் தோட்டத்தில் வந்தேன். என் வெள்ளைப்போளத்தையும் என் கந்தவர்க்கங்களையும் சேர்த்தேன். என் தேன்கூட்டை என் தோனோடு புசித்தேன். என் திராட்சரசத்தை என் பாலோடும் குடித்தேன். சிநேகிதரே! புசியுங்கள்! பிரியமானவர்களே! குடியுங்கள்! பூர்த்தியாய்க் குடியுங்கள்!

நான் நித்திரை பண்ணினேன். என் இதயமோ விழித்திருந்தது. கதவைத் தட்டுகிற என் நேசரின் சத்தத்தைக்கேட்டேன். என் சகோதரியே. என் பிரியமே. என் புறாவே. என் உத்தமியே. கதவைத் திற. என் தலை பனியினாலும் என் தலைமயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது என்றார்.

என் வஸ்திரத்தைக் கழற்றிப்போட்டேன். நான் எப்படி அதைத் திரும்பவும் உடுப்பேன். என் பாதங்களைக் கழுவினேன். நான் எப்படி அவைகளைத் திரும்பவும் அழுக்காக்குவேன் என்றேன்.

என் நேசர் தமது கையைக் கதவுத் துவாரத்தின் வழியாய் நீட்டினார். அப்பொழுது என் உள்ளம் அவர் நிமித்தம் பொங்கினது.

என் நேசருக்குக் கதவைத்திறக்க நான் எழுந்தேன். பூட்டின கைப்பிடிகள்மேல் என் கைகளிலிருந்து வெள்ளைப்போளமும் என் விரல்களிலிருந்து வாசனையுள்ள வெள்ளைப்போளமும் வடிந்தது.

என் நேருக்குக் கதவைத் திறந்தேன். என் நேசரோ இல்லை. போய்விட்டார். அவர் சொன்ன வார்த்தையால் என் ஆத்துமா சோர்ந்துபோயிற்று. அவரைத் தேடினேன். அவரைக் காணவில்லை. அவரைக் கூப்பிட்டேன். அவர் எனக்கு மறுஉத்தரவு கொடுக்கவில்லை.

நகரத்தில் திரிகிற காவலாளர் என்னைக் கண்டு என்னை அடித்து என்னைக் காயப்படுத்தினார்கள். அலங்கத்தின் காவற்காரர் என்மேலிருந்த என் போர்வையை எடுத்துக்கொண்டார்கள்.

எருசலேமின் குமாரத்திகளே. என் நேசரைக் கண்டீர்களானால் நான் நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன் என்று அவருக்குச் சொல்லும்படி உங்களை ஆணையிடுகிறேன்.


ஸ்தீரிகளுக்குள் ரூபவதியே. மற்றநேசரைப்பார்க்கிலும் உன் நேசர் எதினால் விசேஷித்தவர்? நீ இப்படி எங்களை ஆணையிட, மற்ற நேசரைப்பார்க்கிலும் உன் நேசர் எதினால் விசேஷித்தவர்?

என் நேசர் வெண்மையும் சிவப்பு மானவர். பதினாயிரம்பேர்களில் சிறந்தவர்.

அவர் தலை தங்கமயமாயிருக்கிறது. அவர் தலைமயிர் சுருள் சுருளாயும் காகத்தைப்போல் கருமையாயுமிருக்கிறது.

அவருடைய கண்கள் தண்ணீர் நிறைந்த நதிகளின் ஓரமாய்த் தங்கும் புறாக்கண்களுக்கு ஒப்பானவைகளும் பாலில் கழுவப்பட்டவைகளும் நேர்த்தியாய்ப் பதிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது.

அவர் கன்னங்கள் கந்தவர்க்கப்பாத்திகளைப்போலவும் வாசனையுள்ள புஷ்பங்களைப்போலவுமிருக்கின்றது. அவர் உதடுகள் லீலிபுஷ்பங்களைப் போன்றது. வாசனையுள்ள வெள்ளைப் போளம் அதிலிருந்து வடிகிறது.



# அறிவியல் உலகம்




## வாழ்நாள் ஒன்லைன் சேமிப்பு வசதியை தரும் Dripbit



அவசியமான கோப்புக்களைஒன்லைனில் சேமித்தல் மற்றும் பேக்கப் செய்தல் போன்ற சேவைகளை பல்வேறு இணைய நிறுவனங்கள் வழங்கிவருகின்றன. இவ்வாறான சேவையை வழங்கும் நிறுவனங்களுள் ஒன்றான Dripbit ஆனது 54.99 டொலர்களுக்கு வாழ்நாள் முழுவதுமான சேமிப்பு மற்றும் பேக்கப் செய்யும்வசதியினை வழங்குகின்றது. 1TB சேமிப்பு வசதி தரப்படுகின்ற போதிலும் வாழ்நாள் முழுவதும் இச்சேவையைப் பயன்படுத்தக்கூடியதாக இருத்தலே சிறப்பம்சமாக காணப்படுகின்றது. இவைதவிர கோப்புக்களை தரவிறக்கம் செய்யாது ஒன்லைனில் வைத்து எடிட் செய்தல், வேகமான சேவை, அதி உயர் பாதுகாப்பு, எந்தவொரு இணைய உலாவி மூலமாகவும் கோப்புக்களை கையாளுதல் மற்றும் தரவிறக்கம் செய்யக்கூடியவாறு இருத்தல், iOS, Android, Windows அப்பிளிக்கேஷன்களில் பயன்படுத்தக்கூடியவாறு இருத்தல் போன்ற வசதிகளும் காணப்படுகின்றன.

## அதிரடி அம்சங்களுடன் அறிமுகமாகும் Meizu MX4 கைப்பேசி



Meizu எனும் ஸ்மார்ட் கைப்பேசி வடிவமைப்பு நிறுவனமானது Ubuntu இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட MX4 எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ளது. முதன் முதலாக சீனாவில் அறிமுகம் செய்யப்படும் இக்கைப்பேசியானது 5.4 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய HD தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், Octa Core Media Tek MT6595 Processor மற்றும்பிரதான நினைவகமாக 2GB RAM ஆகியவற்றினைக் கொண்டுள்ளது.

மேலும் 20 மெகாபிக்சல்களை உடைய பிரதான கெமராவினை உள்ளடக்கியுள்ள இக்கைப்பேசியானது சீனாவினை அடுத்து ஐரோப்பிய நாடுகளிலும் விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

## ஏழு வகையான பதிப்புக்களாக ஒரே நேரத்தில் வெளியாகும் விண்டோஸ் 10




மைக்ரோசொப்ட் நிறுவனம் விண்டோஸ் 10 இயங்குதளத்தின் ஒரிஜினல் பதிப்பினை விரைவில் அறிமுகம் செய்யவுள்ள நிலையில் பல்வேறு புதிய தகவல்கள் வெளியாகிய வண்ணம் உள்ளன. இதன்படி கடந்த வாரம் விண்டோஸ் 10 இயங்குதளமே விண்டோஸ் தொடரின் இறுதி இயங்குதளமாக இருக்கும் என்ற தகவல் வெளியாகியிருந்தது. இந்நிலையில் தற்போது விண்டோஸ் 10 இயங்குதளமானது ஒரே நேரத்தில் 7 வகையான பதிப்புக்களாக வெளியாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெவ்வேறு சாதனங்களை அடிப்படையாகக் கொண்டு Home, Mo bile, Pro, Enterprise, Education, Mo bile Enterprise மற்றும் IoT எனும் 7 பதிப்புக்களாக இவ் இயங்குதளம் வெளிவரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலகை ஆட்டிப்படைக்கப் போகும் ரோபோக்கள்

தற்போது உள்ள இயந்திர காலகட்டத்தில் எந்திர அறிவியல் என்பது முக்கிமான நிலையை எட்டியிருக்கிறது.எந்திர அறிவியல் (Robotics) என்பது me chanical engineer ing, electrical engi neering மற்றும் computer science ஆகிய பொறியியல் பகுதியால் ரோபோக்களுக்கு வடிவமைப்பு, கட்டுமானம், செயற்பாடு மற்றும் பயன்பாடு ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

மனிதனுடைய வேலைகளில் தற்போது ரோபோக்களின் பங்கு அதிகமாக இருப்பதால் இது தொடர்பான ஆராய்ச்சிகள் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. இவை அனைத்தும் மனிதனின் செயற்பாடுகளை கொண்டதாகவே தயாரிக்கப்படுகிறது.

பேரழிவின் போது மனிதர்களை மீட்பது, தீவிரவாதிகளின் சதித்திட்டத்தை முறியடிப்பது, வெடிகுண்டுகளை செயலிழக்க வைப்பது, உளவு பார்ப்பது போன்ற சேவைகள் முதல் மனிதர்களுக்கு உதவியாக வீட்டு வேலை செய்வது வரை அனைத்திற்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்படுகிறது.

## ரத்த சிவப்பணுக்களை அதிகரிக்கும் கிஸ்மிஸ்பழம்

‘கிஸ்மிஸ் பழம்’ என்று அழைக்கப்படும் உலர் திராட்சையில் உடலுக்கு வலிமை தரும் சத்துக்கள் நிறைந்துள்ளன. திராட்சைப் பழ வகைகளிலேயே உயர்தரமான திராட்சைப் பழங்களைப் பதம் செய்து உலர்த்தி பெறப்படுவதுதான் இந்த கிஸ்மிஸ் பழம். இதில் அதிக அளவு சுக்ரோஸ், ப்ரக்டோஸ் நிறைந்துள்ளது. மேலும், விட்டமின்களும், அமினோ அமிலங்களும் காணப்படுகின்றன.

ரத்தத்தில்ஹீமோகுளோபின் அளவுகுறைவாக இருப்பவர்கள் உலர் திராட்சையை உட்கொண்டால் ரத்தசோகை குணமாகும். இதில் உள்ள தாமிரச்சத்துக்கள் ரத்தத்தில் சிவப்பணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும். மஞ்சள் காமாலை நோய் உள்ளவர்கள் தினசரி இருவேளைஉலர்திராட்சையைசாப்பிட்டு வர காமாலை நோய் குணமடையும். உலர் திராட்சைப் பழத்தில் 50 பழங்களை எடுத்து சுத்தம் செய்து பசுவின் பாலில் போட்டு காய்ச்சி ஆற வைத்து, பழத்தை சாப்பிட்டு விட்டு பாலை குடித்தால் காலையில் மலச்சிக்கல் பிரச்சினை சரியாகும். இதில் உள்ள கல்சியம் சத்து எலும்பு மற்றும் பற்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

குழந்தைக்கு பால் காய்ச்சும் போதும் அதில் இரண்டு பழத்தை உடைத்துப் போட்டு காய்ச்சிய பின் பாலை வடிகட்டிக் கொடுத்தால், தேக புஷ்டி உண்டாகும். குழந்தை திடமாக வளரும். மூல நோய் உள்ளவர்கள் தினசரி உணவுக்குப் பின்னர் காலையிலும், மாலையிலும் 25 உலர்திராட்சைப் பழங்களை தொடர்ந்து 7 நாட்கள் சாப்பிட்டு வந்தால் குணம் பெறலாம்.

## புதிய தொழில்நுட்பத்தில் QR Code




Quick Response எனப்படும் விரைவான செயற்பாட்டினை சாத்தியப்படுத்தும் தொழில்நுட்பமான QR Code தற்போது புதிய பரிணாமத்தை எட்டியுள்ளது. அதாவது இதுவரை காணப்பட்ட தொழில்நுட்பத்தில் புள்ளி உருவான படங்கள் காணப்படும், ஆனால் தற்போது புள்ளிகள் அற்றதும், புகைப்படங்களை அடிப்படையாகக் கொண்டதுமான QR Code இனை உருவாக்க முடியும்.

Visualead நிறுவனத்தினால் இம்மாத ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இத் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட QR Code சேவையினை 500,000 வரையானவர்கள் இதுவரை பயன்படுத்தி வருகின்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## HTC அறிமுகம் செய்யும் புதிய ஸ்மார்ட் கைப்பேசி



HTC One M9+ எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ளதாக அந்நிறுவனம் கடந்த மாதம் தெரிவித்திருந்தது. இந்நிலையில் முதன் முறையாக சீனா மற்றும் இந்தியாவில் இக்கைப்பேசியை வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

5.2 அங்குல அளவு, 2560 x 1440 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ள இக்கைப்பேசியானது 2.2GHz வேகத்தில் செயற்படவல்ல Octa Core MediaTek MT6795T Processor, பிரதான நினைவகமாக 3GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது.

இவற்றுடன் 20 மெகாபிக்சல்களை உடைய பிரதான கெமரா, 4 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்பினை ஏற்படுத்துவதற்கான கெமரா, 2840 mAh மின்கலம் என்பனவும் தரப்பட்டுள்ளன.

## இசைக்கு ஏற்றாற்போல் தீயாய் நடனம் ஆடும் ஸ்பீக்கர்



இசைக்கு ஏற்றாற்போல் பற்றி எரியும் ஸ்பீக்கர் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. கணனியில் இசைக்கு ஏற்றபடி மாறும் பிம்பங்கள் ஏற்கனவே பழக்கமான ஒன்று. ஆனால் ‘சவுண்ட் டோர்ச்’ எனப்படும் நவீன ஸ்பீக்கரில் கிடைக்கும் அனுபவம் புதுமையாக இருக்கிறது.

இசைக்கு தகுந்தாற்போல் ஒரு தாளலயத்தோடு எரியும் ஸ்பீக்கரின் அழகு இசையை மறந்துவிட்டு அந்த தீயின் நடனத்தை ரசிக்க வைக்கிறது. இதன் விலை 160 டொலர். எளிதில் சார்ஜ் செய்யும் பேட்டரியால் இந்த வயர்லெஸ் ஸ்பீக்கர் இயங்குகிறது. Danish Kickstarter என்ற அமைப்பு இதனை தயாரித்துள்ளது.

## வந்துவிட்டது ஸ்மார்ட் வளையம்



ஸ்மார்ட்போனை பொக்கெட்டிலோ அல்லது கைப்பையிலோ சைலன்ட் மோடில் வைத்துவிட்டால் எந்த அழைப்பு வந்தாலும் தெரியாது. முக்கிய போன் அழைப்புகளை எடுக்க முடியாதபட்சத்தில், அதனால் பல சிக்கல்கள் ‘வரலாம். அல்லது தொழில் வாய்ப்புகளைக்கூட இழக்க நேரிடலாம். அதற்குத் தீர்வு சொல்கிறது இந்த ஸ்மார்ட் வளையம். இதை கையில் அணிந்து கொண்டால் ஸ்மார்ட்போனில் அழைப்பு வரும் நேரத்தில் கையில் அதிர்வுகள் மற்றும் சமிக்கைகள் கொடுக்கும். கையில் அணியும் பேண்ட் போல இருப்பதால் இதை பேஷன் நகை போல அணிந்து கொள்ளலாம்.

## நிம்மதியான தூக்கத்தை கெடுக்கும் “சிப்ஸ்”



நொறுக்குத்தீனிகளுள் ஒன்றான சிப்ஸ் காரம், உப்பு என பலவகை சுவைகளில் இருக்கும். இதனை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள், குறிப்பாக இரவு நேரங்களில் தூக்கம் வராமல் இருக்க வேண்டும் என்பதற்காக இதனை ருசிப்பவர்கள் ஏராளம்.


ஆனால், இரவு நேரத்தில் இதனை சாப்பிடுவதால் ஆழ்ந்த தூக்கத்தை பாதிக்கும் என ஆய்வில் தெரியவந்துள்ளது. இரவு நேரத்தில் சாப்பிடுவதால், கருவிழி அசைவு குறைகிறது. சராசரியாக ஒரு நாளுக்கு ஆண் என்றால் 1600 கலோரியும், பெண் என்றால் 1400 கலோரியும் உணவு தேவை. இதில் 25 சதவீதத்துக்கு குறைவாக கொழுப்புச்சத்து கொண்ட உணவாக இருக்க வேண்டும். ஆனால் 10 துண்டு ‘சிப்ஸ்’ சாப்பிட்டால் அதில் 4 கிராம் கொழுப்புச்சத்து உள்ளது. அதாவது 36 கலோரி சேர்கிறது. தினமும் ஏராள மாக ‘சிப்ஸ்’ சாப்பிடுவதால் சராசரியாக 40 கிராம் கொழுப்பும், 360 கலோரியும் உடலில் சேர்கிறது.

இதனால் மொத்த கலோரி 2 ஆயிரமாக அதிகரிக்கிறது. நாள் முழுவதும் சாப்பிடும் உணவில் கொழுப்புச்சத்து அதிகமாக இருந்தாலும், இரவில் ஆழ்ந்த உறக்கத்தை கெடுக்கும். இதனுடன் இரவு நேரத்தில்சாப்பிடுவதால்கொழுப்புச்சத்து அதிகரித்து தூக்கத்தை கெடுக்கிறது.

ஒருவருக்கு சராசரியாக ஒரு நாளைக்கு 8 மணி நேரம் தூக்கம் தேவை. நல்ல தூக்கம் இல்லாததால் மறுநாள் பகல் பொழுதில் வழக்கமான செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. சிந்தனைத்திறன் குறைதல், கவனம் சிதறுதல்,ஞாபக மறதி போன்றவை ஏற்படுகின்றன. அதனால் நல்ல இனிமையான ஆழ்ந்த இரவு தூக்கத்தை பெற வேண்டுமானால் சிப்ஸ் சாப்பிடுவதை தவிர்த்துவிடுங்கள்.

# விளையாட்டு உலகம்

## கடலுக்கு அடியில் மைதானம்



துபாயில் உலகின் ஆழமான டென்னிஸ் மைதானம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கடல் மட்டத்துக்கு அடியில் மிகப்பெரிய கண்ணாடி குடுவை போன்று அமைத்து, அதில் டென்னிஸ் மைதானம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. போட்டி நடக்கும் போது பார்வையாளர்கள் கடலுக்கு அடியில் மற்றும் கடல் மட்டத்துக்கு மேல் இருந்தும் மீன்களை கண்டு களிக்கலாம்.

இதை போலந்து கட்டட கலை நிபுணர் கிரிஸ்டப் கோட்டாலா, 30, வடிவமைத்துள்ளார். இத்திட்டத்தை நிறைவேற்றத் தேவையான நிதி உதவியை, உள்ளூர் வீரர்கள் மற்றும் பல்வேறு நபர்களிடம் இருந்து அவர் எதிர்பார்த்துள்ளார். துபாயில் பர்ஜ் அல் அராப் ஹொட்டலின் மேல் பகுதியில் உலகின் மிக உயரமான (650 அடி) டென்னிஸ் மைதானம் அமைந்துள்ளது. தற்போது இந்த ஹொட்டலுக்கு அருகில் உலகின் ஆழமான டென்னிஸ் மைதானம் அமையவுள்ளது.


## ஜிம்பாப்வே அணிக்கு பலத்த பாதுகாப்பு கொடுக்கும் பாகிஸ்தான்



பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் ஜிம்பாப்வே அணிக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த 2009ம் ஆண்டு பாகிஸ்தான் சென்ற இலங்கை அணி மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 8 பேர் உயிரிழந்தனர். அதிஷ்டவசமாக, இலங்கை விளையாட்டு வீரர்கள் காயமின்றி தப்பினர். இந்த சம்பவத்துக்கு பிறகு கடந்த 6 ஆண்டுகளில் எந்த ஒரு நாடும் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செய்யவில்லை. இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்திற்கு டி.வி., ஒளிபரப்பு வருமானம் உட்பட பல்வேறு வகைகளில் ரூ.760 கோடி வரை இழப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் நீண்ட இடைவெளிக்குப் பின் ஜிம்பாப்வே அணி பாகிஸ்தான் செல்ல சம்மதித்தது. இரு அணிகள் பங்கேற்கும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் லாகூரில் நடக்கவுள்ளது. தங்கள் நாட்டுக்கு வரும் ஜிம்பாப்வே வீரர்களுக்கு எந்த ஒரு அசம்பாவிதமும் நடைபெற்று விடக்கூடாது என்பதில் பாகிஸ்தான் அரசு கவனமாக இருக்கிறது. இதற்காக மொத்தம் 3000 பொலிசார் பாதுகாப்புக்காக நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் ஹொட்டல் மற்றும் மைதானங்களில் பாதுகாப்பிற்கு அமர்த்தப்படுகிறார்கள். மேலும், ஹெலிகொப்டர் மூலம் பொலிசார் பாதுகாப்பு ரோந்து பணியில் ஈடுபட இருக்கிறார்கள். தவிர இத்தொடருக்காக ரூ. 6.33 கோடி வரை பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் செலவு செய்வதாக தகவல் வெளியாகியுள்ளது.

## டென்னிஸ் வீரருக்கு 6 ஆண்டுகள் சிறை



அவுஸ்திரேலிய முன்னாள் டென்னிஸ் வீரர் போப் ஹெவிட் மீதான கற்பழிப்பு குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது 75 வயதாகும் போப் ஹெவிட் டென்னிஸில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு தென் ஆபிரிக்காவின் பயிற்சியாளராக பணியாற்றினார். அப்போது 1980, 1990ஆம் ஆண்டுகளில் கற்பழிப்பு போன்ற சம்பவங்களில் ஈடுபட்டதாக அவர் மீது வழக்கு தொடரப்பட்டது.

மேலும், கடந்த மார்ச் மாதம் நடந்த விசாரணையில் இரண்டு கற்பழிப்பு மற்றும் ஒரு பலாத்கார தாக்குதலில் இவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இவருக்கு 6 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. போப் ஹெவிட் 1960 முதல் 1967 வரை டென்னிஸ் விளையாட்டில் கொடிகட்டி பறந்தார். 1967க்குப் பிறகு தென் ஆபிரிக்காவில் குடியேறினார். இவர் கிராண்ட் சிலாம் போட்டிகளான அவுஸ்திரேலிய ஓபன், பிரெஞ்ச் ஓபன், விம்பிள்டன் ஓபன், அமெரிக்க ஓபன் ஆகியவற்றில் பலமுறை சம்பியன் பட்டம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆட்டநாயகன் விருதை மன்தீப்சிங்க்கு கொடுத்த டிவில்லியர்ஸ்




பெங்களூர் அணியின் அதிரடி ஆட்டக்காரர் டிவில்லியர்ஸ் தனக்கு கொடுக்கப்பட்ட ஆட்டநாயகன் விருதை சகவீரர் மன்தீப்சிங்க்கு அளித்துள்ளார். ஐபிஎல் தொடரில் ராஜஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் பெங்களூர் அணி 2 விக்கெட் இழந்து தவித்த போது, ஜோடி சேர்ந்த டிவில்லியர்ஸ்-மன்தீப்சிங் அதிரடியாக விளையாடினர். இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடி 113 ஓட்டங்கள் சேர்த்தனர். இதனால் பெங்களூர் அணி 180 ஓட்டங்கள் குவித்து ராஜஸ்தான் அணிக்கு நெருக்கடி கொடுத்தது.

டிவில்லியர்ஸ் 66 ஓட்டங்களும் (38 பந்து, 4 பவுண்டரி, 4 சிக்சர்), மன்தீப்சிங் 54 ஓட்டங்களும் (34 பந்து, 7 பவுண்டரி, 2 சிக்சர்) எடுத்தனர். இதில் டிவில்லியர்ஸ் ஆட்டநாயகன் விருது வென்றார். ஆனால் அந்த விருதை அவர் மன்தீப்சிங்குக்கு வழங்கினார். இதுகுறித்து அவர் கூறுகையில், நான் கடந்த 2 இன்னிங்சில் சரியாக விளையாடவில்லை.

எப்படி 180 ஓட்டங்கள் வந்தது என்று தெரியவில்லை. இந்தப் போட்டியில் மன்தீப் சிங் ஆட்டம் சிறப்பாக இருந்தது. ஆட்டநாயகன் விருது அவருக்கு உரியது. அடுத்து சென்னையை எதிர்கொள்கிறோம். சென்னை அணிக்கு எதிராக எப்படி விளையாட வேண்டும் என்பதை அறிந்து வைத்துள்ளோம் என்று கூறியுள்ளார்.

**இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியில் எழுந்த பாலியல் லஞ்சம் தொடர்பான விசாரணை அறிக்கை விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்கவிடம் கொடுக்கப்பட்டுள்ளது.**

## எனது வெற்றிக்கு பின்னால் இருக்கும் காதலி – உருகும் ஸ்டீவ் சுமித்



மனதளவில் போட்டியை எதிர்கொள்ள தனது காதலி டேனி வில்லிஸ் தனக்கு பெரிதும் உதவியாக இருப்பதாக ராஜஸ்தான் வீரர் ஸ்டீவ் சுமித் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவின் இளம் வீரரான ஸ்டீவ் சுமித் (25), இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அசத்தினார். தற்போது ஐபிஎல் தொடரில் ராஜஸ்தான் அணியில் ஆதிக்கம் செலுத்தி வருகிறார். இந்நிலையில் நிருபர்களின் கேள்விக்கு ஸ்டீவ் சுமித் பதிலளிக்கையில், ஆலோசகராக உள்ள டிராவிட்டின் அனுபவம் அனைவருக்கும் உதவியாய் இருக்கிறது. எங்கள் அனைவருக்கும் அவர் ரோல் மொடல். அவரிடம் இருந்து நிறைய கற்றுக் கொள்கிறோம். அதேபோல் சஞ்சு சாம்சன், ஹூடா உள்ளிட்ட திறமையான இந்திய வீரர்கள் அணியில் உள்ளனர். இதனால் களமிறங்கும் 'லெவன்' அணியை தெரிவு செய்வது கடினமாக உள்ளது என்று தெரிவித்துள்ளார். மேலும், தனது காதலி டேனி வில்லிஸ் பற்றி கூறுகையில், டேனி வில்லிஸ் சட்டத்துறை மாணவி. நான் எங்கு சென்று விளையாடினாலும், என்னுடன் வந்து விடுவார்.

ஒவ்வொரு போட்டிக்கு முன்பும், மனதளவில் என்னை சிறப்பான முறையில் தயார் செய்வார். போட்டிகளின் போது ஏற்படும் நெருக்கடிகளை குறைக்க உதவியாக இருப்பார். பயிற்சியின் போது உதவியாக இருந்தாலும், அதிக விடயங்களில் தலையிட மாட்டார். அதிகமாக விமர்சிக்க கூட மாட்டார் என்று தெரிவித்துள்ளார்.

## பீட்டர்சனுக்கு ஆப்பு வைத்த அலிஸ்டர் குக்



கெவின் பீட்டர்சனுக்கு இங்கிலாந்து அணியில் இடம் மறுக்கப்பட்டதன் பின்னணியில் அலிஸ்டர் குக் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக இங்கிலாந்து ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. இங்கிலாந்து அணியில் மீண்டும் இடம்பெற சர்ரே உள்ளூர் அணிக்காக விளையாடி பீட்டர்சன் முச்சதம் அடித்து அசத்தினார். இருப்பினும் கெவின் பீட்டர்சனை மீண்டும் அணியில் தெரிவு செய்யும் வாய்ப்பில்லை என்று இங்கிலாந்து அணிக்கு இயக்குனராக நியமிக்கப்பட்ட ஆண்ட்ரூ ஸ்ட்ராஸ் அவரது ஆசைக்கு முடிவு கட்டினார்.

இந்நிலையில் இதன் பின்னணியில் இங்கிலாந்து அணித்தலைவர் அலிஸ்டர் குக் இருப்பதாக 'தி டெலிகிராப்' ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அதில் கூறப்பட்டுள்ளதாவது:- "பீட்டர்சன் மீண்டும் அணியில் தெரிவு செய்யப்பட்டால் அணித்தலைவர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவிக்குமாறு இங்கிலாந்து கிரிக்கெட் வாரியத்துக்கு குக் தெரிவித்ததாக கூறப்படுகிறது. மேலும், பீட்டர்சன் தனது புத்தகத்தில் அலிஸ்டர் குக்பற்றி கூறிய கடும்விமர்சனங்கள்மற்றும் டிவிட்டரில் பீட்டர்சன் ஆதரவாளர்கள் குக் மீது வைத்த விமர்சனங்கள் ஆகியவை பீட்டர்சன் மீது வெறுப்பு உண்டாக காரணமாகி விட்டதாக கூறப்படுகிறது.

அது மட்டுமல்லாது குக் மீதான டிவிட்டர் விமர்சனங்கள் குக் மனைவி ஆலீஸையும் கண்கலங்கச் செய்துவிட்டது என்றும் கூறப்படுகிறது. எனவே நியூசிலாந்து, ஆஷஸ் தொடரை மனதில் கொண்டு பீட்டர்சனா, குக்கா என்ற முடிவில் இயக்குனர் ஸ்ட்ராஸ் குக் பக்கம் முடிவெடுத்துள்ளார்." இவ்வாறு அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## நடுவர் தர்மசேனாவுடன் மோதல் - தினேஷ் கார்த்திக்கு அபராதம்



நடுவர் தர்மசேனாவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பெங்களூர் வீரர் தினேஷ் கார்த்திக்கு போட்டிக் கட்டணத்தில் இருந்து 20 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஐதராபாத்-பெங்களூர் அணிகள் மோதிய ஆட்டம் மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் இந்தப் போட்டி 11 ஓவர்களாக குறைக்கப்பட்டது. இந்த ஆட்டத்தின் 10வது ஓவரில் மீண்டும் மழை பெய்ய தொடங்கியது. கடைசி ஓவரில் மழையின் வேகம் அதிகரித்த போதும் நடுவர்கள் போட்டியை நிறுத்தாமல் தொடர்ந்து நடத்தினர். இதனால் ஸ்டார்க் வீசிய 11வது ஓவரில் இயான் மார்கன் அடித்த பந்தை களத்தடுப்பில் இருந்த பெங்களூர் அணித்தலைவர் கோஹ்லி பிடிக்க தடுமாறினார். இதனால் ஆத்திரமடைந்த கோஹ்லி, கடைசி ஓவர் முடிந்ததும் நடுவர் தர்மசேனாவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இவரை தொடர்ந்து, விக்கெட் கீப்பர் தினேஷ் கார்த்திக்கும் விவாதம் செய்தார். சிறிது நேரத்தில் கோஹ்லி தனது வாக்குவாதத்தை நிறுத்திக் கொண்டு பெவிலியன் திரும்பினார். ஆனால் விக்கெட் கீப்பர் தினேஷ் கார்த்திக் தொடர்ந்து தர்மசேனாவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இது தொடர்பாக போட்டி நடுவரிடம் புகார் அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நடந்த விசாரணையில் தினேஷ் கார்த்திக் ஐபிஎல் விதிமுறை லெவல் 1ஐ மீறியதாக அவருக்கு சம்பளத்தில் இருந்து 20 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டது.

## மீண்டும் வருகிறார் ஹர்பஜன் சிங்

வங்கதேசத் தொடருக்கான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் அணி யூன் 7ல் வங்கதேசம் செல்கிறது. இங்கு ஒரு டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இந்தத் தொடரின் முதல் போட்டி யூன் 10ம் திகதி தொடங்கவுள்ளது. இதற்கான இந்திய அணியை சந்தீப் படேல் தலைமையிலான தெரிவுக்குழு அறிவித்தது. இதில் முன்னணி சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங், டெஸ்ட் அணியில் இடம்பெற்றுள்ளார். இவர் கடைசியாக, கடந்த 2013ல் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஐதராபாத்தில் நடந்த டெஸ்டில் விளையாடினார்.

டோனி டெஸ்டிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதால், விக்கெட் கீப்பராக சகா அறிவிக்கப்பட்டுள்ளார். டெஸ்ட் போட்டியை விராட் கோஹ்லி வழிநடத்துகிறார். தவான், புஜாரா, ரோஹித், ரஹானே, அஷ்வின் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர். ஆனால் ஜடஜாவுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

# உலகச் செய்திகள்

## புதிய தலைமுறைக்காக பெண்களை வேட்டையாடும் தீவிரவாதிகள்



புதிய தலைமுறையை உருவாக்க போகோஹராம் தீவிரவாதிகள் முயற்சி செய்து வருகிறார்கள் என்று நைஜீரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நைஜீரியாவில் ஒரு குறிப்பிட்ட அரசை உருவாக்க வலியுறுத்தி போகோஹராம் தீவிரவாதிகள் தொட்ர்ந்து நாசவேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். குறிப்பாக சிறுமிகளையும், பெண்களையும் அவர்கள் கடத்துவதோடு, ராணுவம்மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் நைஜீரிய ராணுவத்துடன் அண்டை நாடுகளான நைஜர், கேமரூன் நாடுகளின் ராணுவமும் ஈடுபட்டு வருகிறது. சமீபத்தில் நைஜீரிய ராணுவம், தீவிரவாதிகளிடமிருந்து சாம்பிசா வனப்பகுதியில் இருந்து 200 பெண்கள் மற்றும்93 சிறுமிகளை மீட்டனர். பெண்கள் அனைவரும் தீவிரவாதிகளால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு உள்ளனர். அறையில் அடைத்து வைக்கப்பட்டு தீவிரவாதிகளால் கொடூரமான முறையில் சீரழிக்கப்பட்டு உள்ளனர். மீட்கப்பட்டு உள்ள பெண்களில் பலர் கர்ப்பமாக உள்ளனர் என்று மீட்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டதை அதிகாரிகள் மற்றும் மீட்பு குழுவினர் விவரிக்கையில், கிராமப்புற மக்கள் மீது தீவிரவாதிகள் செலுத்திய ஆதிக்கம், போகோஹராம் தீவிரவாத இயக்கத்தின் புதிய தலைமுறையை உருவாக்கவும் வாய்ப்பு உள்ளது என்று குறிப்பிட்டு உள்ளனர்.

பெண்கள் கர்ப்பம் அடைய வேண்டும் என்பதற்காகவே கொடூரச்சம்பவங்களும் அரங்கேறி உள்ளது என்று தெரிவித்துள்ளனர். தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 25 வயது பெண் ஒருவர் பத்திரிகை ஒன்றிற்கு அளித்துள்ள பேட்டியில், அவர்கள் என்னை திருமணம் செய்துகொண்டனர். நான் இப்போது 4 மாதம் கர்ப்பமாக உள்ளேன். குழந்தைக்கு தீவிரவாதிகளே அப்பா ஆவார்கள் என்று கூறியுள்ளார்.

## ஹெராயின் ஊசி போட சொன்ன அதிகாரி – ஒப்புக்கொண்ட விலைமாது



கூகுள் நிறுவன நிர்வாணி மரணமடைந்த வழக்கில் பிரான்சை சேர்ந்த விலைமாதுவுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த2013ம் ஆண்டு, கூகுள் நிறுவனத்தில் எக்ஸ் ஆராய்ச்சி கழகத்தின் நிர்வாகி பொரஸ்ட் ஹேய்ஸ் (Forrest Hayes – Age 51) என்பவரும், பிரான்ஸ்சைச் சேர்ந்த விலைமாது அலிக்ஸ் (Alix – Age 27) ஆகிய இருவரும் சொகுசு படகில் ஒன்றாக இருந்துள்ளனர். அப்போது, ஹேய்ஸ் தனக்கு ஊசி மூலம் ஹெராயின் செலுத்துமாறு அலிக்ஸிடம் கேட்டுள்ளார், அவரும் ஹெராயினை ஊசி மூலம் ஹேய்ஸினின் உடம்புக்குள் செலுத்தியுள்ளார். இதில் எதிர்பாராத விதமாக ஹேய்ஸ் மரணம் அடைந்தார், இதனால் அதிர்ச்சி அடைந்த அலிக்ஸ் அவசர உதவிக்கு கூட யாரையும் அழைக்காமல் படகில் இருந்து தப்பி சென்றுவிட்டார். ஆனால் படகில் இருந்த கண்காணிப்பு கெமராவில் மேற்கூறிய சம்பவங்கள் பதிவானது.

அதன் மூலம் அலிக்ஸை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர், இதனைத் தொடர்ந்து அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், குற்றத்தை அலிக்ஸ் ஒப்புக்கொண்டார். இது ஒரு தற்செயலாக நடந்த கொலை என்பதால் 7 ஆண்டுகள் மட்டுமே சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளிமஞ்சாரோ மலை உச்சிக்கு ஏறும் கனேடிய சிறுவன்



கனடாவை சேர்ந்த் கெவின் மொன்சூர் என்ற 10 வயது சிறுவன், கடல் மட்டத்திலிருந்து 5,895 அடிகள் உயரமுடைய தன்சானியாவில் உள்ள கிளிமஞ்சாரோ மலையில் ஏறும் பயணத்தை தொடங்கவுள்ளான். கிளிமஞ்சாரோ மலையில் ஏறுவதற்கு ஒவ்வொரு வருடமும் 15,000 மலை ஏறுபவர்கள் முயற்சித்த போதிலும், அவர்களில் 40 சதவிகிதமானவர்கள் மட்டுமே தங்கள் முயற்சியை பூர்த்தி செய்துள்ளனர். இந்நிலையில் மிசிசாகாவை சேர்ந்த மொன்சூர் என்ற சிறுவன், வரும் யூன் மாதம் 19ம் திகதி தனது பயணத்தை ஆரம்பிக்க உள்ளான். இவன் பயணத்தின் நோக்கம், ஒன்ராறியோவில் உள்ள மஸ்கோகா என்ற இடத்தில் அமைந்துள்ள புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான கோடை முகாமான Camp Oochigeasற்கு 50,000 டொலர்களை சேகரிப்பதே ஆகும்.

இச்சிறுவன் கிளிமஞ்சாரோ மலையின் சிகரத்தை அடைவானேயானால் மொன்சூர் கனடாவின் முதலாவதும், இதுவரைஏறிய இளம்மலைஏறுபவர்களின் வரிசையில்ஐந்தாவது இடத்தைபெறுவான் எனவும் கூறப்படுகிறது. மொன்சூர் தனது தாய் மற்றும் தந்தை ஆகியவர்களுடன் கிளிமஞ்சாரோ ஏறுகின்றான். எவரெஸ்ட் அல்லது K2 மலைகளில் ஏறுவது போன்று இதில் ஏற முடியாதெனவும், பாதுகாப்பான அணுகுமுறை தேவை எனவும் கூறப்படுகிறது. தனது இலக்கை அடைவதற்கு தன் பெற்றோர் மிகவும் உதவியாக இருப்பதாக கூறியுள்ளான்.

## இரத்தம் சொட்ட சொட்ட மனித தலைகளை சுவைக்கும் மக்கள்



நைஜீரியாவில் அதிக விலைக்கு மனித மாமிசத்தை விற்று வந்த ஒரு உணவகத்தை அதிகாரிகள் இழுத்து மூடியுள்ளனர். மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதியில் இயங்கிவந்த அந்த ஹொட்டலில் வேலை செய்பவர்களின் நடவடிக்கைகள் சந்தேகப்படும்படியாக இருப்பதாக பொலிசாருக்கும், சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கும்தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து அந்த ஹொட்டலுக்குள் அதிரடியாக நுழைந்த சுகாதாரத்துறை அதிகாரிகள், 'பப்ஸ்' போன்ற ஒருவகை பலகாரத்தில் மனித மாமிசத்தை கலந்து தயாரிக்கப்படுவதை கண்டுபிடித்தனர்.

அங்குள்ள அலுமாரியில் இருந்த ஒரு பிளாஸ்டிக் கவருக்குள் ரத்தம் சொட்டச் சொட்ட மனித தலைகள் வைக்கப்பட்டிருந்ததை கண்டு திடுக்கிட்ட பொலிசார், அந்த ஹொட்டலில் பணியாற்றும் பத்துக்கும் அதிகமானவர்களை கைது செய்து விசாரித்து வருகின்றனர். நைஜீரியாவில் கூலித்தொழிலாளர்களாக பணியாற்றுபவர்களின் நான்கு நாள் சம்பளத்தை, அந்தமாமிசத்திற்கானவிலையாக அந்த உணவகம் பெற்றுள்ளது. இதுகுறித்து நபர் ஒருவர் கூறுகையில், அந்த உணவகத்தில் சிறிய துண்டு மாமிசம் தான் சாப்பிட்டேன், அதற்கு விலையாக ரூ.217 வாங்கியுள்ளனர் என்று கூறியுள்ளார்.


## கலிபோர்னியாவில் அவரச நிலை பிரகடனம்



தெற்கு கலிபோர்னியாவில் உள்ள ரெபி-கியோ கடல் வழியாக சென்ற எண்ணெய் குழாயில் ஏற்பட்ட கசிவை அடுத்து அப்பகுதியில் அவசர நிலை பிர கடனம் செய்யப்பட்டுள்ளது. பிளைன் ஆல் அமெரிக்கன் பைப்லைன் நிறுவ னம் குழாய் மூலம் அமெரிக்காவின் முக்கிய நகரங்களுக்கு எண்ணெய் சப்ளை செய்து வருகிறது. தெற்கு கலிபோர்னியாவில் உள்ள ரெபுகியோ கடற்கரை பகுதியான லொஸ் பிளோர்ஸில் இருந்து கவியோடா செல்லும் இந்த நிறுவனத்திற்கு சொந்தமான குழாயில் கடந்த செவ்வாயன்று கசிவு ஏற்பட்டது.

இதனால் ரெபுகியோ மாநில கடற்கரை முழுவதும் கச்சா எண்ணெயில் மிதந்தது. சுமார் 94 ஆயிரம் லீற்றர் கச்சா எண்ணெய் கடலில் கலந்திருப்பதால் 9 மைல் தூரத்திற்கு கடல், கச்சா எண்ணையாக காட்சியளிக்கிறது. இந்த விபத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட சாண்டா பார்பரா கடற்கரை பகுதியில் ஆளுநர் அவசரகால நிலையை அறிவித்துள்ளார். இதன் மூலம் மிக விரைவாக அக்கடல் பகுதியில் கலந்துள்ள எண்ணெய் கழிவுகளை அகற்ற முடியும் என ஆளுநர் எட்மண்ட் பிரவுன் தெரிவித்துள்ளார்.

## மர்மமான X-37B விமானத்தை விண்ணில் செலுத்திய அமெரிக்கா



அமெரிக்காவின் மர்மமான X-37B விண்வெளி விமானம் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது. X-37B எனப்படுவது அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட ஆளில்லா ரோபோட்டிக் விமானம் ஆகும். இது அமெரிக்க விமானப் படைக்காக தயாரிக்கப்பட்டது. இவ்விமானம் புவிச் சுற்றுவட்டப் பாதையில் இருந்து வளிமண்டலத்துக்குள் நுழையும் போது தீப்பிடிக்காமல் இருப்பதற்கான வெப்பத்தைத் தாங்கும் உலோகத்தால் ஆனது. இந்த விமானம் கடந்த 2010ம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி ஓர் ரொக்கெட் மூலம் விண்ணில் முதலில் செலுத்தப்பட்டு 2010ம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் திகதி சிறிய சேதத்துடன் புவியில் தரை இறங்கியது. இதுவே அமெரிக்காவின் ரகசிய விண்வெளி திட்டத்தின் முதல் முயற்சியாகும். பின்னர் இண்டாவது முறையாக கேப் கனவெரல் ஏவுதளத்தில் இருந்து 2012ம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் திகதி ஏவப்பட்ட இவ்விமானம் கடந்த ஒக்டோபர் மாதம் தனது பயணத்தை முடித்துக்கொண்டது. இவ்விமானம் 674 நாட்கள் விண்வெளி சுற்றுப்பாதையில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், 20ஆம் திகதி ப்ளோரிடா மாநிலத்தின் கேப் கெனவரெல் வான்படை தளத்திலிருந்து, 15.05 மணிக்கு (இந்திய நேரப்படி காலை 11.05 மணிக்கு) அட்லஸ்-ஏ என்ற ரொக்கெட் மூலம் X-37B விண்ணில் ஏவப்பட்டது. இந்த செயற்கைக் கோள் 'ஹோல் த்ரஸ்டர்' எனும் புதிய தொழில் நுட்பத்திற்கான சோதனை முயற்சி என்று மட்டுமே அமெரிக்க வான்படை தெரிவித்துள்ளது. ஆனால் இவை, நவீன உளவு மற்றும் அதி நவீன ஆயுத விவகாரங்களுக்காக பயன்படுத்தப்படுவதாக சீனா பலமுறை குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிரடி நடவடிக்கையில் பிரான்ஸ்

பிரான்ஸ் நாட்டில் உள்ள சுப்பர் மார்க்கெட்டுகளில் விற்பனை ஆகாத உணவு பொருட்களை தொண்டு நிறுவனங்களுக்கு வழங்குவதுதொடர்பாக பிரான்ஸ் அரசு வாக்கெடுப்பு நடத்தி வருகிறது. நாடுமுழுவதும் உள்ள சுப்பர் மார்க்கெட்டுகளில் விற்பனை ஆகாத உணவு பொருட்கள் வீணாகி வருவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, விற்பனை ஆகாத அதே சமயத்தில் கெட்டுப்போகாத உணவு பொருட்களை அங்குள்ள தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இது குறித்து பேசிய நாடாளுமன்ற உறுப்பினரான Guillaume Garot என்பவர், விற்பனை ஆகாத உணவு பொருட்கள் எந்தவித பயனும் இல்லாமல் குப்பை தொட்டிகளில் கொட்டப்பட்டு வருவது கவலை அளிக்கிறது என்றார். இந்த புதிய திட்டத்தை நடைமுறைபடுத்தியதற்கு பிறகு, சுப்பர்மார்க்கெட்டுகள் அப்பகுதியில் உள்ள தொண்டு நிறுவனங்களுடன் ஒரு உடன்படிக்கையை மேற்கொள்ள வேண்டும். பின்னர், கடைகளில் விற்பனை ஆகாத பொருட்களை தொண்டு நிறுவனங்களுக்கு வழங்குவதன் மூலம் விலங்குகளுக்கு அல்லது விவசாய உரங்கள் தயாரிக்க அவற்றை பயன்படுத்தலாம்.

ஆனால், அரசுநடைமுறைப்படுத்தவுள்ள இந்த திட்டத்திற்கு சில எதிர்மறையான விமர்சனங்களும் எழுந்துள்ளது. அரசன் இந்த திட்டத்தை தவறாக புரிந்துகொண்டு 'காலாவதியான உணவு பொருட்களையும் தங்களிடம் கொடுக்க வாய்ப்புள்ளதால், இதனை தடுக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சில தொண்டு நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. சுப்பர் மார்க்கெட்டுகள் மட்டுமின்றி, ஒவ்வொரு வீடுகளிலும் வீணாகும் உணவு பொருட்களை மாற்று வழிகளில் பயன்படுத்த அரசு முயற்சியை மேற்கொண்டு வருகிறது.

பிரான்ஸ்நாட்டில்மட்டும்ஆண்டுதோறும் ஒவ்வொரு நபரும் சுமார் 20 பில்லியன் யூரோ மதிப்புள்ள 20 முதல் 30 கிலோ எடையுள்ள உணவுபொருட்களைவீணாக குப்பை தொட்டிகளில் கொட்டப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.


# விந்தை உலகம்

## இதயத்தில் கோளாறு என்றால் இனி கவலைப்படத் தேவையில்லை

இதயத்தில் கோளாறு என்றால் இனி கவலைப்படத் தேவையில்லை. ஆமாம்... வந்தாச்சு செயற்கை இதயம்! உடல் முழுவதும் ரத்தத்தை சப்ளை செய்யும் மோட்டார் ரூம் போலவே இதயம் செயற்படுகிறது. இந்த மோட்டார் ரூம் வேலையை ஒரு மெஷினை வைத்தே செய்துவிடலாமே என்று யோசித்த அவுஸ்திரேலிய விஞ்ஞானி டேனியல் டிம்ஸ், இப்போது அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றிருக்கிறார். 1991ல், குயின்ஸ்லேண்ட் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்ட இந்த ஆய்வு இப்போதுதான் நிறைவு பெற்றுள்ளது.

அதிநவீன எலெக்ட்ரோனிக்ஸ் தொழில்நுட்பத்தில் செயற்கை இதயம் ஒன்றை டேனியல் டிம்ஸ் உருவாக்கியிருக்கிறார். இது, நிமிடத்துக்கு 2 ஆயிரம் தடவை சுழன்று உடல் முழுவதும் ரத்தத்தை பாய்ச்சும் திறன் கொண்டது. பரிசோதனை முயற்சியாக ஒரு செம்மறி ஆட்டின் இதயத்தை அகற்றிவிட்டு, இந்த இதயத்தைப் பொருத்திப் பார்த்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள்.

அந்த ஆடு இப்போது ஆரோக்கியமாகவும் உள்ளதால், "அடுத்ததாக மனிதர்களிடம் இதற்கான சோதனை முயற்சி நடைபெறும்" என உற்சாகத்துடன் அறிவித்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள். இதயம் பழுதானால், இனி வண்டிக்கு ஸ்பேர் பார்ட்ஸ் மாற்றுவதுபோல மாற்றிக்கொண்டு, அடுத்த வேலையைப் பார்க்க கிளம்பிவிடலாம். மனித இதயம் போல இந்த எலெக்ட்ரோனிக்ஸ் இதயம் துடிக்காது.



## காதல் பூட்டுகள் திறக்கப்படுகின்றன



அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகர நடை பாதை பாலத்தில் காதலர்கள், தங்கள் காதல் நிறைவேறவேண்டி பூட்டுக்களை தொங்கவிடுவது வழக்கம். பாலத்தில் இப்போது 20 ஆயிரத்துக்கும் அதிகமான பூட்டுக்கள் சேர்ந்துவிட்டன. இதன் எடை தாங்காமல் பாலம் இடிந்துவிடும் ஆபத்து இருப்பதால் அந்த பூட்டுக்களைத் திறந்து அகற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாலத்தின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாக மெல்போர்ன் நகர நிர்வாகம் அறிவித்துள்ளது. பிரான்ஸ் நாட்டு பாரிஸ் நகரிலும் இதே போல காதலர்கள் ஒரு பாலத்தில் பூட்டுக்களை தொங்கவிட்டனர். 7 லட்சம் பூட்டுக்கள் சேர்ந்துவிட்ட நிலையில் அந்தப் பாலம் இடிந்து விழுந்தது குறிப்பிடத்தக்கது.

## திடீரென பொழிந்த சிலந்தி மழை... அதிர்ச்சியில் உறைந்த மக்கள்



அவுஸ்ரேலிய நாட்டில் வானத்திலிருந்து சிலந்திகள் மற்றும் அவற்றின் வலைகள் மழை போல் பொழிந்த சம்பவம் மக்களை பெரும் அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியுள்ளது. அவுஸ்ரேலியாவில் உள்ள Goulburn என்ற சிறிய நகரத்தில் தான் இந்த அதிசய நிகழ்வு நடந்துள்ளது. கடந்த சனிக்கிழமை அன்று பிற்பகலில் கவுல்பர்ன் நகர் ஒதுக்கு புறத்தில் வானம் திடீரென இருண்டுள்ளது.

அப்போது சாலையில் சென்ற நபர்கள் மீது எண்ணற்ற சிலந்தி குட்டிகள், அவற்றின் வலை களுடன் மழை பொழிவது போல் விழுந்துள்ளன. வானத்திலிருந்து திடீரென சிலந்தி மழை பொழிந்ததை கண்ட மக்கள் அதிர்ச்சியடைந்ததுடன், சிலந்திகள் எவ்வாறு மழையாக பொழியும் என்பதற்கான காரணம் தெரியாமல் குழப்பத்தில் ஆழந்தனர். அதே பகுதியை சேர்ந்த Ian Watson என்பவர் கூறுகையில், வீட்டை விட்டு வெளியே வந்ததும் தனது தலை யிலும் தாடியிலும் சிலந்திகள் வலையுடன் விழுந்ததால் அதை எதேச்சையான செயல் என்று நினைத்ததாகவும், ஆனால் சாலையில் உள்ள நபர்களின் தலையிலும் இதே போன்ற காட்சியை பார்த்து அதிர்ச்சி அடைந்ததாக தெரிவித்தார்.

வானத்தை பார்த்தபோது சிலந்தி வலைகள் பறந்து வந்துக்கொண்டிருந்ததையும் அவற்றை பார்ப்பதற்கு பூமியிலிருந்து வானத்திற்கு சுரங்கப்பாதை அமைத்தது போல் காட்சியளித்ததாக தெரிவித்தார். இது குறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறுகையில், கவுல்பர்ன் பகுதி மக்களுக்கு இந்த நிகழ்வு புதிதாக இருக்கலாம். ஆனால், அவுஸ்ரேலியாவின் பிற பகுதிகளில் இந்த நிகழ்வுகள் ஏற்கனவே நடந்துள்ளன என்கின்றனர். சிலந்திகள் மழைக்கு காரணம், அவைகள் கூட்டம் கூட்டமாக நாடு விட்டு நாடு புலம்பெயரும்போது, உயரமான மரங்களை தான் அதிகம் பயன்படுத்துகின்றன. மரத்திற்கு மரம் தாவும்போது, சிலந்திகள் தங்களது வலைகளை பராசூட்களாக பயன்படுத்தி பறக்கின்றன. இதுபோன்ற புலம்பெயர்வு நிகழும்போது, அதிக எண்ணிக்கையிலான குட்டி சிலந்திகளின் முயற்சி தோல்வி அடைந்து பூமியில் விழுகின்றன. இவை தான் மக்களுக்கு சிலந்திகள் மழையாக காட்சியளிக்கிறது. சிலந்திகளின் இனம் ஒவ்வொரு நாட்டிலும் இருப்பதற்கு காரணம், அந்த இனம் ஒவ்வொரு கால கட்டத்திலும் இடம்பெயர்ந்துக் கொண்டே இருக்கும் என ஆராய்ச்சியாளர்கள் விளக்கம் அளித்துள்ளனர்.


















இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 24.05.2015 அன்று வெளியிடப்பட்டது.